161

திருக்கோயில்

OFFICE OF THE STATE EDITOR
102/cu/72
12 SEP 1972

என் கடன்
பணிசெய்து கிடப்பதே

161

மாலை 14] பரிதாபி - ஆவணி, புரட்டாசி, செப்டம்பர் 1972 [மணி 12

திங்கள் வெளியீடு

தமிழ்நாடு அரசி
அறநிலைய ஆட்சித்துறை வெளி

10—8—72 திருமயிலைக் கபாலீச்சுரர் ஆலயத்தில் இந்தியக் குடியரசு தலைவர் மேன்மைதகு V.V. கிரி அவர்கள் பிறந்த நாளையொட்டி ஆளுநர் மேன்மைதகு கே. கே. ஷா அவர்களும், திருமதி மதுபென் ஷா அவர்களும், கோயிலுக்கு வருகை தந்து சிறப்பித்தனர். உடன் இருப்பவர் சென்னைத் துணை ஆணையர் திரு. ஏ. வேங்கடாசலம் B.SC., B.L., அவர்கள்.

பொருளடக்கம்

1. கச்சியப்ப முனிவர் கவிநலம்
2. குடமுழுக்கு விழா வாழ்த்துச் செய்தி
3. தமிழக முதல்வரின் தலைமைக் கவிதை
4. திருமாலின் ஐந்து நிலைகள்
5. எம்பெருமானும் யானையும்
6. மயிலேறும் இராவுத்தன்
7. நற்றமிழ்ப் பெரியரும் கொற்றவேற் கலியனும்
8. திருவிளையாடற் புராணம்
9. சிவஞான சுவாமிகளின் சிறந்த நுண்மாண் நுழைபுலன்
10. திருவிடைமருதூர்த் திருமுறைக் கருத்தரங்கச் சிறப்புரை
11. கட்டுரைகளின் பட்டியல்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புவர்கள் " திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை—34 " என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துக்கொள்ளலாம்.

அல்லது, அவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்



மாலை 14]   பரிதாபி — ஆவணி, புரட்டாசி — செப்டம்பர், 1972   [மணி 12

'கச்சியப்ப முனிவர் கவிநலம்'

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை :

கச்சியப்ப முனிவர் என்பவர், இற்றைக்கு ஏறத்தாழ 180 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த மாபெருங் கவிஞராவர். இவரைக் "கவிராட்சசர்" எனக் கற்றுவல்ல புலவர் பெருமக்கள் பாராட்டிப் புகழ்ந்து போற்றுவர். சிவஞான போதச் சிற்றுரை, பேருரை முதலிய பல பெரு நூல்கள் இயற்றியருளிய மாதவச் சிவஞான சுவாமிகள் அவர்களின் மாணக்கர்களுள் தலைசிறந்தவர் இவரே. இவ்விருவரும், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த சிறந்த சைவ சித்தாந்தச் சான்றோர்களாவார்கள். கந்த புராணம் இயற்றியருளிய கச்சியப்ப சிவாசாரியர், இவரின் வேறுவர்; அவர் இவருக்கு மிகவும் முற்பட்டு வாழ்ந்தவர்.

கச்சியப்ப முனிவர் இயற்றியருளியுள்ள நூல்கள் பல. திருவானைக்காப்புராணம், பூவாளூர்ப் புராணம், விநாயகபுராணம், காஞ்சிப் புராணத்தின் இரண்டாம் காண்டம் ஆகிய பல பெரு நூல்களை இவர் இயற்றியுள்ளார். இவர் தம் நூல்களில், அறிஞர்கள் எல்லோராலும் இனிதெடுத்து மிகப் பெரிதும் பாராட்டப் பெறுவது, செய்யுள் நலங்களிற் சிறந்த திருத்தணிகைப் புராணம் ஆகும்.

தணிகைப் புராணம் :

கச்சியப்ப முனிவரின் நூல்கள் பல வற்றுள்ளும் கலைநலம் பெரிதும் சிறந்தது தணிகைப் புராணம். அந்நூல் புலமையின் பெருஞ் சிகரம் எனப் பிறங்குகின்றது ; கவிதை நலம் கனிந்தது ; சமயக் கருத்துக்கள் நிறைந்தது ; தத்துவ நுண்பொருள்கள் செறிந்தது ; இயற்கை வருணனைகளாலும்,

* திருவாவடுதுறை ஆதீனம் கோமுத்தீசுவர சுவாமி கோயில், குடமுழுக்கு விழாச் சிறப்பு மலருக்காக எழுதப்பெற்றது.

— ஆசிரியர்

800 009
148701
JL
Q2m24, N59TK
N72.14

இனிய உவமைகளினாலும் சைவ சித்தாந்த உண்மைகளை ஆங்காங்கே அழகுற விளக்கிச் செல்வது; சங்க நூல்களின் நடைநலம் சான்றது; கற்பனை வளம் சிறந்து நற்பெரும் சுவை பயப்பது; இலக்கண இலக்கியப் பெரும் புதையலெனத் திகழ்வது; கற்று வல்லோர்க்கும் தெற்றென விளங்காத கடுநடை வாய்ந்தது! இத்தகைய சிறப்புகள் மிக்க தணிகைப் புராணத்தின் இனிய கவிநலங்கள், ஒருசிலவற்றை மட்டும் இங்குக் காண்போம்.

விநாயகர் :

(1) விநாயகப் பெருமானுக்கு ஐந்து திருக்கைகள் உண்டு. 'அதனால் அவருக்கு 'ஐங்கரன்' என்றும் ஒரு பெயர் வழங்கும். கச்சியப்ப முனிவர் தம் கற்பனைத் திறனால், விநாயகப் பெருமானின் ஐந்து திருக்கைகளும் செய்யும் செயல்களை அழகுற விளக்குகின்றார்; விநாயகர் தம்முடைய ஒரு கையில் மோதகம் ஏந்தியிருக்கிறார். மற்றொரு கையில் ஏகதந்தம் ஆகிய ஒற்றைக் கொம்பை வைத்திருக்கின்றார். பிறிதொரு கையில் நீர் நிறைந்த பொற்கலசம் இருக்கின்றது. எஞ்சிய இரண்டு கைகளில், அங்குசமும் பாசமும் அமைந்துள்ளன. மோதகம் ஏந்திய கையைத் தமக்காகவும், ஒற்றைக் கொம்புள்ள கையினைத் தம் தாய் தந்தையர்களாகிய பார்வதி பரமேசுவரரை வழிபடுவதற்காகவும், அவர் பயன்படுத்து கின்றார். இங்ஙனம் ஒவ்வொரு கையினையே பிற செயல்களுக்காகப் பயன்படுத்தும்விநாயகப் பெருமான், தம்முடைய அடியார்களுக்காக மட்டும் இரண்டு கைகளை ஒருங்கே தொழிற் படுத்துகின்றார். தம்மை வழிபடும் அன்பர் களாகிய அடியார்களின் துன்பங்களை ஒழித்து இன்பங்களையே தரும் இயல்பினராகிய அவர், ஆணவமலம் என்னும் கொடிய யானையை அடக்கிப் பிணித்து, அடியார்கட்கு அருள் புரிவதற்காக அங்குசம் பாசம் என்னும் இரு கருவிகளைத் தம் எஞ்சிய இரு கரங்களிலும் ஏந்திக் கொண்டுள்ளார்.

பண்ணியம் ஏந்தும் கரம்தனக்கு ஆக்கிப்
பால்நிலா மருப்புஅமர் திருக்கை
விண்ணவர்க்கு ஆக்கி, அரதனக் கலச
வியன்கரம் தந்தைதாய்க்கு ஆக்கிக்
கண்ணில் ஆணவவெங் கரிபிணித் தடக்கிக்
கரிசினேற்கு இருகையும் ஆக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபற்
சகாயனை அகம்தழீஇக் களிப்பாம்

விநாயகப் பெருமான் தம் அடியார்களின் மீது கொண்டுள்ள எல்லையற்ற பேரருள் திறனை, இப்பாடலில் இனிதெடுத்து விளக்கியிருக்கும் கச்சியப்பரின் அழகிய கவிதைநலம் பெரிதும் போற்றுதற்கு உரியது.

இறைவன் :

சிவபெருமான் உலகின் புற இருளைத் தம் திருமேனியிலுள்ள ஞாயிறு திங்கள் தீ என்னும் ஒளிகளால் நீக்குகின்றார். அசைவில்பொருள் அசையும் பொருள் ஆகிய இரண்டினையும், நம் கண்களுக்குப் புலப்படுத்துகின்றார். உயிர் களைப் பற்றியுள்ள ஆணவமல இருளைத் தம் அருள்ஒளியினால் அழித்தருள்கின்றார். உயிர் களிற் கலந்து நின்று, தன்னையும் தம்மையும் உணர்த்தி அவ்வுயிர்களுக்குப் பெத்தம் முத்தி என்னும் இருநிலைகளிலும், கண்டும் காட்டியும் உதவி புரிகின்றார். இவற்றின் பொருட்டு எக் காலமும் இடைவிடாமல் ஐந்தொழிற்றிருக் கூத்து, ஆடுகின்றார். அதன் பெரும் பயனை ஆருயிர்கள் அனைத்தும் நேரே பெறும் ஆற்ற லுடையன அல்ல. ஆதலின், அருள் வடிவ மாகிய அம்பிகையின் வாயிலாக அதனை உயிர் கள் பெற்று உய்யும்படி, 'மாதொரு பாகம் நோக்கி' மன்னு சிற்றம்பலத்தே ஆதியும் முடிவும் இல்லாத தம் அற்புத ஐந்தொழிற் கூத்தினை, அம்பிகைக்குக் காட்டியருளுகின்றார். இத்தகைய சிவபிரானின் திருவடிகளைப் பணிவோம்.

உலகிருள் உருவத்து ஒளிகளின் இரித்து, ஆங்கு
உறுபொருள் எவற்றையும் தெரித்து, உள்
விலகிருள் முழுதும் அருள்கொடு துமித்து,
விராய்ஒளிர் தன்னையும் தன்னால்
இலகுயிர் தனையும் தெரித்து, அறி வுறுக்கும்
இயல்பின்எக் காலமும் பிறழாது
அலகில்அற் புதக்கூத்து, உமையினைக் காட்டும்
அடிகள்சே வடிகளைப் பணிவாம்.

இப்பாடலில் சைவ சித்தாந்தக் கருத்து நுட் பங்கள் பலவற்றைக் கச்சியப்ப முனிவர் சுருக்கி விளக்கிக் காட்டி யிருத்தல் காணலாம்.

அம்பிகை :

சிவமெனும் செம்பொருள், சத்தியைச் சேர்ந்த வழியே எச்செயலும் செய்யவல்ல தாகும். சிவ சக்தியினாலேயே இவ்வுலகப் பொருள்கள் எல்லாம் இயங்குகின்றன. 'அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்' என்பது சிவஞான சித்தியார்.

அண்ட கோடிகளை யெல்லாம் ஈன்றெடுத்தவள் அம்பிகையே யாயினும், அவள் என்றும் இளமை குன்றாத எழில் பொருந்திக் கன்னி யாகவே விளங்கி வருகின்றாள். "பவன் பிரம்மசாரி யாவன், பான் மொழி கன்னியா வாள்" என்பது பெரியோர் திருமொழி. இத்தகைய சிவசத்தியே மும் மூர்த்திகளாகவும், அவர்கள் இயற்றும் முத்தொழிற்கும் மூல காரணமாம் முதல்வியாகவும் விளங்குகின்றாள், இவ்வுண்மையைப் பாமர மக்களும் இனி துணரும்படி, அவள் தன் திருக்கைகளில் ஏந்தியுள்ள பொருள்களே சான்று பகர்கின்றன.

அம்பிகை தன் கைகளில் சிருக்கு மணி வடம், சங்கு சக்கரம், சூலம் வேல், அங்குச பாசம், கரும்புவில் மலர்க்கணை என்பவைகளை ஏந்தியிருக்கின்றாள். அவைகளால் அம்பிகை ஒருத்தியே, பிரமன் திருமால் உருத்திரன் முருகன் விநாயகர் மன்மதன் ஆகியவர்களின் தொழில்களுக்கு எல்லாம் முறையே காரண மாதலை நாம் தெளிந்து கொள்ளலாம்.

சீர்அணி சிருக்கு மணிவடம், சங்கு
திகிரி, சூலப்படை, இலைவேல்
போர்அணி பாசம் அங்குசம், கழைவில்
பூங்கணை, வேறுவேறு அணியா
ஆரணன் மாயன் அரன் இபமுகத்தன்
அநங்கன் என்றிவர் தொழிற்கெல்லாம்
காரணம் ஆதல் தெளித்தருள் கொழிக்கும்
கன்னியை, உன்னி ஏத்தெடுப்பாம்!

இப்பாடல் அம்பிகையின் அருள் நலனையும், திருவுருவச் சிறப்பினையும் அழகுற விளக்குதல் அறிந்து இன்புறத் தக்கது.

முருகன் :

இறைவன் எல்லாவற்றிலும் மேம்பட்டவன். ஒளிமயமாகத் திகழ்பவன். ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் என்னும் சூக்கும பூதங்கள் ஐந்திலும் அருவமாகக் கலந்து நிற்பவன். அவ்வியல்பினை அறிந்து கொள்ளமாட்டாத பாமர மக்களும் உணர்தற் பொருட்டுப் பருவடி வில் உருவ நிலையிலும் வைத்து உணர்த்துவதே, முருகனின் தோற்றம் பற்றிய வரலாருகும். சிவபிரானின் நெற்றிக்கண்ணினின்று வெளிப் பட்ட தீப்பொறிகள் முருகன் ஒளி வடிவின னதலை உணர்த்தும். அப்பொறிகள் முதலில் விசும்பிற் பரந்து நிறைந்தன. அவற்றை வாயு தேவன் திரட்டிக் கொணர்ந்தான். அக்கினி தேவன் அவற்றை எடுத்துச் சென்றான். அவன் அதனைத் தாங்கமாட்டாமையாற் சரவணப் பொய்கையாகிய நீரில் விடுத்தான். அதன் கண் இருந்து நீங்கி, முருகன் நிலம் எங்கணும் சென்று திருவிளையாடல் புரிந்தான். உலகம் தோன்றுங்கால் விசும்பினின்று வளியும், வளியினின்று தீயும், தீயினின்று நீரும், நீரினின்று நிலமும் ஆகிய ஐம்பூதங்களும் தோன்றும் என வேதங்கள் கூறும். அம்முறை யில் உலகங்களுக்கெல்லாம் மூல முதற்காரண னுகிய முருகனின் தோற்றமும் நிகழ்ந் தருளியமை காணலாம்.

ஓங்கு ஒளியாய் விசும்புஆதி தொறும்இயலும்
தனதுஇயல்பை உருவின்மாட்டும்
பாங்குபெறத் தெரித்ததுபோல், பலபொறியாப்
பரமர்விழி பயந்த ஞான்று,
தேங்குஒளியாய், வெளிஅடர்ந்து, வளிதொடர்ந்து,
ஒள் எரிபடந்து, தெளிநீர்ப் புக்கு,
நீங்கி விளையாட்டு அயர்ந்து, தணிகைஅமர்
பெருவாழ்வை நினைந்து வாழ்வாம்.

முருகனின் திருவவதாரத்தத்துவ நுட்பத்தினைக் கச்சியப்பர் இப்பாடலில் விளக்கியிருக்கும் திறம் பெரிதும் போற்றத்தக்கது.

இயற்கைப் புனைவு :

ஒரு நல்லிசைக் கவிஞரின் கவிதைச் சிறப்பினை, அளந்தறிந்து சுவைத்து மகிழ் வதற்குப் பல வழிகளுண்டு. அவற்றுள் இயற்கைப் பொருள் நிகழ்ச்சிகளையும், காட்சி களையும் அவர் எங்ஙனம் திறம்படப் புனைந் துரைத்து விளக்கியுள்ளார் எனக் கண்டறி வதும், ஒரு வழியாகும், இயற்கையில் ஈடு பாடும், அதனைப் புனைந்துரைக்கும் ஆர்வமும், கவிஞர்கள் பால் பொதுவாகக் காணப்படும் சிறப்பியல்பாகும்.

"கவிஞனின் கண்ணானது, மிகச் சிறந்த தோர் உள்ளெழுச்சியினுல் விண்ணிலிருந்து மண்ணையும், மண்ணிலிருந்து விண்ணையும், சுற்றிச் சுழன்று பார்வை இடுகின்றது; காணவும் அறியவும் படாத பொருள்களின் இயல்புகளைக் கற்பனை உணர்வானது உருவாக்கித்தந்து கொண்டிருக்க, அவைகளைக் கவிஞனின் எழுதுகோல், எழில் கனிந்த கலை ஓவியங்களாக இனிது வடித்துக் கொடுக் கின்றது; காற்றென நுண்ணியவாய்க் காணப் படாமையின் இல்லனவாய் விளங்கும் அவற்றுக்கு, ஓர் உறைவிடமும் பெயரும் அளிக் கின்றது."

வல்லதம் விழியின் வீச்சால்
மண்ணொடு விண்ணும் எல்லாம்
ஒல்லையின் அளந்து தேர்ந்து
கற்பனை உணர்வின் மாண்பால்
இல்லதொன் றனையும் ஊர்பேர்
இயைபுறப் படைத்துக் காட்டும்,
நல்லியற் கவிஞர் செய்கை
நலமெலாம் நவிலற் பாற்றோ?

—*மொழிபெயர்ப்பு, ஆசிரியர்.

எனச் செகப்பிரியர், கவிஞர்களின் இயல்பினை இனிதெடுத்து விளக்குகின்றார். இதனால் கவிஞர்களின் கவித்திறனுக்கும் இயற்கைப் புனைவுக்கும், மிக்க பெருந் தொடர்புண்மை இனிது பெறப்படும்.

இங்ஙனம் இயற்கையைப் புனைந்து பாடுவது எல்லாக் கவிஞருக்குமே இயல் பாயினும், கச்சியப்ப முனிவர் இயற்கைப் புனைவுகளில் தத்துவக் கருத்துக்களையும், இலக்கணச் செய்திகளையும் இடைஇடையே மிகுதியாகச் செறித்துப்பாடும் தனிப் பெரும் சிறப்பியல்பு, மிக்குடையவராகத் திகழ்கின்றார். அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்குக் கண்டு இன்புறுவோம்.

தொண்டைநாடு :

(1) திருத்தணிகை என்னும் தலம் தொண்டை நாட்டிலுள்ளது. ஆதலின் அந் நாட்டைக் கச்சியப்ப முனிவர் புகழ்ந்து பாட முற்படுகின்றார். புகழ் ஆகிய கவசம் அணிந்து, பல்வகை அறங்கள் ஆகிய படைக் கருவிகள் தாங்கி, வாய்மை சீலம் நோன்பு பக்தி என்னும் நாற்பெரும் பண்புகளையும் தேர் கரி பரி காலாள் என்னும் நாற்பெரும் படைகளாகக் கொண்டு, தீவினைகள் ஆகிய பகைவர்களை அடக்கி வெற்றி கொண்டு, ஓர் அரசனைப் போல விளங்குவது தொண்டை நாடு, என்கின்றார்!

"கொடைப்புகழ்க் கவசம் போர்த்துக்
கூர் அறப் படைகள் ஏந்தி
விடைப்பரு வேழம் பொற்றேர்
விரைசெலற் பரியாள் வாய்மை
படைப்பரும் சீலம் நோன்பு
பத்திமை யாகப் பாய்த்திக்
கடைப்படு பாவத் தெவ்வைக்
கடந்தது, அத் தொன்மை நாடு.

(2) தொண்டை நாடு, தொல்காப்பியம் முதலிய தமிழ் இலக்கண நூல்கள் கூறுதற்கு ஏற்ப, ஐந்திணை வளங்களும் அமைந்தது. முல்லை நிலமாகிய காடுகள் கூந்தலாகவும், குறிஞ்சி நிலமாகிய மலைகள் தனங்களாகவும், மருத நிலமாகிய சோலைகள் கைகளாகவும், நெய்தல் நிலமாகிய பெரிய கடல் கலாபமணிந்த அல்குலாகவும் அமைந்து விளங்க, நல்லொழுக்கம் என்னும் கணவனை மணந்து கலந்து, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு மக்களைப் பெற்றெடுத்துப் பாதுகாத்து வளர்த்து, ஒரு தாய்போல விளங்குவது தொண்டை நாடு எனப்பாடுகின்றார் அவர்!

" கருங்குழல் கானில் தோற்றிக்
கதிர்முலை மலையில் தோற்றி
இருங்கைபூம் பணையில் தோற்றி
எரிமணிக் கலாப அல்குல்
பெருங்கடல் தோற்றி வேத
ஒழுக்கம்ஆம் கணவற் பின்னி
ஒருங்குநாற் பயனும் மக்கள்
உயிர்த்து அளிப்பஃது அந்நாடு.

பாலாறும் முருகனும் :

தொண்டை நாட்டிற் பாயும் ஆறுகளில் தலைசிறந்தது பாலாறு. அவ்வாற்றங் கரையிலேயே வளர்ந்து வாழ்ந்து மகிழ்ந்தவர் கச்சியப்ப முனிவர். ஆதலின் அதன் சிறப்பினைப் பலவகைகளில் புகழ்ந்து பாடுகின்றார் அவர்!

(1) பாலாறு ஒருவகையில் குறிஞ்சி நிலக்கடவுளாகிய முருகனைப் போன்று விளங்குவது. முருகன் காந்தள் மலர் வேய்ந்து கொள்வான். களி மயில் ஊர்ந்து கடாவிச் செல்வான். வேலன் வெறியயர் களம் சென்று விளையாடுவான். இங்குலிகம் போன்று செந் நிறமுடையவனாகச் சேந்தன் என்னும் பேர் பெற்றுத் திகழ்வான்.

---

* "The poet's eye in a fine frenzy rolling,
Doth glance from heaven to earth,
from earth to heaven,
And as imagination bodies forth
The form of things unknown; the poet's pen
Turns them to shapes, and gives to airy nothing
A local habitation and a name".

—*William Shakespeare.*

அதுபோலப் பாலாறும் வெள்ளப் பெருக்கெடுத்துப் பாய்ந்தோடி வருங்கால், காந்தள் மலர்களை வேய்ந்து கொண்டு வருகின்றது. சோலைகளிலுள்ள மயில்கள் அஞ்சிப் பறந்து போகும்படி செய்கிறது. வேலன் வெறி அயர் களம் போன்ற இடங்களிலும், பாய்ந்து பரவித் தேங்கி நிற்கின்றது. இங்குலிகம் போன்ற செம்மண்ணின் சேறு மிகுந்து சிவந்து தோன்றுகின்றது. இவ்வாற்ருல் முருகனைப் போன்றே விளங்கும் சிறப்புடையது பாலாறு.

காந்தள்அம் போது வேய்ந்து
களிமயில் கடாவிப் பல்பூ
வேய்ந்தமென் குழற்கொம்பு அன்னுர்
வெறியயர் களத்துச் சார்ந்து
வாய்ந்தஇங் குலிகச் சேற்றின்
வயங்குதன் உருவம் தோற்றிப்
போந்துலாய்ச் சிலம்பிற் செவ்வேள்
போன்றது பாலி நீத்தம்!

பாலாறும் திருமாலும் :

(2) இம்மட்டோ! முல்லை நிலக்கடவுளாகிய திருமாலையும், போன்று திகழ்கின்றது பாலாறு. திருமால் எடுத்தருளிய அவதாரங்கள் பத்து. அவற்றைத் 'தசாவதாரம்' என்பர். பாலாறு வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடிவருங்கால் பல பொருள்களைக் கவர்ந்து அடித்துக்கொண்டு வருகின்றது. அதன் அலைகள் வானளாவி ஓங்கி எழுகின்றன. அதன் வெள்ள நீர் மிகுதியாகப் பெருகிச் சென்று பாய்ந்து கடலைக் கலக்குகின்றது. வயல்களுக்குச் சென்று பாய்ந்து குடைந்து பரவி வளம் படுத்துகின்றது. வெள்ளத்தின் பெருக்கால் ஊர்கள் அழிந்து போய்விடுமோ என்ற அச்சத்தை உண்டாக்குகின்றது. பாலாறு வில் கலப்பை பரசு ஆகிய கருவிகளை அடித்துக்கொண்டு வருவது, இராமன் பலராமன் பரசுராமன் ஆகிய அவதாரங்களை நினைப்பிக்கின்றது. இடையர் சேரிகளில் பாய்ந்து அவர்களை அஞ்சச் செய்வதனுல் இரணியனை அச்சுறுத்திய நரசிங்கம், பால் தயிர் வெண்ணை ஆகியவற்றைக் கவர்ந்துகொண்டு வருகின்ற கிருஷ்ணன், என்னும் அவதாரங்களை நினைவூட்டுகின்றது. அலைகள் வானளாவி ஓங்கி எழுவதனுல், வாமனனுய்வந்து நெடியோனுய் மாறிய திரிவிக்கிரமன் என்னும் அவதாரம் போன்றுள்ளது. கடலில் பாய்ந்து கலக்குதலால் மச்சம் கூர்மம் என்னும் அவதாரங்களின் நிலையில் விளங்குகின்றது. நிலங்களில் பாய்ந்து குடைந்து வளம்படுத்துதலால் வராகம் ஆகிய அவதாரத்தை ஒத்துள்ளது. வெள்ளப் பெருக்கால் ஊர்கள் அழிந்துவிடுமோ என்று மக்கள் எண்ணும் நிலையில் பொங்கி எழுந்து வருவதனுல், கலியுக முடிவில் தோன்ற உள்ள கற்கி என்னும் அவதாரத்தைக் கருதச் செய்கின்றது.

சிலைஅலம் கணிச்சி வெண்ணெய்
தெவ்விவான் நிமிர்ந்து, வாரி
நிலைபுகுந் தொழுக்கி, ஒல்கும்
நிலனெடுத் திருவி, அண்டர்
உலைதர வெறிக்கொண் டெற்றி,
உறுகலி முடிவு தோற்றித்
தலைவரும் மாயோன் என்னத்
தவழ்ந்தது புறவத் தம்மா!

பாலாறும் வருணனும் :

(4) வருணன் மேற்றிசைக் குரியவன். கடலுக்கும் அதனைச் சார்ந்த நிலத்துக்கும் உரிமையும் தலைமையும் உடையவன். நெய்தல் நில மக்கள் தங்கள் வலை வளம் தப்பின், புன்னை மரங்களின் சூழலில், மகர மீனின் கொம்பை நட்டு, சுரு மீனின் கொடியைச் செலுத்தி வருணனை வழிபடுவர். வருணனின் இவ்வியல்புகள், பாலாற்றுக்கும் உள்ளனவாகக் கச்சியப்ப முனிவர், கவின் மிகக் கற்பனை செய்து பாடுகின்ருர்.

பாலாறும் மேற்குத்திசையின் தொடர்புடையது; கடல்போலப் பரவி நிற்பது; புன்னை மரச் சூழல்களில் துள்ளிப் பாய்வது; மகர மீன்களை வெள்ளத்தின்கண் உந்திக் கொண்டு வருவது; இவ்வியல்புகளினுல் பாலாறு வருணனைப் போன்று விளங்குகின்றது.

மேற்றிசைத் தொடர்பி னேடும்
விரிகடற் பயிற்சி காட்டித்
தோற்றெழில் நாகச் சூழல்
துன்னும்அத் தொடர்பும் காட்டி,
ஏற்றெதிர் மகரம் உந்தி
எங்கில வனும் போற்றி
ஆற்றல்சால் வருணன் என்ன
அணைந்தது கானற் பாங்கர்.

பாலாறும் இந்திரனும் :

இந்திரன் தன் உடல் முழுவதும் செந்தாமரை போன்ற கண்களையுடையவன்; வச்சிராயுதம் ஏந்தியவன்; ஐராவதம்

என்னும் யானை யூர்தி யுடையவன்; கற்பகச் சோலையினை மருவி யிருப்பவன்; மலையின் சிறகுகளை அரிந்தவன். இந்திரனின் இவ்வியல்புகள், பாலாற்றுக்கும் இயைந்துள்ளன, பாலாற்று வெள்ளம் செந்தாமரை மலர்களின் தேன் பெருக்குடையது; வயிரமணிகளையும், சங்குகளையும் கொழித்து வருவது; சோலைகளிற் பொருந்தி, கல் அணைகளையுடைத்துக் கொண்டு ஓடுவது. ஆதலின் பாலாறு இந்திரன் எனத் திகழ்கின்றது.

பூத்தசெந் தாமரைக் கண்
 மெய்யெலாம் பொலியத் தோற்றித்
தூத்தகை வயிரம் பற்றித்
 துலங்கு வாரண மேற்கொண்டு
காத்தலை மருவி நீண்ட
 கற்சிறை பலவும் சிந்தி
ஏத்துவிண் அரசன் என்ன
 இறுத்தது பழனப் பாங்கர்.

நெற்பயிர் :

(1) வயல்களில் நெற்பயிர் செழித்து வளர்கின்றது. விதையினின்று தோன்றும் முளையானது வெண்மையாக விளங்குகின்றது. அத்தன்மை உயிர்களுக்கு அருள்புரிதலைச் செய்யும் சதாசிவனின் வெண்மை நிறத்தை ஒத்துள்ளது. முளை பயிராகி மரகதம் போலப் பசுமை நிறத்துடன் தழைத்து வளர்வது, மறைத்தற்றொழிலைச் செய்யும் மகேசுவரனின் நீலவடிவத்தை நினைப்பிக்கின்றது. பயிரானது வளர்ந்து கதிர்கள்விட்டுச் செம்பொன்னின் நிறம் பெற்றுத் திகழ்வது, உயிர்களுக்கு இளைப்பாறுதற் பொருட்டு ஒய்வளித்தலாகிய அழித்தற்றொழிலை ஆற்றும் உருத்திரனின் சிவந்த வடிவத்தைப் போன்று காணப்படுகிறது. கதிர்களின் சுமையால் பயிர்கள் தளர்வுற்றுத் தலை சாய்ந்து வளைந்திருத்தல், மகவை ஈன்ற மகளிரின் தனங்களைப் போன்றுள்ளது.

மன்னும் சதாசிவன் என்று உடலம் வெண்மை
 வாய்ந்து, ஈசன் என நீலஉருவம் பூண்டு,
பின்னர் அரன்எனச் சிவந்த வடிவம் தாங்கும்
 பெற்றிமைபோல், வித்துமுளை வெள்ளைமைஆகி
கன்னர் மரகத ஒளியின் பயிராய் ஓங்கி
 நயந்ததற்பின் செம்பொன்னிற வயக்கம்மாண்ட
கொன்னும்விளை வாய்ப்பழுத்து, நாளும் தாழ்ந்த;
 குழவி பயந்தவர் மணிப்பூண் கொங்கை என்ன!

(2) இங்ஙனம் உழவர் விதைத்த சில விதைகளை ஏற்றுப் பல மடங்காகப் பெருக்கி வயல்கள் நெல்லை விளைவித்தமை, சிறந்த சிவ ஞானியர்களின் கையில் அளித்த சிறிய தானமும், பெரும் புண்ணியத்தை விளைவிக்கும் உண்மையினை உணர்த்துவதாக உள்ளது. முதலில் பசுமை நிறமாயிருந்த நெல் மணிகள், பின்னர்ப் பொன்னிறம் அடைந்து, அறங்கள் பலவும் ஆற்றப் பயன்படுகின்றன. அவ்வியல்பு, பசுமை நிறம்கொண்ட பார்வதி தேவியானவள் கயிலையினின்று நீங்கி, கவுரம் என்னும் பொன்னிறம் கொண்ட திருமேனியையுடைய காமாட்சி ஆகிக் காஞ்சிபுரம் அடைந்து, 32 அறங்களும் ஆற்றியருளிய அருட்பெருஞ் செயலைக் குறிப்பிக்கின்றது.

பரவுசிவ ஞானம்உணர் அடியார் செங்கைப்
 படுத்தபொருள் பெரும்பயனைப் பயக்குமாபோல்
விரவும் உழவர்கள் அளித்த சிலகொண்டு, ஆற்ற
 வியன்பணைகள் பெரும்பயனு விளைத்த சாலி,
மரகதமெல உருத்தணந்து, கவுர மேனி
 வயங்கி, அறம் பற்பலவும் வளர்க்கும்
இரவுவளர் கதிர்ச்சடிலக் குழகன் பாங்கர்
 இருந்தருளும் உமைமாதும் புரையும் அன்றே!

இப்பாடல் "பாத்திரமறிந்து பிச்சை இடு" என்றபடி தக்க சான்றோர்களுக்குச் செய்யும் தானம், "தான் சிறிதாயினும் தக்கோர் கைப் பட்டக்கால் வான் சிறிதாப் போர்த்துவிடும்" என்னும் உண்மையை அழகுற விளக்குகின்றது. மேலும், "சிவஞானச் செயலுடையோர் கையில் தானம், திலம் அளவே செய்திடினும் நிலம் மலைபோல் திகழும்........." (278) எனவரும் சிவஞானசித்தியார் செய்யுட் கருத்தையும் இப்பாடல் அழகுற விளக்கி யிருத்தல் காணலாம்.

(3) நெற்பயிர் வளர்ந்து, கதிர்கள் தோன்றி முற்றிவிட்ட பின்னர், உழவர்கள் வயலில் உள்ள நீரை எல்லாம் பயிருக்குக் கேடு நேராமையின் பொருட்டு நன்கு வடித்து விடுவர். இவ்வியல்பு, உடல் கருவி உலகம் நுகர்ச்சி என்னும் எல்லாவற்றோடும் கூடி இருந்தும், உலகப் பொருள்களை எல்லாம் சிவ மயமாகக் காணும் திறன் பெற்ற சீவன் முத்தர்கள், உலக நுகர்ச்சிகளில் தம் உள்ளம் செலுத்தாமல், அவற்றையெல்லாம் இயல்பாகத் துறந்து ஒழித்துவிடும் சிறப்பினைப் போல விளங்குகின்றது.

உடல்கருவி புவனமுறு போகம்எல்லாம்
உடங்கியைந்தும், சிவன்தோற்றம் ஒன்றேகாணும்
மடனகன்ற சீரடியார், நுகர்ச்சி யாதும்
மருவாமை ஒழித்துநிற்கும் வாய்மை ஒப்ப,
இடன்அகன்ற தளைகள்தொறும் விளைந்த சாலி
இரும்புனல்வேண் டாமைஒழி பருவம்நோக்கித்
தடநெடுந்தோள் உழவரெல்லாம் அண்மி, யாத்த
தண்புனலைக் கவிழ்த்துணக்கும் தொழிற்கண் நின்ருர்.

இப்பாடல் சீவன் முத்தர்களின் இயல்பை இனிது விளக்குகின்றது. "பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" எனவும், "சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்" எனவும் கூறும் சிவஞான சித்தியார் பாடலகளை அடியொற்றி இப்பாடல் அமைந்து இருத்தல், நாம் அறிந்து இன்புறத்தக்கது.

தணிகையின் சிறப்பு :

தணிகையின் சிறப்புக்கு எல்லையில்லை. செல்வம், அழகு, அறிவு ஆற்றல் அருள் முதலிய பண்பு நலங்கள் உடைய எவரையேனும் சிறப்பித்துக் கூறவிரும்புவோர் "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" என்னும் தொல்காப்பிய விதியின்படி முருகனையே உவமையாகக் கூறுவது மரபு. உவமேயத்தைவிட உவமையே எவ்வகையிலும் உயர்ச்சியுடையதாகும் என்பது அறிஞர் துணிபு. "தாமரை போன்ற முகம்" என்னும் தொடரில் முகம் உவமேயம். தாமரை உவமை. முகத்தின் அழகைச் சிறப்பிக்கத் தாமரை உவமையாக வந்திருந்தாலும், முகத்தின் அழகைக் காட்டிலும் தாமரையின் அழகே மிகவும் சிறப்புடைய தென்பதை யாவரும் உடன்படுவர். இதனுல் உவமேயத்திலும் உவமையே சிறப்புடையதாதலை உணரலாம். முருகன் பிறருக்கு உவமையாகக் கூறத் தக்கவன். அவனுக்கு உவமையாகக் கூறத் தக்கவர் வேறு எவரும் இலர். தனக்குவமையில்லாதவன் முருகன். அதுபோல அப்பெருமான் எழுந்தருளி விளங்கும் திருத்தணிகையும் பிற தலங்களுக்கு உவமையாகுமே அன்றி, அதற்கு இணையாக உவமை கூறத்தக்க தலம் இவ்வுலகில் எதுவுமில்லை. ஒப்புயர்வற்ற அத்துணைச் சிறப்பு அமைந்தது திருத்தணிகை!

திரு விளங்கிய வனப்பினில் அறிவினில்
திறத்தினில் அருள்தன்னில்
ஒருவர் தங்களை உயர்த்தமுன் முருகனை
உவமை ஆக்குவர் ; அன்னுன்
பொருவில் வள்ளியொடு ஆடிடம் ஆகிய
புகழ்த் தணிகையும், யாங்கும்
ஒருநகர்க்கு அணி யுயர்த்தமுன் உவமையா
உரைப்பதால் எவராலும்.

(2) தணிகை நகரம் மூன்று பகுதிகளையுடையது. தத்துவங்களும் அதுபோல மூவகைப்படும். புடைநகர் அசுத்தம் என்னும் தத்துவம் போலப் பொலிகின்றது. இடைநகர் சுத்தா சுத்தம் என்னும் தத்துவம் போல இலங்குகின்றது. இதற்கும் உள்ளே நின்றே அகநகர் சுத்தம் என்னும் தத்துவம் போலத் திகழ்கிறது. இம் மூன்று தத்துவங்களையும் கடந்து தனிப்பெரும் சிறப்பில் விளங்கும் சிவ பரம் பொருள் போல, இம்மூவகைப்பட்ட நகர்ப் பகுதிகளையும் கடந்து மிகவும் ஓங்கித் தணிகை மலை விளங்குகின்றது.

புடைநகர்த் தலை அசுத்த தத்துவம்எனப்
பொலிந்தது ; வளஞ் சான்ற
இடைநகர்த் தலை இலங்கு சுத்தாசுத்தம்
எனப்பொலிந்தது ; அஃதுள்ளால்
மிடைநகர்த் தலை சுத்ததத்துவம் என
விளங்கியது ; அவை மூன்றும்
உடைய தத்துவம் அவை கடந்து ஒளிர்வது
ஒத்து ஓங்கியது உயர்குன்றம்.

(3) தணிகையின் புடை நகரமானது வேல் வாள் ஈட்டி முதலிய படைக்கருவிகளை வீரர்களின் பொருட்டுப் படைத்துக் கொடுப்பதனுல் பிரமனைப் போலும்; ஆடவர் மாதர்களைக் காத்துப் போகங்களை விளைவிப்பதனுல், இடைநகர் திருமாலை ஒக்கும். தன்னை அடைந்தோரின் துன்பங்களைப் போக்கிக் குற்றங்களை அழிப்பதனுல், அகநகர் உருத்திரனை நிகர்க்கும்.

ஆய பல்படை ஆதிகள் ஆக்கலிற்
புடைநகர் அயன் போலும் ;
மாய மென்மொழி மயக்கில் ஆடவர்துனி
மாதரை உயிர்காத்து
மேய போகங்கள் விளைத்தலின் இடைநகர்
விண்டு ஒத்திடும் ; உற்ருேர்க்கு
ஒய இன்னல்கள் அறன்கடை துடைத்தலின்
உள்நகர் அரன் நேரும்.

(4) தன்பால் வந்து அடுத்து நிற்பவர்களின் இளைப்பை நீக்குவதனுல் புடைநகர் உருத்திரனையும், மாதர்கள் மறைத்து நல்கும் இன்பம் நிறைந்த காதல் வாழ்வினை அளித்ததால் இடைநகர் மகேசுவரனையும், மக்கள் விரும்பும் பொருள்களை யெல்லாம் வழங்கி அநுபவிக்கச் செய்வதனுல் அகநகர் சதாசிவனையும், இணையாகக் கூறும்படி தணிகை மாநகரம் விளங்குகின்றது.

அடுத்துளோர் இளைப்பு அலர்கயப் பொழில்களால்
அனுக்கலால் அரன்போலும் ;
மடுத்த மாண்எழிற் புடைநகர் மாதரார்
மறைத்து நல்கிடும் இன்பம்
தொடுத்த காதலின்இடைநகர் ஈசனைத்
துணையும்; வேட்டன துய்ப்பக்
கொடுத்து மேவலின் உள்நகர் சதாசிவக்
கொற்றவன் தனை நேரும்.

(5) தணிகை மாநகரில், பாதலம் வரையில் ஆழமுற்று விளங்கியும் பொருள்களை மறைத்து நிற்பன, மதில்களைச் சூழ்ந்துள்ள அகழிகள் மட்டுமல்ல ; அறிஞர்கள் ஆராய்ந்து அணிபெற அமைத்த அரிய செய்யுட்களும் ஆகும். (முழங்கால் அளவும்) தாழ்ந்து கிடந்தாலும் புகழத்தக்கனவாக விளங்குவன. மைந்தர்களின் பெரிய கைகள் மட்டுமே அல்ல; பலவகை அறச் செயல்கள் நிறைந்த அவர்களின் மனங்களும் ஆகும். அறுக்கப்பட்டுக் கிடந்தும் அணிந்துகொள்ளப்படுவன மாதர்கள் அணியும் வளையல்கள் மட்டுமே அல்ல ; போர் புரியும் மதயானைகளின் தந்தங்களும் ஆகும். சோலைகளின் உள்ளே விழுந்து கிடந்தாலும் உயர்வு உடையன மலர்கள் மட்டுமே அல்ல, மகளிர் தம் கணவருடன் ஊடல் கொண்டு வீசி எறிந்த விலையுயர்ந்த பொருள்களும் ஆகும்.

ஆழ்ந்து கிடந்தும் கரப்பது அகழ்அன்று, ஏனை
அறிஞர் இனிதமைத்த அருஞ்செய்யுள் தானும் ;
தாழ்ந்து கிடந்தும் புகழ்தக்க, மைந்தர்தடம்
கரம் அன்று, அவர் அறஞ்சொல் நெஞ்சம் தாமும்;
போழ்ந்து கிடந்தும் புனைவ வளை அன்று, ஏனைப்
பொருகளிற்றுக் கோடுகளும் ; பொழிலின்
உள்ளால்
வீழ்ந்து கிடந்தும் உயர்வ மலர் அன்று, ஏனை
வியன்நகருள் வெறுத்த பொருள் பலவும் அன்றே.

இப்பாடலில் நகரின் அகழிச் சிறப்பு, மக்களின் சிறப்பு, இயற்கைவளச் சிறப்பு, செல்வம் நிறைந்த இன்ப வாழ்வின் சிறப்பு, சான்றோர் செய்யுட்களின் சிறப்பு ஆகியவற்றை எல்லாம், கற்போர் உள்ளம் களிதுளும்பும்படி கச்சியப்பர் பாடியிருத்தல் காணலாம்.

முடிவுரை :

இதுகாறும் விளக்கிய ஒரு சில செய்யுட்களின் சுவைத்திறனைக் கொண்டே, கச்சியப்ப முனிவரின் கற்பனை நயம் செறிந்த கவி நலம் எத்தகையது என்பதனை, யாவரும் எண்ணி உணரலாம். இன்னோரனைய இனிய கவிஞர் பெருமக்களையும், அவர்கள் இயற்றியருளிய தெய்வத் தீந்தமிழ்க் கவிதைகளையும் கற்றுச் சுவைத்துப் போற்றி வருவது நம்மனோர் கடமையாகும்.

திருவாவடுதுறைக்
கோமுத்தீசுவர சுவாமி கோயில்
குடமுழுக்கு விழா வாழ்த்துச் செய்தி

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S.,
ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவே என் உறவே என் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே என் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினை நோய் அடையா வண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே!

சோழ நாட்டிற் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்றாகச் சிறந்து திகழ்வது திருவாவடுதுறை. சைவ சமய ஆசிரியர்கள் நால்வராலும் புகழ்ந்து துதிக்கப்பெற்ற பெரும் சிறப்பு, திருவாவடுதுறைக்கு உண்டு. இதற்குக் கோமுக்திபுரம் கோகழி பூலோககைலாசம் நந்திநகர் தியாகபுரம் போதிவனம் அரசவனம் மகாதாண்டவபுரம் வேதபுரம் நவகோடிசித்தபுரம் சிவபுரம் முக்தி க்ஷேத்திரம் எனப் பலப்பல பெயர்கள் வழங்கும்.

ஒரு காலத்தில் உமாதேவியாருக்கு விளையாட்டால் நேர்ந்த பசு வடிவத்தை நீக்கி, இங்கே இறைவன் அருள் புரிந்தான். அதனால் இத்தலத்திற்குக் கோமுக்திபுரம் (கோகழி) என்று வடமொழியிலும், திரு+ஆ+அடு+துறை என்று தமிழிலும் பெயர்கள் அமைந்தன. தேவர்கள் இங்கே படரரசு என்னும் தலமரமாக விளங்க, இறைவன் அந்நீழலில் எழுந்தருளியிருக்கின்றான் முசுகுந்தச் சக்கரவர்த்தி என்னும் சோழப் பேரரசன், இங்குள்ள இறைவனை வழிபட்டு, இத்தலத்தைத் திருவாரூர் ஆகவும், இங்குள்ள இறைவனைத் தியாகேசுவரராகவும் தரிசித்து மகப்பேறு எய்தி மகிழ்ந்தான். தருமதேவதை இங்குத் தவம் புரிந்து இறைவனுக்கு ஊர்தியாகும் பேறு பெற்றது. தேவர்களும் முனிவர்களும் பணிந்து வேண்டிக் கொண்டபடி சிவபிரான் இங்குள்ள போதியம்பலத்தில் மகா தாண்டவம் புரிந்தருளினார். திருமூலர் என்னும் சித்தர் பெருமான் மூவாயிரம் ஆண்டுகள் தவநிலையில் இருந்து. சிவாகமங்களின் சாரமாகிய திருமந்திரம் என்னும் சிறந்த நூலை இங்கேயே அருளிச் செய்தார். போகர் முதலிய நவகோடி சித்தர்களுக்குச் சிவபெருமான் இத் தலத்திலேயே பல சித்திகளை வழங்கினான். திருஞானசம்பந்தர் பதிகம்பாடிப் பொற்கிழி பெற்ற தலம் திருவாவடுதுறையேயாகும்.

"காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல ஊரர்க்கு அம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு துறையனாரே"

எனத் திருநாவுக்கரசர் இவ்வருள் நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். சேந்தனார் இத்தலத்தைத் திருவிசைப்பாவிற் போற்றித் துதித்துள்ளார். திருவிசைப்பா ஆசியர்களுள் ஒருவராகிய திருமாளிகைத்தேவர் இங்கேயே வாழ்ந்திருந்தார். அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடலும் இத்தலத்திற்கு அமைந்துள்ளது.

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க அருளாட்சி செலுத்திப் புரந்துவரும் சைவ ஆதீனங்கள் பதினெட்டனுள் தலை சிறந்த ஒன்ருக மிளிர்வதும், ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளைக் குரு முதல்வராகக் கொண்டு விளங்கி வருவதும் ஆகிய திருவாவடுதுறை ஆதீனம், இத்தலத்தின் சிறப்புகள் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போலத் திகழ்கின்றது. மாதவச் சிவஞான யோகிகள், கவிராட்சசர் கச்சியப்ப முனிவர், மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை போன்ற எத்துணையோ பல பெருமக்களின் தொடர்பினுல், திருவாவடுதுறையின் சிறப்பு தமிழ் கூறும் நல்லுலகில் தன்னிகரற்றுச் சுடர் விட்டு இலங்குகின்றது. சைவ சமய வரலாற்றிலும், திருவாவடு துறை தனிப்பெருஞ் சிறப்பிடத்தைப் பெற்றிருத்தலை அனைவரும் அறிவர்.

இத்தகைய திருவாவடுதுறை ஆதீனத்திற்குரிய கோயில்கள் பலவற்றுள் ஒன்ருகிய, திருவாவடுதுறைக் கோமுக்தீசுவர சுவாமி (மாசிலாமணி ஈசுவரர்) கோயிலில், திருவாவடுதுறை ஆதீன 22-வது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாணையின் படி, சிறந்த முறையில் திருப்பணிகள் செய்யப்பெற்று அண்மையில் (27—8—72 ஞாயிற்றுக்கிழமை காலை) திருக்குடமுழுக்குவிழா நிகழவிருப்பது அறிந்து மிகவும் மகிழ்கின்றேன்.

திருவாவடுதுறைத் தலத்தின் சிறப்பும், அங்கு அமைந்துள்ள ஆதீனத்தின் சிறப்பும் அள விட முடியாத பெருமையுடையவை. மிகப் பெரியதும் பழமை வாய்ந்ததும் ஆகிய சிறப்பு மிக்க இக்கோயிலுக்கு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள், தம்முடைய அருளாட்சிக் காலத்தில் திருப் பணிகள் செய்வித்துக் குடமுழுக்கு விழா நிகழ்த்துவது, ஒரு சிறந்த நற்பேறேயாகும். சுவாமிகளின் காலத்தில் இத்தகைய பற்பல திருப்பணிகள் மேன்மேலும் சிறப்புற நடைபெற்றுச் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கி வளரவும், குடமுழுக்கு விழா நன்கினிது நிகழவும், விழாச் சிறப்பு மலர் சைவ நறுமணம் கமழ்ந்து செந்தமிழ்த்தேன் பிலிற்றும் வகையில் வெளி வரவும், எல்லாம் வல்ல திருவா வடுதுறை அண்ணலின் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி காட்டும் வெண்ணெய்ப்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான பானு ஆகிக்
குயிலாரும் பொழில் திருவாவடுதுறைவாழ் குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு நீடுழி தழைக மாதோ !

சேலம் சின்னக் கடை வீதி திரு. சின்ன மாரியம்மன் ஆலயத்தில், பால் அங்காடிக் கட்டிடத்திற்கு மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. மூ. கண்ணப்பர் அவர்கள் அடிக்கல் நாட்டுதல். (17—4—72).

விடுதலை நாள்

வெள்ளிவிழாக் கவியரங்கில்

தமிழக முதல்வரின்

தலைமைக் கவிதை

[நமது இந்திய நாட்டின் விடுதலை நாள் வெள்ளி விழாவை ஒட்டி, சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற ''விடுதலை வீரர்கள்'' பற்றிய கவியரங்கத்திற்குத் தலைமை தாங்கி, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் தமிழவேள் டாக்டர் திரு. கலைஞர் அவர்கள் வழங்கிய தலைமைக் கவிதையும், பாடும் கவிஞர்களின் அறிமுகக் கவிதையும், இங்கு மகிழ்ச்சியுடன் போற்றி வெளியிடப் பெறுகின்றன. (15—8—72)

— ஆசிரியர்.]

அவை கூடி வந்திருக்கும் அனைவர்க்கும்
அழகு தமிழ்ப் பாவலர்க்கும் நாவலர்க்கும் அமைச்சர்க்கும்
என்புருவம் எனினும் அன்புருவம் சிலம்புக்கும்
என் தலைதாழ்ந்த வணக்கங்கள்.........
அன்னைத்திரு நாட்டோரே,
என்னை உங்கள் ஊழியனாய் ஏற்றுள்ளீர்.
சொன்ன சொல் தவறாமல் செயல்படுவேன்
எனக்கூறி இற்றை நாளில் வணங்குகின்றேன்......

அள்ளிமுடித்த கூந்தலிலே பூவோடும்—கீழே
துள்ளிவிழாக் கெண்டை மீன் விழியோடும்
புள்ளி மேவும் புதுக்கோலச் சித்திரத்தில்—விடுதலைக்கு
வெள்ளிவிழா என எழுதிக் காட்டுகின்ற
இந்தியத்துப் பெண்ணே—இளம்மாதே! எழுச்சிக்குத் தாயே!
விந்தியத்துக் கப்பாலே வீரத் தமிழகத்தில்

பந்தயத்துக் குதிரை போல் பாய்ந்தோடித் தியாகத்தீயில்
முந்திக்கொண்டு குதித்திட்ட மறவர்க்கு வாழ்த்துக் கூறு ; நான் வணக்கம் செய்வேன் !
இருபத்தைந்தாண்டுகளாய் எரிகின்ற விளக்கைக்கண்டோம்.
அவ்விளக்கில்
இரத்தத்தை எண்ணெய்எனப் பெய்து ஏற்றிவைத்த
எம்மனோர் பாட்டன்மாரைத் தொழுது நின்றோம்!
குயில் கூட்டம் பாடுகின்ற கோலச் சோலையிலே
கோட்டான்கள் காட்டுக்கூச்சல் கேட்டிடவோ?
மானாடும் பொழில்—மயிலாடும் பூங்கா—
மந்திகளின் ஒய்யார மண்டபமாய் மாறுவதோ?
தென்றல் நுழைய வீடு கட்டி—அதில்
தீ புகவே விட்டிடவோ?

எங்கள் நாடு—எங்கள் மக்கள்—எங்கள் ஆட்சி
திங்கள் முகமெனச் சிறு குறையிருப்பினும்
எங்கள் நாடு—எங்கள் மக்கள்—எங்கள் ஆட்சி
சிங்கமறவர்—தங்கமங்கையர்—காப்பார் என்று
பொங்கு தமிழில் புவிக்குணர்த்துவோம்!......

சிறை வாழ்ந்தார் செக்கிழுத்தார்—இந்தத்
தரையாண்ட வெள்ளையரை விரட்டுதற்குக்
குறை ஆயுள் பெற்றுப்பலர் கொலையும்உண்டார்.
உறைமீறி வெளிவந்த கத்திபோல
உயிர்மீது ஆசையின்றிப் போர் புரிந்தார்.
அவர் பெருமை கூறுதற்கு
அணிவகுத்த இந்த நாளில்
விடுதலைக்கு உயிரீந்த
எவர் பெருமை கூறுதற்கும்
இவர் போலக்
கவி வளத்தைப் பெற்றேனில்லை.
கவிதை பாடக் கற்றேனில்லை. (அடிமைத்)
தலையறுத்த வீரர் கதை பாடுவதால்
தலையகற்றிப் பாடுகின்றேன் நானும்—அவர்
தொடைதட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்
தொடைதட்டும் என் பாட்டும் ! என் கவிதை
யாப்பின்றிப் போனாலும் போகட்டும்—
நம்நாடு, மொழி, மானம், உணர்வெல்லாம்
காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கையொன்றால்
வாய்ப்பின்றிப் போனாலும் செய்யுள் கற்க,
காய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல்—நெஞ்சில்
ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கிக்
கூறுகின்றேன், நாட்டோர் உணர்வதற்கு-நன்று கேட்பீர் !

எத்தனை உயிர்கள்
எத்தனை ரத்தம்
நித்தமும் தந்து பெற்றது விடுதலை !
இத்தரை குடைந்து மெத்தவும் உழன்று

பத்தரை மாற்றைப் பெற்றபின் அதனைக்
கைத்திறம் காட்டி அணிநகை பூட்டிச்
சித்திரப் பெண்டிர் களித்திட லின்றிக்
குப்பைக் குழியில் போடுதல் நன்றோ?
புட்கள் கூவிடும் பூங்கா நடுவே
முட்கள் கீறிடப் பறித்தநல் ரோஜா
கட்கம் ஏந்திய வீரர் முடியில்
வெட்கம் ஏந்திய மாதர் குழலில்
இருந்திடல் மணமா?
குட்டம் கொண்டோன் குறுகிய கையில்
கசங்கிடல் நலமா?
பெற்ற சுதந்திரம் பேணிக் காப்போம்.
பெற்ற தலைவர்க்கும் பெருமைகள் சேர்ப்போம்.
உற்றார், சுற்றம், ஒருவர்—இருவர்
உயர்வுடன் வாழ்தல் சுதந்திரம் ஆமோ?
கற்றார்—கல்லார்—கழனியில் உழல்வோர்
சிற்றூள்—கொல்லர்—சிறுதொழில் செய்வோர்
மாதர் நல்லார் மாணவ மணிகள்
தீதறு வாழ்வில் திளைத்தலே சுதந்திரம்.
இந்தக் கொள்கை இனிது விளங்க
மந்தக் கொள்கை மாய்ந்து விலகச்
சந்தத் தமிழில் ஒலிப்போம் இன்று!

•

அரைஆடை மனிதராக—பாலில் பொங்கும்
நுரைபோன்ற தூயமனத் தலைவராக,
கரைகாண முடியாத அன்பின் பெருக்காக—இந்தியத்
தரையாளும் உரிமை நமக்கு வாங்கியவர் காந்தியன்றோ?
அவரை—இந்நேரம்
நினையாதொழியின் நம் உள்ளம் அடையாது சாந்தியன்றோ?
நெருப்பிலே பூங்கொடி சிரிக்குமென்றால் அதிசயந்தான்!
அந்த அதிசயத்தைக் காட்டிநின்ற அண்ணல் அவர்—
அண்ணல் வகுத்தவழி
அயராதுழைத்த நேரு,
இளமையின் எழிலை
இருட்டுச் சிறையிலே கழித்த தியாகி.
எண்ணெ இட்ட கடுகாய் வெடிக்கும்கோபம்—எனினும்
எண்ணெயிட்டார் விடுதலை வேள்விக்கென்போம்.
பணியின் விரைவைப் பம்பரம் என்பர்.
பண்டிதர் பணியோ பம்பரம் தோற்கும்.
இடி இடிக்கும் பேச்சில்—இளமைத்
துடி துடிக்கும் எழுத்தில்—தேன் ஒரு
படி இனிக்கும் பண்பில்—அதிர்
வெடி முழக்கும் செயலில்—விடாப்
பிடி யிருக்கும் குணத்தில்—விடுதலைக்
கொடியிருக்கும் கையில்—கொஞ்சம்
முடியிருக்கும் தலையில்!

(இங்கென்ன வாழ்கிறதோ ? எனக் கேட்காதீர் என்னைப் பார்த்து)
நீதிக்கு எதிரான வற்றை யெல்லாம்
நேர்நின்று எதிர்த்ததாலே நேருவானுர்—
காலத்தின் கோலம் காட்டுக்கு ராஜாவாய்க் கர்த்தபம் ஆகும்.
ஏலத்தில் சிலபேர் கோபுர உச்சியில் குந்திக் கொள்வர்—பின்னர் வீழ்வர்! இந்திய
ஞாலத்தின் தலைவராய் ஜவகர் ஆனது இவ்விதமல்ல. அவர்—
சேலத்து மாம்பழம்—சென்னைக் கடற்கரை
கொற்கை முத்து—கொள்ளே கால் பட்டு
தஞ்சைக் கோயில்—தண்புனல் காவிரி
தறியில் காஞ்சி—தடந்தோட் பாண்டியன்
அவர் வழிவந்தோர்
ஆயிரம் ஆயிரம் . . எவர்பெயர் சொல்லி எவர் பெயர் விடுக்க?
அத்தனை பேரையும் இயம்பிடல் இன்று
இயலாதென்றே எண்ணிச்சிலரைக்
கணக்காய் வகுத்துக் கவிதை புனைந்திட
வானெலி நண்பர் விடுத்த அழைப்பும்
தேனெலியாய் என்செவியில் விழுந்திடப்
பேரொலி முழங்கும் சூழல் விடுத்துப் — புலவர்கள்
சீரொலி கேட்க ஓடிநான் வந்தேன்.



கொளஞ்சியப்பர் திருக்கோயிலில் 19—8—72ல் தமிழக முதல்வர் டாக்டர் "கலைஞர் கருணுநிதி இலவசக் கண் சிகிச்சை" முகாமை, விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள் தலைமையில் தெ.ஆ. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். சண்முகசிகாமணி ஐ.ஏ.எஸ்., அவர்கள் துவக்கி வைத்தபொழுது எடுக்கப்பட்டது.

அமரகவி பாரதியார்

இங்கு,
பாரதிபற்றிப் பாடுதற்கோர் பாரதி வந்துள்ளார்.
சுப்பிரமணிய பாரதியின் சுவையான தமிழ்ப்பாட்டைச்
சுத்தானந்த பாரதியின் புதுப்பாட்டில் கேட்டிடலாம். .
மாக்கவியென்று பாரதியைப் போற்றுகின்றுர்
நான் ஒப்பவில்லை......அறைத்த
மாக்கவியா பாரதியார்...... இல்லை...இல்லை யாப்
பணியாரக் கவியா ?
யாப்பு அணி ஆரக் கவியா?
மாக்கவிதான்...அரி
மாக்கவி
தலைக்கவியவர்—நாட்டு விடு
தலைக் கவியவர் !
தலைப்பாகை
முறுக்கிவிட்ட குத்துமீசை
நடுநடுங்க எதிரிகளை
ஓடவைக்கும் பார்வைப் பகலவனும் பாரதியார்!
தலை—
பா—
கை—
முறுக்கிவிட்ட குத்து மீசை
கை முறுக்கிவிட்ட குத்து
மீசை நடுநடுங்க எதிரிகளை ஓடவைக்கும்
பார்வைப் பகலவனும்......பாரதியார்
" ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள் " எனப்பாடும்
அவன் சீற்றம் கண்டீரோ!
'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே!'
அடைவதற்குள் அறுதியிட்டுச் சொன்னவனும்
அடலேறு மொழி பகரும் மன்னவனும்—
அவனைப்பாட நான் மிக மிகச் சின்னவனும்—
அதனுலே; இவர் முற்றும் துறந்தவர் என்றுலும்—
பற்றுத் துறக்காதவர் — தமிழ்ப்
பற்றுத் துறக்காதவர் — பலமொழி
கற்றும் மறக்காதவர் — தாய்மொழியை
மறக்காதவர் — இங்கே
சிறக்காதவர் — இங்கே
சிறக் காதுஅவர் பாரதிபற்றிப்
பாடாவிட்டால். . அவர்பாடுகின்றுர் — இப்போது

(சுத்தானந்த பாரதியார் பாடுகிறுர்)

அடுத்து,

கப்பலோட்டிய தமிழன்

" திருவும் புகழும் சிறந்தன பிறவும்
மருவற நிற்கும்என் மாசிலா மனைவியே!
என்னரும் உயிரினும் என்னுயிர் உளத்தினும்
மன்னுறப் பாதியை மகிழ்ந்துனக் களித்தேன்
பின்னுறப் பாதியைப் பெரியநம் தேயத்தின்
தன்னடிக் களித்தேன் சத்தியம் இஃதே'' என்னும்
அகவற் பாவால் அகத்தினைத் திறந்த
தகவுடை மேலோன் தமிழர் தலைவன்
தூத்துக்குடியில் சுதேசிக் கப்பலைப்
பார்த்த வெள்ளையர் பதைத்திடும் வண்ணம்
ஓட்டிக் காட்டி ஓட்டாண்டி யாகிக்
கோவைச் சிறையினில் கொள்கை காத்திடச்
செக்கிழுத்த நம் செம்மல் வ. உ. சி.
சிறப்பினை விளக்கிடச் சென்னையில் ஒருசிலை
முன்னரே வைத்துப் புகழ்பெற்றோம் எனினும்,
அடுத்த திங்கள் ஐந்தாம் நாளினில்
இந்தியப் பிரதமர் இந்திரா அம்மையார்
சிந்தை உவந்து மேலுமோர் சிலையினைத்
தூத்துக்குடியில் திறந்திட இசைந்துள்ளார்.
விஞ்சு புகழார்க்கு நம்அஞ்சல் துறையினர்
திணைவுத் தலையும் நிகழ்த்தலை நினைத்தனர்.
சிறைசென்ற தியாகி சிதம்பரனுர் போல்
சிறைசென்று தியாகம் செய்த நம்நண்பர்
செந்தமிழ்க் கவிபுனை சிந்தை படைத்திட்ட
சுந்தரம் வந்துள்ளார் கவிதை தந்திட.

(திரு. எஸ். டி. சுந்தரம் பாடுகிறர்)
அடுத்து

வ. வெ. சு. அய்யர்

மூத்த குடிபிறந்த மூதறிஞர் வாழுகின்ற தமிழகத்தில் புகழ்
யாத்த குடிப்பிறந்த வ. வே. சு. அய்யர் எனும் விடுதலை உறுதி
ஏற்ற குடித்தோன்றல் ஏராள அல்லலுற்றார்.
நீர்வீழ்ச்சிச் சேட்டையினுல் அன்றொருநாள்
பேரதிர்ச்சிப் பெரும்புயலைத் தமிழ் நாடு தாங்கிற்றந்தோ!
வ. வே. சு. அய்யரெனும் — அவ்
வாய்மைகொள் செயல்மறவர்
ஆவேச நீர்ச்சுழலில் சிக்கி
அன்றொருநாள் மாய்ந்துவிட்டார்.
இன்றந்தச் சுதந்திர வீரரை நம்முன்
எழுந்து நடமாடச் செய்ய வந்துள்ள இக்
கொழுந்து யார்?
இக்கால ஔவை போல் தக்கபடித் தமிழ்பாடும்
மிக்க திறனுடைய சௌந்தராகைலாசம்
அம்மையார் கவிதையைத் தம்மகள் மூலமாய்
நம்மவர்க்கிங்கே நயமாய் அனுப்பினுர்.
பாடுக செல்விநீ கேட்ட தாலாட்டை.
(திருமதி சௌந்தரா கைலாசம் சார்பில் அவர் மகள்
பத்மினி பாடுகிறர்)
அடுத்து,

சுப்பிரமணிய சிவா

சிம்மக் குரலோன் சிவாஎனத் திகைத்து
நம்மை ஆண்டவர் நடுநடுங்கி அஞ்சுமாறு
நோயின் கொடுமையுடன் நாளெல்லாம் கால்நடையாய்த்
தாயின் விலங்கொடிக்கத் தாயகத்தைச் சுற்றிவந்து
திருச்சிச் சிறைக்கோட்டம் சிறக்கக் கைதாகி
இருட்படலம் நீக்கும் எழுஞாயிறு போன்ற
சுப்ரமணியசிவா என்னும் ஒப்பற்ற தியாகியினைப்
பாடுதற்கு வல்லார் யார்?
உப்பில்லா உணவு உருப்படுமா? கொத்தமங்கலம்
சுப்பில்லாக் கவியரங்கம் சுவைதருமா? கொத்தமல்லிக்
கொப்பு குழம்பினிலே மணக்கும். என் நண்பர்
கொத்தமங்கலம்
சுப்பு கவிதையெலாம் மணக்கும்—கேட்ட தமிழ்
நெஞ்சமெலாம் இனிக்கும்.
சிவசிவா என்று சும்மா இருக்காமல் இவ்வயதில்
சிவாபற்றிக் கவிபாட அவாவுற்று வந்தவரே
அவை ஏருது போம்— நீர் இந்த
அவையேருது போம் என்று சொல்லிவிட்டால் இங்கேநல்ல
சுவைஏருது போகுமன்ருே?
சப்பென்று போகாமல் அவைக்குச் சுவைதரும்
சுப்பு அவர்களே!
(திரு. கொத்தமங்கலம் சுப்பு பாடுகிருர்)
அடுத்து

சண்பகராமன்

பற்று வைத்தல் தவறன்று; பாவமன்று-ஆனுல்
பற்ற, கொஞ்சம் முற்றிப்போய் வெறியாக மாறுமாகில்
விபரீதம் பலவாய் விளைவதுண்டு நாட்டில்,
ஏகாதிபத்தியத்தை இந்திய நாட்டினின்று
போகச் செய்யாவிட்டால் வேகாது இந்தவுடல்
அந்நியரை விரட்ட வேருேர் அந்நியரைத்
துணைகோடல் நன்றென்றும் துணிவுகொண்ட ஓரிளைஞர்
நேத்தாஜி போசுக்கும் மூத்த வழிகாட்டியாய்
செருமானியர் படையுதவி பெறுவதற்கும் முயன்றவராம்
நாஞ்சில் தமிழ்மண்ணில் நல்ல பழங்குடியில்
தோன்றிப் புகழோடு மாய்ந்த சண்பகராமன்
வெளிநாட்டிற் செத்தாலும் வெந்தபின் தன் சாம்பல்
துளிகள் தமிழ்நாட்டில் தெளிக்கப்பட விரும்பும்
மானம் படைத்தவொரு மறத்தமிழன் தீரத்தைக்
கானம்பாடி நமைக் களிப்பிக்க வருபவரோ
வானம்பாடியாம் — பூவிரியுஞ்சோலைக்
காவிரிக் கரைதோன்றிப் பாவிரிக்கும் —
பண்பாளர்,
பண்டைநாள்,
நண்பர்தான் — நற்கவிதை விருந்தொன்றை
உண்பதற்குத் தருவார் உவந்து !
(திரு. வானம்பாடி பாடுகிருர்!)

வாஞ்சி நாதன்

அடுத்து,
வன்முறை தீவிரவாதம் இவையெலாம்
நன்முறையாகா ; நாட்டுக்குத் தீமைதான்
அண்ணலும் அண்ணனும் அமைத்த நற்பாதை
அகிம்சைதான் எனினும் அன்றுநம் முன்னோர்
அன்னியர் ஆட்சியை அகற்றிநம் அடிமைத்
தளையினை அறுத்திடத் தகாவழி நாடுதல்
பிழையில்லை என்றும் சிற்சிலர் பேசினர்.
தவறுதான் இல்லையென அவருள் ஒருவராய்
வாஞ்சிநாதன் வளர்ந்தார் புயலாய் !
ஆங்கில ஆட்சியின் பிரதிநிதியாக அன்று
ஆஷ்துரை என்பான் நெல்லையில் இருந்தான்.
மணியாட்சி நிலையம் வண்டிவந் தடையவும்
கணித்து வைத்தவாறு வாஞ்சிநாதன் குழுவினர்
வளைத்தனர் வண்டியை ; கைத்துப்பாக்கிக் குதிரையை
இழுத்தனர் வாஞ்சி ; இறந்தான் வெள்ளையன்.
தன்மான உணர்வால் தன்னையும் விட்டுத்
தற்கொலை யுண்டார் வாஞ்சி — தவித்தது
அவர்தம் குடும்பம்.
காஞ்சித் திணையெனில் காத்தலே யன்றோ?
வாஞ்சியும் சுதந்திரம் காத்த வரலாற்றினை இந்தத்
தருணம் மறவாது தாவருகின்றார்
அருணாசலம் — இனி அவர் உரை கேட்போம்.
(திரு கே. சி. எஸ். அருணாசலம் பாடுகிறார்)

திருப்பூர்க் குமரன்

அடுத்து,
சென்னிமலை பிறந்து திருப்பூர் குடியேறி
மன்னும் இமயம்போல மாப்புகழின் நாயகனாய்
தியாகச் செம்மல்களின் திசைகாட்டும் பேரொளியாய்
தமிழுள்ள நாள்தொட்டும் தளராத உணர்வின் எடுத்துக் காட்டாய்,
தன் பெண்டு தன் தாய் தன்குடும்பம் பாராமல்
தாய்நாட்டின் மானம் தனைக்காத்தல் கடமையெனப்
போராட்டக் களத்தில் புனித நெஞ்சத்தால் கலந்து
தேரோட்டம் காணத் திரள்வதுபோல் அணி, அணியாய்
வருகின்ற தொண்டர்க்கு வாகான தலைவனாய்த் தெம்பு
தருகின்ற வீரனாய் வள்ளலாய் உறுமுகின்ற
அதிகாரம் ஆதிக்கம் கண்டும் அஞ்சாது
பிடித்த கொடியினைப் பிடிவாதம் தளராது
அடித்தும் விடாமல் அங்கேயே உயிர்நீத்த
சாகாத குமரன் அவன்கொடி காத்த குமரன்
மிதந்திடும் தியாக வானில் மின்னிடும் துருவ விண்மீன்
சுதந்திரக் கோவிலுக்குள் புதைந்துள்ள விக்ரகத்தைச்
சிதம்பர ரகுநாதன், இங்கே
இதம்பெறக் காட்டக் கேட்போம்.
(திரு. தொ. மு. சிதம்பர ரகுநாதன் பாடுகிறார்)

விடுதலை வித்தகர்கள்

அடுத்து,
எழுவரின் பெயரை ஈங்கே எழுதிநாம் காட்டிவிட்டோம்
கழிபெரும் சுதந்திரத்தைக் கண்டவர் இவர்கள் தாமா?
கோபுரக் கலசம் போலே குன்றின் மேல் விளக்குப்போலே
மாபெரும் புகழ்பெற்றோர்கள் மற்றையோர் எத்தனைபேரோ?
மண்ணுக்குள் மறைந்திருக்கும் ஆணிவேர் போலே
கண்ணுக்குப் புலனாகாத தியாகிகள் எத்தனை பேர்?
நாயுடு நாயக்கர் முதலியார் என்று
செந்தமிழ் நாட்டின் முந்தைய தலைமுறைக்கு
விடுதலை வேட்கை வித்தூன்றியவர்கள் ஆன
வரதராசலு, பெரியார் ஈ. வே. ரா. ... திரு. வி. க.,
ஜீவா எல்லாம்
பெயர் தெரியாதோர் பட்டியல்தானா?
அயர்விலா தின்னும் முயல்வோமானால்
ஏராளம் பேர்இருப்பரே தியாகிகள்
தாராளமாக அவர் புகழ் பாடிய—என் தனி நண்பர்
தமிழ் அன்பர்—
எங்கிருந்தாலும்
பொங்கும் செந்தமிழால்
ஆடிப்பெருக்குபோல் அழகு தமிழ்ப்பாக்கள்
பாடிப் பெருக்கும் பாவரசென்னும்
கண்ணதாசன் எண்ணம் உணர்ந்திடும்
வண்ணம் பொறுமையாய் வந்துள்ளோம் அணைவரும்
சுதந்திரக் கிளியே இதந்தருஞ் சொல்லில்
மிதந்திடும்குயிலே மெல்லிசை கேட்போம்
வருக வருக தருகநின் கவிதை.
(கவிஞர் கண்ணதாசன் பாடுகிறார்)

"சித்திரச் சோலைகளே உமைநன்கு
திருத்த இப்பாரினிலே — முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ,
உங்கள் வேரினிலே?"

"தாமரை பூத்த தடாகங்களே — உமைத்
தந்தஅக் காலத்திலே — எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே"

என்ற புரட்சிக் கவிஞரின் வரிகள்
நன்றென எண்ணி நாட்டு விடுதலை
வெள்ளி விழாவினை வெற்றியாய்க் கடந்து
உள்ளம் உவக்க ஒப்பிலாப் பொன்விழா
விரைவில் வருகென விழைகிறேன்.
பெறுகஎன் வாழ்த்தும் வணக்கமும் நன்றியும்!

திருமாலின் ஐந்து நிலைகள்

டாக்டர் திரு. ந. சுப்பு ரெட்டியார் M.A., Ph.D.,
தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி

வைணவ சமயக் கொள்கைப்படி இறைவனுக்கு உருவம் உண்டு. அந்த உருவம் 'திவ்விய மங்கள விக்கிரகம்' என்று வழங்கப் பெறும். இந்த உருவம் பரத்துவம் என்றும், வியூகம் என்றும், அர்ச்சாவதாரம் என்றும் ஐந்து வகையோடு கூடியிருக்கும். இந்த ஐந்து நிலைகளையும் ஒரு சிறிது விளக்குவோம்.

பரத்துவ நிலை:

காலம் நடையாடாததும் ஆனந்தம் அளவிறந்து ஒப்பற்றதாயும் உள்ள நித்திய விபூதியல் (வைகுந்தத்தில்) இருக்கும் இறைவனுடைய இருப்பே பரத்துவம் ஆகும்.

"கண்கள் சிவந்து பெரியவாய்,
வாயும் சிவந்து கனிந்து, உள்ளே
வெண்பல் இலகு சுடர், இலகு
விலகு மகர குண்டலத்தின்,
கொண்டல் வண்ணன், சுடர்முடியன்,
நான்கு தோளன், குனிசார்ங்கன்,
ஒண்சங்கு கதைவாள் ஆழியான்,
ஒருவன்."

என்ற பாசுரப் பகுதியில் (திருவாய் 8.8:1) இறைவனுடைய திவ்விய மங்கள உருவம் காட்டப்பெற்றுள்ளது. பிறிதோர் இடத்தில் (திருவாய் 2.5:1to7) நம்மாழ்வார் அவனுடைய உருவம் முழுவதையும் காட்டுகின்றார். கண்டாரை ஈர்க்கும் பேரழகு மிக்க இந்த உருவத்தை 'அயர்வறும் அமரர்கள்' என்று வழங்கப்பெறும் அனந்தன், கருடன், சேனை முதலியார் (விஸ்வக் சேனர்) முதலிய நித்திய சூரிகளும் இவ்வுலகத் தளைகளினின்றும் விடுபட்ட முத்தரும் அநுபவித்துக் கொண்டிருப்பர். இந்த விவரங்கள் யாவற்றையும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் பல இடங்களில் பரக்கக் காணலாம். இச்செய்திகள் யாவும் பாஞ்சராத்திரம் போன்ற வைணவ ஆகமங்களில் கூறப் பெற்றுள்ளவையே. பரத்துவ நிலையிலுள்ள ஈசுவரனை (நாராயணனை) 'பரவாசுதேவன்' என்று வழங்குவர் வைணவப் பெருமக்கள்.

வியூக நிலை:

பரவாசுதேவன் லீலா விபூதியில் (இந்த உலகில்) அதன் படைப்பு, காப்பு, அழிப்பு இவற்றை நடத்துவதற்காகவும், சம்சாரிகட்கு வேண்டியவற்றை ஈந்து வேண்டாதவற்றைப் போக்கி அவர்களைக் காத்தற் பொருட்டும். வீடு பேற்றினை விரும்பித் தன்னை இடையறாது உபாசிப்பவர்கட்கு (சிந்திப்பவர்கட்கு) அவர்களது தளைகளை அகற்றித் தன்னை வந்தடைவதற்குக் காரணமான பேருளைச் சுரப்பதற்காகவும் வியூக வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்நன், அநிருத்தன் என்ற பெயர்களுடன் வடிவங்கொண்டு இருக்கும் நிலையே வியூக நிலையாகும். இந்நிலையைத் திருமழிசையாழ்வார்;

"ஏகமூர்த்தி மூன்றுமூர்த்தி
நாலுமூர்த்தி நன்மைசேர்
போகமூர்த்தி புண்ணியத்தின்
மூர்த்திஎண்ணில் மூர்த்தியாய்
நாகமூர்த்தி சயனமாய்
நலங்கடற் கிடந்துமேல்
ஆகமூர்த்ந யாயவண்ணம்
என்கொலாதி தேவனே"

என்ற பாசுரத்தில் (திருச்சந்த விருத்தம்-17) குறிப்பிடுவர். இதில் 'ஏகமூர்த்தி' என்பது, பரவாசுதேவனை. 'மூன்று மூர்த்தி' என்றது, சங்கர்ஷணன், பிரத்யும் நன், அநிருத்தன் ஆகிய அவதாரங்களைக் குறிப்பது. நாலுமூர்த்தி என்பது, பிரதானம், புருடன் (சீவான்மா), அவ்யக்தம் (நுண்நிலை) காலம் என்ற தத்துவங்

களாகும். 'போகமூர்த்தி' என்பது, போகத்திற்குத் தகுதியுள்ள வடிவம், 'புண்ணியத்தின் மூர்த்தி' என்பது, புண்ணியமே வடிவு கொண்ட ஓர் உருவம். 'நாக மூர்த்தி' என்பது அனந்தன் மீது, 'உறங்குவான் போல் யோகு செய்யும் பெருமான்.' இந்த வியூக நிலையைத் திருமங்கையாழ்வாரும் (பெரிய திருமொழி 6.6:6) நம்மாழ்வாரும் (திருவாய்-4.3:3) குறிப்பிட்டுள்ளதைக் கண்டு தெளியலாம்.

இவற்றுள் வாசுதேவ வடிவமான பரத்துவ நிலையில் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீர்யம், தேஜஸ் என்ற ஆறு குணங்களும் நிறைந்திருக்கும். ஏனைய மூன்றிலும் அவரவர்கள் மேற்கொண்ட செயலுக்குத் தக்கவாறு ஒவ்வொன்றிலும் இரண்டு இரண்டு குணங்கள் விளக்கமாக இருக்கும்.

சங்கர்ஷணன் ஞானம், பலம் என்ற இரண்டு குணங்களோடு கூடிப் பிரகிருதிக்குள் (மூலப்பொருளில்) உருமாய்ந்து கிடக்கும் உயிர்த்தத்துவத்திற்குத் தலைவனாக நின்று (அதிஷ்டித்து) அதனைப்பிரகிருதியினின்றும் வேருக்கிப் பிரத்யும்ந நிலையையும் அடைந்து வேதம் முதலிய சாத்திரங்களை வெளியிடுவதையும் உலக அழிப்பையும் செய்பவனாக இருப்பான். மதுகைடவர் என்ற அசுரர்கள் நான்முகனிடமிருந்து நான் மறைகளைப் பறித்துக்கொண்டு கடலில் மூழ்கி மறைந்து விட, ஞான ஒளியைத்தரும் பெரும் விளக்கான அம்மறைகள் ஒழிந்தமை காரணமாக உலகெங்கும் பேரிருள் மூடி தலியா நின்றது. அவ்வமயம் சங்கர்ஷணன் கடலினுள் புக்கு அவ்வசுரர்களைத் தேடிக் கண்டறிந்து அவர்களைக் கொன்று வேதங்களை மீட்டுக் கொணர்ந்து அன்ன உருவமாய் நான்முகனுக்கு உபதேசித்து அருளினன்.

இவ்வரலாற்றைத் திருமங்கை மன்னன்,

"முன் இவ்வேழ் உலகுணர்வு இன்றி இருள்மிக
உம்பர்கள் தொழுது ஏத்த
அன்னம் ஆகிஅன்று அருமறை பயந்தவனே"

என்று குறிப்பிடுவர் (பெரிய திருமொழி-5.3:8). உலக அழிப்பினைப் பேயாழ்வார்,

"பாலகனாய் ஆல்இலைமேல்
பைய உலகெல்லாம்
மேல் ஒருநாள் உண்டவனே"

என்று பேசுவர் (மூன்றும் திருவந்தாதி-33). இக்கருத்தினையே நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் (3.7:10) தெளிவாக்குவர்.

பிரத்யும்நன் ஐசுவரியம், வீர்யம் என்ற இரண்டு குணங்களோடு கூடி ஞானத்திற்கு ஊற்றுவாயான 'மனஸ்' என்ற தத்துவத்திற்குத் தலைவனாக நின்று சாத்திர முறைப்படி ஒழுக வேண்டிய சுத்தவர்க்க சிருஷ்டியையும் செய்பவராக இருப்பார். அநிருத்தன் சக்தி, தேஜஸ் என்ற இரண்டு குணங்களோடு கூடி உலகப் பாதுகாப்பிற்கும் ஈடேறுவதற்குத் தகுதியான தத்துவ ஞானங்களைக் கொடுத்தற்கும், காலப்படைப்பிற்கும், மிச்ரவர்க்க சிருஷ்டிக்கும் உரியவனாக இருப்பார். சுத்தவர்க்க சிருஷ்டி, மிச்ரவர்க்க சிருஷ்டி இவைபற்றிய விவரங்களை வைணவ ஆகமங்களில் காணலாம்.

கிளை வியூகங்கள் :

மேற்கூறிய நான்கு வியூகங்களும் ஒவ்வொன்றும் மும்மூன்றாகப் பன்னிரண்டு கிளை வியூகங்களாகப் பிரியும். வியூக வாசுதேவனிடத்துக் கேசவன், நாராயணன், மாதவன் என்ற கிளைகளும், சங்கர்ஷணனிடம் கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன் என்பவைகளும், பிரத்யும்நனிடத்துத் திருவிக்ரமன், வாமனன், சிரீதரன் என்பவைகளும், அநிருத்தனிடத்து இருடிகேசன், பத்மநாபன், தாமோதரன் என்பவைகளும் தோன்றி அவ்வப் பெயர்களைப் பெறும். இவையாவும் பன்னிரண்டு திங்களின் தலைவர்களாக இருக்கும். இவற்றின் அறிகுறியாக வைணவர்கள் தம் திருமேனியில் துவாதசமாகத் திருமாண் காப்பிட்டுக் கொள்வர். இவற்றின் உண்மைகளை வேறொரு சந்தர்ப்பத்தில் ஆராய்வோம்.

விபவம் :

விபவ அவதாரங்கள் எண்ணிறந்தவை, அவை முக்கிய அவதாரம்' அல்லது சாட்சாத் அவதாரம்' என்றும் கௌணவதாரம், 'அல்லது ஆவேச அவதாரம்' என்றும் இரண்டு வகையாகப் பிரிவுபடும். முக்கிய அவதாரம் தேவ, மனித, விலங்கு (திர்யக்கு) தாவரம் என்ற உட்பிரிவுகளாகும். தேவதாவதாரங்களில் விஷ்ணு, உபேந்திரன், திரிவிக்கிரமன் என்பனவும் இன்னும் பலவும் அடங்கும். மனிதாவதாரங்கள் என்பவை நர நாராயண,

இராம கிருஷ்ணாதி அவதாரங்களாகும். விலங்கு அவதாரங்களில் அயக்கிரீவம், மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம் முதலியவை அடங்கும், தாவர அவதாரம் நைமிசாரண்யத்தில் குட்டை மாமரமாய் (குப்ஜாம்ரம்) அவதரித்ததாகும். இவை யாவும் பகவானது இச்சையாலே வந்தவை. "இவை ஆதிஅம் சோதி உருவை அங்கு வைத்து இங்குப் பிறந்த" (திருவாய்-3.5:5) வையாதலின் பிறப்பு இறப்பு அற்றவனை இறைவனது தன்மைகளைக் கொண்டவை. ஆகவே, இவை வீடு பேற்றில் விருப்பமுள்ளவர் கட்கு (முமுட்சுகளுக்கு) உபாசிக்கத் தக்கவை. ஆவேச அவதாரம் ஒரு செயல் நிமித்தம் ஆன் மாக்களிடத்து ஆவேசித்ததாகும். அது ஸ்வருப ஆவேசம், சக்தி ஆவேசம் என இரு வகைப்படும். முதல் வகையில் பரசுராம, பலராம அவதாரங்களும், இரண்டாவது வகையில் நான்முகன், சிவன், அக்னி, வியாசன், குபேரன் முதலான ஆன்மாக்களில் சக்தியை அதிஷ்டிப்பித்து நிற்கின்ற அவதாரங்களும் அடங்கும். இவை முமுட்சுக் களுக்கு உபாசிக்கத் தகாதவை. ஆனல் இவ்வுலக இன்பத்தில் இச்சையுடைய புபூட்சுக் களுக்கு உபாசிக்கத் தக்கவையே. இன்னும் பல கருத்துக்கள் 'அவதார இரகசியங் களாகவே' உள்ளன. இவ்வவதாரங்கள் யாவும் சேதனர்கள் உய்யும் பொருட்டு ஈசுவரனின் இச்சை காரணமாக ஏற்பட்டவை. ஆகவே, நம்மாழ்வார் இறைவனைக் குறிப்பிடுமிடத்து, "பிறப்பு இல் பல்பிறவிப் பெருமான்" (திருவாய்-2.9;5) என்றும் திருமங்கையாழ்வார், "பிறப்பிலி (பெரிய திருமொழி-3.7:8) என்றும் பேசுவர். இந்த அவதாரங்களின் பலன் அடைந்தாரைக் காக்கை, அவர்களின் விரோதிகளைப் போக்குகை, வைதிக தர்மத்தை நிலை நிறுத்துகை (கீதை-4:8) ஆகியவை ஆகும்.

இந்த அவதாரங்கள் யாவும் ஆழ்வார் பாசுரங்களில் குறிப்பிடப் பெறுகின்றன. இவற்றுள் இராம-கிருஷ்ண அவதாரங்கள் அதிகமாகவும், வாமனம், நரசிம்மம், வராகம் முதலியவை அவற்றுக்கு அடுத்துக் குறைவாகவும், குறிப்பிடப் பெற்றுள்ளன. முன்னவை மக்களிடையே தோன்றி அதிககால அளவு பழகினமையே இதற்குக் காரணமாகக் கொள்ளலாம். இதன் காரணமாக இறைவனின் மங்கள குணங்களை மக்கள் அநுபவிப்பதற்கு வாய்ப்புக்கள் மிக்கு இருந்தன. எனவே ஆழ்வார் பெருமக்களும் அவற்றில் மிகவும் ஈடுபட்டுப் பேசுகின்றனர்.

அந்தர்யாமித்துவம் :

சேதனர்களின் உள்ளே புக்கிருந்து எல்லாச் செயல்கட்கும் தான் ஏவுபவனுக இருப்பதோடன்றி அவர்கட்குத் தியானருசி பிறந்த போது தியானத்திற்கு உரியவனுதற் காகவும் அவர்களைக் காப்பதற்காகவும் அழகே வடிவெடுத்தாற் போன்ற மங்களகரமான திருமேனியுடன் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பெற்றவனுய்ப் பெரிய பிராட்டி யோடு கட்டைவிரல் அளவாக ஒவ்வொருவர் இதய கமலத்திற்'குள்ளே எழுந்தருளியிருக்கும் இருப்பே இந்நிலையாகும். இந்த நிலையை நம்மாழ்வார்,

"யான்ஒட்டி என்னுள்
இருத்துவன் என்றிலன்
தான் ஒட்டி வந்துஎன்
தனிநெஞ்சை வஞ்சித்து
ஊன்ஒட்டி நின்றுஎன்
உயிரில் கலந்து"

என்றும் (திருவாய். 1.7:7),

"யாது அவங்களும் சேர்கொடேன் என்று
என்னுள் புகுந்திருந்து
தீதுஅவம் கெடுக்கும் அமுதம்"

என்றும் (திருவாய்-2.7:1),

"வெள்ளைச் சுரிசங்கோடு ஆழிஏந்தித்
தாமரைக் கண்ணன்என் நெஞ்சினூடே
புள்ளைக் கடாகின்ற ஆற்றைக்
காணீர்"

என்றும் (திருவாய்-7.3;1),

தம் பாசுரங்களில் குறிப்பிடுவர். இவற்றிற் கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற் போல்,

"கல்லும் கனைகடலும்
வைகுந்த வான்நாடும்
புல்லென்று ஒழிந்தனகொல்
ஏபாவம் வெல்ல
நெடியான் நிறங்கரியான்
உள்புகுந்து நீங்கான்
அடியேனது உள்ளத்து அகம்"

என்று (பெரிய திருவந்தாதி-68) பின்னும் பேசுவர்.

---

* ருசி—பாவச் செயல்களையோ, புண்ணியச் செயல்களையோ அறிந்தே செய்தற்குக் காரணமாக உள்ள சுவை.

Q2 m24, N59TK N72 ...
14870

அர்ச்சாவதாரம் :

அர்ச்சாவதாரம் என்பது,
" தமருகந்தது எவ்வுருவம்
அவ்வுருவம் "

என்ற பொய்கையார் பாசுரப்படி (முதல் திருவந்தாதி-44) அன்பர்கள் எதைத் தனக்குத் திருமேனியாகக் கொள்கின்றனரோ அதனையே இறைவன் தனக்கு உவப்பான வடிவமாகக் கொண்டுள்ள நிலையாகும். இந்நிலையில் இறைவன இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இன்னாரிடத்தில் தோன்றிச் சந்நிதி பண்ண வேண்டும் என்கின்ற நியமம் இல்லாதபடி தான் விரும்பிய எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் எவரிடத்திலும் தோன்றிச் சந்நிதி பண்ணி, நீராட்டம், தளிகை, இருப்பு முதலிய எல்லாச் செயல்களை உடையவனாகக் கொண்டு திவ்விய தேசங்களிலும் அன்பர்களின் திருமாளிகைகளிலும் எழுந்தருளியிருப்பான். " உண்டியே உடையே உகந்தோடும் " (பெருமாள் திருமொழி-3:4) உலகியலில் மண்டியிருப்போருக்குத் தன்பக்கம் ருசி உண்டாக்கலும், ருசி பிறந்தபிறகு தன்னைத் துதிப்பவர்களுடைய கண்ணுக்கும் நெஞ்சுக்கும் இனிதாம்படி போக்கியத்திற்கு இடமாய் இருத்தலும், தன்னை உபாயமாகப் பற்றும் அளவில் எல்லா உலகினரும் உபாயமாகப் பற்றுதற்குத் தகுதியாயிருத்தலும் பரமபதத்தில் போய் அநுபவிக்க வேண்டாமல்.

" அண்டர்கோன் அணிஅரங்கன்
என் அமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக்
காணாவே "

என்று திருப்பாணாழ்வார் அநுபவித்தவாறு (அமலனாதிபிரான் 10) அநுபவிக்கத் தக்கதாக இருத்தலும் இந்த அர்ச்சாவதாரத்தில் முற்றுப் பெற்றிருக்கும்.

எல்லா ஆழ்வார்களும் இந்த அவதாரத்தில் தான் அதிகமாக ஈடுபட்டுப பேசுபவர். சுருங்கக்கூறின், நாலாயிரத்தின் பாசுரங்கள் யாவும் இந்த அவதாரத்தைப் பற்றியவையே. திரு அரங்கத்தில் அழகிய மணவாளனின் திருஉருவத்தில் ஈடுபட்ட தொண்டரடிப் பொடிகள்,

" இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் "

என்று (திருமாலை-2) கூறிப் போந்தார். அதே எம்பெருமானின் திருமேனி அழகை அநுபவித்த ஆண்டாளும், " என் அரங்கத்து இன்னமுதர் குழல்அழகர் வாய்அழகர் கண் அழகர் கொப்பூழில் எழுகமலப் பூ அழகர் " என்று (நாச்சியார் திருமொழி-11:2) கூறி மகிழ்வதையும் காணலாம்.

பக்திசாரர் என வழங்கப்பெறும் திருமழிசை யாழ்வார் திருக்குடந்தை ஆராவமுதனிடம் ஓர் உரையாடலையே நிகழ்த்துகின்றார். எம்பெருமானின் சயனத்திருக்கோலத்தில் ஈடுபட்டு,

" நடந்த கால்கள் நொந்தவோ?
நடுங்க ஞாலம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ?
விலங்கு மால் வரைச்சுரம்
கடந்த கால் பரந்த
காவிரிக் கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்து இருந்து
பேசு; வாழி, கேசனே "

என்று (திருச்சந்தவிருத்தம்-61) சயனித்திருப் பதற்குக் காரணம் வினவுகின்றார். இவரது பக்தப் பெருக்கில் திளைத்த எம்பெருமானும் இவருக்கு மறுமொழி தருவான் போல் எழுந்திருக்க முயல, அந்த அழகில் " சிறுமா மனிசரின் " (திருவாய்-8.10:3) கண் எச்சில் படும் என்று எண்ணிய ஆழ்வார் 'வாழி கேசனே!' என்று கூற, பெருமாளும் தலையைத் தூக்கியபடியே இருந்து அவருக்குச் சேவை சாதித்தாராம். அந்த நிலையிலேயே இன்னும் சேவை சாதித்து வருகின்றார். திருக்குறுங்குடி நம்பியின் பேரழகைக் கண்டு பராங்குசநாயகி, பரகாலநாயகி இவர்களின் நெஞ்சு பறிபோனதை அவ்வவ்வாழ்வாரின் பதிகம் (முறையே, திருவாய் 5.5: பெரிய திருமொழி9.5) நன்கு விளக்குகின்றது.

இதுவாய் :

இக்கூறியவற்றால் ஆழ்வார்கள் வணங்கும் கடவுள் நாராயணன் என்பதும், அவர்கள் " மறந்தும் புறந்தொழா மாந்தர் " (நான்முகன் திருவந்தாதி-68) என்பதும், 'மற்றும் ஓர் தெய்வம் உளது என்று இருப்பாரொடு உற்றிலார் " (பெரிய திருமொழி-8.10:3) என்பதும், அவர்கள் வணங்கும் நாராயணன் ஐந்து நிலைகளில் இருந்துகொண்டு சேதனர்களை உய்விப்பான் என்பதும், இந்த ஐந்து நிலைகளில் ஆழ்வார்கள் பாடியிருந்தாலும் அர்ச்சையில் தான் அவர்கள் அதிகமாக ஈடுபட்டு இருந்தனர் என்பதும், அவர்களது ஈடுபாட்டிற்கு' நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் என்னும் தமிழ்மறை சான்றாக நிற்கின்றது என்பதும் நாம் அறியக் கிடக்கின்றன.

அடுத்த கட்டுரை :
'பன்னிரு திருநாமத்தின் பெருமை'

எம்பெருமானும் யானையும்

மகாவித்வான், பத்ம விபூஷண்

திருமிகு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள்,

காஞ்சிபுரம்

வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை
விழுமிய முனிவர் விழுங்கும்
கோதில்இன் கனியை நந்தனார் களிற்றைக்
குவலயத்தோர் தொழுதேத்தும்
ஆதியை அமுதை என்னை ஆளுடை
அப்பனை ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழும் மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே.

என்பது, திருவல்லிக்கேணி பற்றித் திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ள (பெரிய திருமொழி 2-ஆம் பத்து 3-ஆம் திருமொழிப்) பதிகத்தின் இரண்டாம் பாடல். இதன்கண் "நந்தனார் களிறு" என எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் புகழ்ந்து குறிப்பிட்டருளியிருக்கின்றார்: "நந்தகோபருடைய திருமாளிகையில் யானைக் கன்று போல் விளையாடினவன்" என்பது அத்தொடரின் பொருள். இதனால் யானைக்கும் எம்பெருமானுக்கும் பலவகையில் ஒப்புமைப் பண்பு உண்டு என்று தெரிகின்றது. அவற்றுட் சிலவருமாறு :

(1) யானை, எத்தனை தடவை பார்த்தாலும் பார்க்கும்போதெல்லாம் அபூர்வ வஸ்துபோலவேயிருந்து பரமாநந்தத்தைத் தரும். எம்பெருமானும் "அப்பொழுதைக் கப்பொழுதென் னாராவமுதமே" என்னும்படியிருப்பன்.

(2) யானையின்மீது ஏறவேண்டியவன் யானையின் காலைப்பற்றியே ஏறவேண்டும்; எம்பெருமானிடம் சென்று சேரவேண்டியவர்களும் அவனது திருவடியைப் பற்றியே சேர வேண்டும்.

(3) யானை தன்னைக் கட்டத் தானே கயிறு கொடுக்கும்; "எட்டினோடிரண் டெனுங் கயிற்றினால்" (திருச்சந்தவிருத்தம்) என்கிறபடி எம்பெருமானைக் கட்டுப்படுத்தும் பக்தியாகிற கயிற்றை அவன்றானே தந்தருள்வன். "மயர்வற மதிநலம் அருளினன்" என்பது காண்க.

(4) யானையை நீராட்டினாலும் அடுத்த கணத்திலே அழுக்கோடே சேரும்; எம்பெருமான் சுத்த ஸத்வமயனாய்ப் பரமபவித்திரனாயிருக்கச் செய்தேயும் "பொய்ந் நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும்" உடைய நம்போல்வாரோடே சேரத் திருவுள்ளமாயிருப்பன் வாத்சல்யம் என்னும் பெருங்கருணையினாலே.

(5) யானையைப் பிடிக்கவேண்டில் பெண் யானையைக் கொண்டே பிடிக்க வேண்டும். பிராட்டியின் புருஷகாரமின்றி எம்பெருமான் வசப்படான்.

(6) யானை, பாகனுடைய அநுமதியின்றித் தன் பக்கல் வருபவர்களைத் தள்ளிவிடும்; எம்பெருமானும் "வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்றபடி அடியார்களை முன்னிட்டுப் புகாதவரை அங்கீகரித்தருளான்.

(7) யானையின் மொழி யானைப் பாகனுக்கே தெரியும்; எம்பெருமானுடைய மொழி திருக்கச்சி நம்பி போல்வார்க்கே தெரியும். பேரருளாளனோடே பேசுமவரிறே நம்பிகள்.

(8) யானையினுடைய நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதல் முதலிய தொழில்கள் பாகனிட்ட வழக்கு; எம்பெருமானும் "கணி

கண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி மணிவண்ணா நீ கிடக்கவேண்டா-உன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்" என்றும், "கிடந்தவாறெழுந்திருந்து பேசு" என்றுஞ் சொல்லுகிற திருமழிசைப்பிரான் போல்வார்க்கு இணங்கி, அவர்கள் விரும்பியவாறெல்லாம் இசைந்து ஒழுகுவான்.

(9) யானை உண்ணும்போது இறைக்கும் அரிசி, பலகோடி நூறுயிரம் எறும்புகளுக்கு உணவாகும். எம்பெருமான் அமுதுசெய்து எஞ்சிய பிரசாதத்தாலே பலகோடி பக்த வர்க்கங்கள் உய்திபெறக் காண்கிறோமிறே.

(10 யானைக்குக் கை நீளம்; எம்பெருமானும் அலம்புரிந்த நெடுந்தடக்கை யனிறே: "நீண்ட அத்தக்கருமுகிலை யெம்மான்றன்னை" என்பர் ஆழ்வார்.

(11) யானை இறந்தபின்பும் உதவும்; எம்பெருமானும் தீர்த்தம் சாதித்துத் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினபின்பும் இதிகாச புராணங்கள் அருளிச்செயல்கள் மூலமாகத் தனது சரிதைகளை உணர்த்தி உதவுகின்றானிறே.

(12) யானைக்கு ஒரு கையே உள்ளது; எம்பெருமானுக்கும் கொடுக்குங்கை யொழியக் கொள்ளுங்கை இல்லையிறே.

(13) பாகனுக்கு ஜீவனங்கள் சம்பாதித்துக் கொடுக்கும் யானை; எம்பெருமானும் அர்ச்சக பரிசாரகர்களுக்கு அங்ஙனம் செய்தருள்வன். ஆதலால் அவனுக்குக் களிறு முற்றுவமையாம். இங்ஙனே மற்றும்பல உவமைப் பொருத்தங்கள் கண்டுகொள்க.

திருச்சி மாவட்டம் திருமாந்துறை திரு. ஆம்ரவனேசுவரர் கோயிலில் நடைபெற்ற ஆலயத்தூய்மைப் பரிசளிப்பு விழாவில், திருச்சி உதவி ஆணையர் திரு. என். சீனிவாசன், B.A., B.L., அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல்.

மயில் ஏறும் இராவுத்தன்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

'இராவுத்தன்' என்பது தமிழிற் கலந்து வழங்கி வரும் ஓர் அராபியச் சொல். இதற்குக் குதிரைவீரன் என்பது பொருள். இது 'ரவா' 'துதா' என்னும் இரு சொற்களினின்று தோன்றியதாக அறிஞர்கள் கூறுவர். ரவா-அரசன்; துதா-செய்தியாளன். அரசனுக்கு அல்லது அரசனிடமிருந்து, செய்தி கொணரும் குதிரை வீரன் என்னும் பொருளில், பண்டை நாளில் இச்சொல் வழங்கிவந்தது. இச்சொல் நாளடைவில், அராபிய நாட்டினின்று தமிழகத்திற்குக் குதிரைகள் கொணர்ந்து விற்கப் போந்த, இசுலாமியர் குலப் பெருமக்களைக் குறிப்பதாயிற்று.

குதிரைவீரன் என்னும் பொருளையுடைய இராவுத்தன்' என்னும் இச்சொல்லின் அமைப்பும் தோற்றமும் பொருளும் பற்றிய ஆராய்ச்சி எவ்வாறுயினும் இஃது இந்நாளில் இசுலாமிய குலத்துப் பெருமக்களையே குறிப்பதாக வழங்கி வருவதனை அனைவரும் அறிவர். முசுலீம்களிற் பலர், தம்முடைய பெயரோடு இச்சொல்லைச் சேர்த்துத் தம்மை வழங்கிக் கொள்ளுகின்றனர். முசுலீம்களில் ஒருவகை இனத்தார்க்குரிய சிறப்புப் பெயராகவே, இந்நாளில் இச்சொல் கையாளப் பெற்று வருகின்றது,

அருணகிரிநாதர் :

ஆயினும் இவ்வினிய சொல்லை, முருகனுக்கு உரிய பெயர்களுள் ஒன்ருக, முருகன் அடியார்களுள் தலைசிறந்த ஒருவர் ஆகிய அருணகிரிநாதர், விதந்தெடுத்து வழங்கி மகிழ்கின்ருர்.

" கண்டுண்ட சொல்லியர் மெல்லியர்
காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேல்மறவேன்;
முது கூளித் திரள்
டுண்டுண் டுடுடுடு டூடே
டுடுடுடு டுண்டுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி ஆட
வெஞ்சூர்க்கொன்ற ராவுத்தனே "

" படிக்கும் திருப்புகழ் போற்றுவன் ;
கூற்றுவன் பாசத்தினற்
பிடிக்கும் பொழுதுவந்து அஞ்சல்!
என்பாய் ; பெரும்பாம்பில் நின்று
நடிக்கும் பிரான் மருகா ! கொடுஞ்
சூரன் நடுங்கவெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயில்
ஏறும் இராவுத்தனே "

— கந்தர் அலங்காரம்.

எனவரும் பாடல்களில், அருணகிரிநாதர் முருகப்பெருமானை 'இராவுத்தன்' என்று சிறந்தெடுத்துப் புகழ்ந்து போற்றியிருத்தல் காணலாம்.

முசுலீம் மக்களைக் குறிக்கும் 'இராவுத்தன்' என்னும் சொல்லால், அருணகிரிநாதர் முருகப் பெருமானைக் குறிப்பிட்டுத் துதித்துப் பாடியிருப்பது நாம் பெரிதும் சிந்திப்பதற்கு உரியது. இஃது அவர்தம் காலநிலையினையும், அவரது சமரச மனப்பான்மையினையும் இனிது விளக்குவதாகும்.

சபாசு, சலாம் :

திருப்புகழ் என்னும் தெய்வநலஞ் சான்ற சிறந்த இனிய பாடல்களைப் பாடியருளிய அருணகிரிநாதப் பெருமான் பிரபுடதேவமாராயர் என்னும் விசயநகரச் சிற்றரசனின் காலத்தில் வாழ்ந்தவராகத் தெரிகின்றது. ஆதலின், அவர்தம் காலம் கி. பி. 15-ஆம் நூற்றுண்டாகும். முசுலீம் மக்கள் தென்னகத்திற் பரவிப் பெருகி வாழ்ந்துவரத் தலைப்பட்டு, ஆங்காங்கே ஆட்சிசெய்தும் வந்தகாலம் அது. எனவே, அக்காலத்தில் இசுலாமியச் சொற்கள் பல, தமிழ் நாட்டு மக்களின் பேச்சு வழக்கிற் பரவிக் கலப்பனவாயின. " கடிசொல் இல்லை காலத்துப்படினே " என்னும் தொல்காப்பிய நூற்பாவினைத் தழுவி, ஒரோவழி 'சபாசு' (Shah Abbas) 'சலாம்' என்பன போன்ற சில சொற்கள், தமிழ்க் கவிதைகளிலும் இடம் பெறலாயின.

"கற்ப கந்திரு நாடுயர் வாழ்வுறச்
சித்தர் விஞ்சையர் மாகர் சபாசுஎனக்
கட்ட வெங்கொடு சூர்கிளை
வேர்அற விடும்வேலா"
"சுராதி பதிமால் அயனொடு சலாம்இடு
சுவாமி மலை வாழும பெருமாளே"

என அருணகிரிநாதர் தாமே, தமது திருப்புகழ்ப் பாடல்களில் சுபாசு, சலாம் என்னும் அயல் மொழிச் சொற்களை வழங்கியிருத்தல் காணலாம்.

அருணகிரிநாதரின் அருள் உள்ளம் :

அருணகிரிநாதர், பரந்து விரிந்த சிறந்த உள்ளம் உடையவர்; நல்ல சமரச மனப் பான்மை வாய்ந்தவர்; எங்கிருந்தாலும் நல்லோரையும் நல்லனவற்றையும் இகழாது தழுவி ஏற்று மகிழும் இயல்புடையவர்; மொழி சமயம் இனம் முதலியனபற்றிய குறுகிய நோக்கங்கள் இல்லாதவர்; மக்களிடையே அன்பையும் ஒற்றுமையையும் பண்பாட்டையும் வளர்க்கும் குறிக்கோள் கொண்டவர். அவர்தம் திருப்புகழ்ப் பாடல்களில், செந்தமிழ் நலம் சிதையாமல், ஏற்றபெற்றி வடமொழியும் கலந்து, சந்தநலம் செறிந்து சிறந்தினிது நிற்கும்; சைவ வைணவ சமரச நோக்கும் போக்கும், அருணகிரிநாதரால் பெரிதும் போற்றப்பட்டன. "காசுக்குக் கம்பன், கருணைக்கு அருணகிரி" என்பது பழமொழி. இறையருளில் திளைத்து இன்புற்ற அருணகிரிநாதரின் தூய அருள் உள்ளத்தில், இனவேறுபாடு முதலிய குறுகிய நோக்கங்கள் இடம்பெற்றில. அதனால், அவர் தமது வழிபடு கடவுளும் தமிழ்த் தெய்வமும் ஆகிய முருகனையே 'இராவுத்தன்' எனக் கூறி மகிழ்ந்து புகழ்ந்து போற்றுகின்றார்!

தமிழகத்தின் சமரச ஞானம் :

நம் தமிழகம், தொன்றுதொட்டே சமரச ஞான நன்னெறியைத் தழுவி ஒழுகி வரும் பெருஞ்சிறப்புடையது. திருவள்ளுவர் எல்லாச் சமயங்களும் ஏற்கும் வண்ணம், பொதுமறையாகத் தமது திருக்குறளை இயற்றியருளினர். இளங்கோ அடிகள், சிவபிரான்-திருமால்-கொற்றவை-முருகன்-அருகன் முதலிய பல சமயக் கடவுளரையும் வேறுபாடுஇன்றி, ஆங்காங்கு ஏற்றபெற்றி போற்றிப் புகழ்ந்து பாடிச் சென்றார். தாயுமானவர், வேதாந்த சித்தாந்த சமரச ஞானநெறியைப் பரப்பி யருளினர். இராமலிங்க அடிகளார், சத்தியஞான சமரசசன் மார்க்க சங்கம் கண்டு, சமயம் கடந்த மோன சமரச நெறியினையே வலியுறுத்தி வளர்த்தார். அருளாளர்களின் நெறியனைத்தும் ஒன்றே யாகும் அன்றோ?

"இராவுத்தன்" என்னும் சொல்லை, வீரன் என்னும் பொருளில் முருகனைக் குறிக்க அருணகிரிநாதர் வழங்கியிருப்பதும், இத்தகைய சமரச ஞான நன்னெறியின் பயனாய், இந்துமுசுலீம் ஒற்றுமையை வளர்க்க விரும்பிய அவர்தம் திருவுள்ளச்சிறப்பினையே விளக்குவதாகும் எனலாம்.

முருகனின் தலங்கள் :

மேலும், முருகனுக்கும், முசுலீம் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதனைப் பழநி, கதிர்காமம் முதலிய இடங்களில் இன்றும் காணலாம். பழநியில் உள்ள முருகனை முசுலீம் பெருமக்கள் இன்றும் வழிபட்டு வருகின்றனர். இலங்கையில் இருக்கும் கதிர்காமம் என்னும் தலத்தில் உள்ள முருகனை, இந்துக்கள் மட்டுமேயன்றி இசுலாமியரும் பௌத்தரும் கிறித்தவர்களும்கூட, மிக்க பக்தியுடன் திரளாக வந்து வழிபட்டுச் செல்கின்றனர். திருப்பரங்குன்றம் மலைமேல் முசுலீம் கோயில் ஒன்று இன்றும் உள்ளது. திருத்தணிகையில் முருகன் கோயில் வாயிலின் தென்புறம் "பிரசன்ன காதர் ஈசுவரர்" சந்நிதி என ஒன்றுள்ளது. காதர் என்ற நவாபு ஒருவர் தனக்கு நேர்ந்த ஒருபெரும் இடர்ப்பாடு தீரப் பெற்றதனால், இங்கு ஓர் இலிங்கத்தை நிறுவி வழிபட்டு வாத்திய மண்டபத்தையும் கட்டி வைத்ததாகப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

சுவைமிகு செய்திகள் :

மற்றும், இங்கு ஒருவகையில் இயைபு உடைமை பற்றி, இந்து முசுலீம் ஒற்றுமை குறித்த சில சுவைமிகு செய்திகள், அறிந்துகொண்டு இன்புறத்தக்கன. நாகூர் முதலிய பல இடங்களில், இந்துக்கள் எத்தகைய வேறுபாடும் கருதாமல் முசுலீம் தர்க்காக்களில் அன்புடன் வழிபாடு செய்தலைக் காண்கின்றோம். குணங்குடி மஸ்தான், கபீர்தாசர் முதலிய இசுலாமியப் பெருமக்களை, இந்துக்கள் பெரிதும் மதித்துப் போற்றி வருகின்றனர். மைசூரை ஆண்ட ஐதர்அலி, திப்புசுல்தான் என்னும் மன்னர்கள் இருவரும் தாம் இசுலாமியராக இருந்தும்கூட, இந்து மதத்தில் மிக்க ஈடுபாடு

கொண்டிருந்தனர் எனவும், இந்துக் கடவுள ருக்கு நன்கொடைகள் பல அளித்தனர் எனவும் தெரிகின்றது. நஞ்சன்கூடு என்னும் இடத்தில் உள்ள நஞ்சுண்டேசுவரர் கோயிலில் விளங்கும் சிவலிங்கத்தை ஐதர்அலியே வழங்கினர். ஆதலால், இதற்கு ஐதர்லிங்கம் என்ற ஒரு பெயரும் உண்டாம். மராத்தியப் படைகள் கொள்ளையிட முயன்றபோது, சிருங்கேரி சங்கரா சாரியர் மடத்திற்குத் திப்புசுல்தான் தக்கபாது காப்புகளும் நன்கொடைகளும் பெரிதும் வழங்கினராம்.

மாணிக்கவாசகர் பொருட்டுச் சிவபெரு மான் குதிரை கொணர்ந்தபோது, அரேபிய முசுலீமின் வடிவத்திலேயே வந்ததாகக் கொண்டு, ஆவணிமூலநாள் விழாவில் குதிரை கொணர்ந்து நிறுத்துவதற்காக மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில், இன்றும் ஒரு முசுலீம் அன்பரே இருந்து பணியாற்றி வருகின் றனர். ஸ்ரீரங்கம் திருநாராயணபுரம் என்னும் புகழ்மிக்க வைஷ்ணவத் தலங்களில், பெரு மாளின் காதலியாகத் துலுக்கநாச்சியார் என ஒரு திருவுருவம் இருப்பதும், அதற்கு ரொட்டியும் வெண்ணெயுமே நிவேதனம் செய்யப்படுவதும், நாம் அறிந்து மகிழ்தற் குரியன.

இனி, வேறொரு முதன்மையான செய்தியும் இங்கு நாம் குறிப்பிடுதற்கு உரியது. இந்து மதத்திற்குரிய பிரமாண நூல்களுள் உபநிட தங்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன என்பதை அனைவரும் அறிவர். 'பிரஸ்தானத்திரயம்' என்னும் நூல்களுள், உபநிடதங்களும் ஏற்றுத் தழுவிக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்து மதத்திற்குரிய உபநிடதங்களின் உயர்வும் சிறப்பும் அறிந்து போற்றி, அவற்றை உலகிற் பரப்பிய பெருமை, ஒரு முசுலீமுக்கே உரிய தாகும். நம்முடைய நாட்டில் அரசுபுரிந்த மொகலாய அரசர்களுள் ஒருவரான ஷாஜகான் என்பவரின் மூத்த புதல்வனும், அவுரங்கசீப் மன்னனின் அண்ணனுமான தாராஷுகோ என்னும் புகழ்பெற்ற சிறந்த பேரறிஞர், கி பி. 1657-ஆம் ஆண்டில் பல புலவர்களின் உதவியைக் கொண்டு, ஐம்பது முதன்மையான உபநிடதங்களைப் பாரசீகத்தில் மொழிபெயர்த் தார். இம்மொழி பெயர்ப்பினைக் கொண்டே ஐரோப்பிய அறிஞர்கள் கி. பி. 1801-ஆம் ஆண்டில், இலத்தீன் மொழியில் முதன்முதலில் உபநிடதங்களை மொழிபெயர்த்தார்கள். அதற்குப் பிறகுதான், மேலை நாட்டில் இந்திய நாட்டு உபநிடதங்களின் பெருமை பரவலாயிற்று. இந்தியத் தத்துவஞான நூல் களாகிய உபநிடதங்களின் சிறப்பு, இங்ஙனம் ஒரு முசுலீம் மன்னவ குமாரனால் உலகத்திற் பரவிவளரத் தலைப்பட்டதென்பது, ஒருவகை யில் வியப்பிற்குரிய செய்தியேயன்றோ!

தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்த புலவர் பெரு மக்களுள் சீறாப் புராணம் இயற்றிய உமறுப் புலவர் (17ஆம்நூ) குலாம் காதிறு நாவலர் (19ஆம்நூ), செய்குத்தம்பிப் பாவலர் (1872-1950), முதலிய முசுலீம் கவிஞர்கள் சிறப்பாகக் குறிப் பிடத்தக்கவராவர், இவர்களில் செய்குத்தம்பிப் பாவலர் என்பவர், வடலூர் இராமலிங்க அடி களின் திருவருட்பாவில் மிகுந்த ஈடுபாடு உடையவர். இராமலிங்க அடிகளின் பாடல் கள் அருட்பாக்களே என்பதனை வற்புறுத்திப் பல சொற்போர்கள் செய்து வெற்றி பெற்றவர். அவர் செய்து காட்டிய சதாவதான நிகழ்ச்சி ஒன்றில், "கண்கெட்ட பின் என்றும் காணாத காட்சியைக் கண்டனரே" என்னும் பொருள் முரண் அமைந்த ஈற்றடி கொடுக்கப்பட்ட போது, அதனைச் சைவ நாயன் மார்களுள் ஒருவரான கண்ணப்பரின் வரலாற்றொடு இயைத்து இணைத்து,

"விண்தொட் டசையும் தருமலி
கானில் மிகுதிண்ணனார்
பண்பட்ட செந்தமிழ்ப் பாவாணர்
போற்றும் பரமன்விழி
புண்பட்ட தென்றுதம் கண்ணைப்
பெயர்த்துப் பொத்தி இரு
கண் கெட்ட பின் என்றும் காணாத
காட்சியைக் கண்டனரே"

என்று மிகப் பொருத்தமாகவும் சிறப்பாகவும் ஓர் அழகிய ஆசு கவியைப் பாடியருளினர். இதனால் இசுலாமியர் ஆகிய அவருக்குச் சைவம் முதலிய பிற சமய நூல்களில் இருந்த பயிற்சியும் புலமையும் ஈடுபாடும் எத்தகையன என்பதை யாவரும் இனிதுணரலாம்.

இவ்வாறே திருவையாற்றில் அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்து மறைந்த, சித்திரகவிச் சரபம், ஆசு கவி வேந்தர் திரு. அப்துல்கபூர் சாகிப் அவர்களும், சிறப்பாக இங்குக்குறிக்கத் தக்கவர் ஆவார். செந்தமிழ்ப் புலமையில் சிறந்திருந்த அவர். திருப்புகழ்ச் சந்தங்களைப் பின்பற்றிப் பல பாடல்களைப் பாடியதுடன்,

திருமுருகாற்றுப்படை நூலையும் நாள்தோறும் இனிய முறையில் ஓதிப் பாராயணம் செய்யும் இயல்புடையவராக விளங்கியிருந்தார். இத்தகைய சமய சமரச நோக்கம் கொண்ட சான்றோர்கள் எத்தனையோ பலர் தமிழகத்தில் இப்போதும் இருந்து வருகின்றனர்!

முடிவுரை :

இத்தகைய சமய சமரசஞான நல்லுணர்வு, உலகமெங்கும் தழைத்து வளர்ந்தோங்கிப் பரவி, மக்கட் குலமனைத்தும் ஒருகுலமாய்த்தக் காங்கு உவந்து இனிதுஒன்றிவாழ, ''மயிலேறும் இராவுத்தன்'' ஆகிய முருகனின் மலரடிகளை வாழ்த்தி வணங்குவோமாக!

— ஆசிரியர்

(செய்திச் சுருக்கம்)

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவத்தானத்தைச் சேர்ந்த மலைக் கோயிலில். 25-7-72 ஆம் தேதி, செவ்வாய்க் கிழமையன்று சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஓமலூர் ஏ. எம், பாஷா பஸ் சர்வீஸ் நிறுவன முதலாளி திரு. ஜனுப் ஏ. எம். பாஷா அவர்கள், தம் பிரார்த்தனையைச் செலுத்தும் வகையாகத் தேவத்தானத்தில் ரூபாய் 750/- செலுத்திவைத்துத் தங்கரத சுவாமி புறப்பாடு பிரார்த்தனையைச் செலுத்தினர். தங்கரத சுவாமி புறப்பாடு செய்தவர்களுக்கு இத் திருக்கோயிலில் இருந்து வழங்கும் பிரசாதங்களைத் திரு. ஏ. எம். பாஷா அவர்கள் பெற்றுக் கொண்டார். இசுலாம் மதத்தைச் சேர்ந்த அன்பர் ஒருவர் கட்டணம் செலுத்தித் தங்கரத சுவாமி புறப்பாடு செய்தது, இதுவே முதல் தடவையாகும். இச் செயல் பெரிதும் மகிழ்ந்து போற்றுதற்கு உரியது.

சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், திருஅத்தனூர் அம்மன் ஆலயத்தில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள், பக்தர்கள் தங்கும் விடுதிக்கு அடிக்கல் நாட்டுதல் (16—4—72).

நற்றமிழ்ப் பெரியரும், கொற்றவேற் கலியனும்

திரு. தி. அ. அனந்தாழ்வான்,
காஞ்சிபுரம்

திருமாலுவந்து எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளுள் திருக்கோவலூர் தனிச் சிறப்புடைத்தாம். நற்றமிழ் போற்றும் ஆழ்வார்கள் தம் அருளிச் செயலே, வைணவத்தின் அடிப்படை என்பது கற்றுணர்ந்தார் தந்துணிபு. இத்தகு அருளிச்செயல் முதன்முன்னம் விளைந்த தலம் திருக்கோவலூராம். வில்லிபுத்தூராழ்வார் இத்திருத்தலத்தைப் போற்றுவான்,

'' பாவருந் தமிழாற் பேர்பெறு
பனுவற் பாவலர் பாதிநா ளிரவின்
மூவரும் நெருக்கி மொழிவிளக் கேற்றி
முகுந்தனைத் தொழுத நன்னாடு ''

என்று பாடினர். இப்பாடலின்கன் இடம்பெற்ற வரலாறு யாவருமறிந்ததே எனினும், ஈண்டுச் சுருங்க உரைக்கின்றோம் :

சீராரும் மாடத் திருக்கோவலூரின் கண்ணே, காரார்கருமுகில் பெருமழை பொழிந்ததொரு நாள் இரவிலே, கவிஞர் போரேறு, பெருந்தமிழர், தமிழ்த்தலைவர் ஆகிய முதலாழ்வார்கள், மாமுனியொருவர் தம் இல்லத்தின் இடைகழியில் ஒருங்குற்றனர். அதுபோழ்து கோவல்மாயன் இருளில் நெருக்கப் பொய்கைப்பிரானும், பூதத் திருவடிகளும் கதிர்ஞான நல்விளக்கேற்றப், பேயர் மாமலராள் தன்னெடும் மாயனைக் கண்டுகளித்து அந்தாதி பாடியருளினர். இம்மூவரும்அருளிச் செய்தவையே 'நற்றமிழ்' என்று நாம் நயந்தினிது போற்றத் தக்க முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றும் திருவந்தாதி என முறையே வழங்கப்படுவனவாம்.

இங்ஙன் இவர்கள் அருளிச்செய்த திருவந்தாதிகளே திவ்வியப்பிரபந்தத்துள் முன்னம் தோன்றியவை. '' மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து நற்றமிழால் நூல் செய்து நாட்டையுய்த்த—பெற்றிமையோர் என்று முதலாழ்வார்கள் என்னும் பெரியவர்க்கு நின்ற துலகத்தே நிகழ்ந்து '' என்று தணவாத சொல் மணவாள மாமுனிகளும், இவர்கள் தம் பெருமையைத் தெரிவித்தருள்கின்றார். இதனால் இவர்களுடைய பாடலின் சீர்மையும் உரைக்கப் பட்டது. இத்தன்மைத்தாய இத்தொன்மைத் தமிழ்ப் பாடலின் தோற்றம், கொற்றவேற் கலியன்றன் பாடலின்கண் உய்த்துணரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. என்னை? பன்னிரு ஆழ்வார்களுள் பன்னருஞ்சீர்க் கலியன் பின்னிட்டவதரித்தவர் என்பது நாம் அறிவோம். ஆதலின் திருமங்கையாழ்வார் இவ்வரிய நிகழ்ச்சியைத் தமது பாடலில் உணர்த்தியிருப்பதாகக் கூறுதலில் குற்றமொன்றுமின்றும்.

திருமங்கைமன்னன் மன்னுபுகழ்த் திருக்கோவலூரை, '' மஞ்சாடு வரையேழும் '' பதிகத்தால் மங்களாசாசனம் செய்தருளுகின்றார். இப்பதிகத்தின் நான்காம் பாடலில் முற்கூறிய வரலாறு கூறப்பட்டுள்ளது. அப்பாடல் வருமாறு :

தாங்கரும்போர் மாலிபடப் பறவை யூர்ந்து
தராதலத்தோர் குறைமுடித்த தன்மை யானை
ஆங்கரும்பிக் கண்ணீர்சோர்ந் தன்பு கூரும்
அடியவர்கட் காரமுதம் ஆனான் றன்னைக்
கோங்கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக்
குழாவரிவண் டிசைபாடும் பாடல் கேட்டு
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே ''

திருக்கோவலூரின் வளத்தை வருணிக்கும் இப்பாடலில், "நற்றமிழாம் திவ்வியப்பிரபந்தம் பாடியருளிய பெரியோர்களாகிய முதலாழ்வார்களின் சிறப்பியல்புகள் விளக்கிக் காட்டப் பட்டுள்ளமை இனி உணர்த்தப்படும். "ஆங் கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூரும் அடியவர்" என்பதை முதலில் நோக்குவோம். முதலாழ்வார்களை உணர்த்தும் இவ்வடியில், கண்ணீர் சோர்பவர் ஒருவர், அன்பு கூர்பவர் ஒருவர், அடியவர் ஒருவர். ஆக மூவரும் கூறப்பட்டனர்: இவ்வாழ்வார்களை இங்ஙனம் குறிப்பிட்டமை எது கொண்டு? முதலாழ்வார் களுள் முதலாய பொய்கையாழ்வார், "கண்ணீர் சோர நிற்பவர்" என்பதை, அவர்தம் திருவாக் கினின்றும் இனிதுணரலாம். "பழுதே பலபக லும் போயினவென்று அஞ்சி அழுதேன்" என்று அவர்தாமே தெரிவிக்கின்றாரிதனை. ஆனந்தக் கண்ணீர் பெருகநிற்பவர் என்றும் கொள்ளலாம்.

இனி "அன்புகூர்பவர்" ஆகப் பூதத்தாழ் வார் கூறப்பட்டதை ஆய்வோம். இவ்வாழ்வார் பாடத் தொடங்கும் போதே, "அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தையிடுதிரியா. நன்புருகி ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு. ஞானத் தமிழ் புரிந்த நான்" என்று, "அன்பு" என்று அருளிச் செய்தார். "அன்பாக்கியேத்தி அடிமைப்பட்டேனுனக்கு" என்பர். மேலும் தமது அந்தாதியைத் தலைக்கட்டும் போது "என்றன் அளவன்றால் யானுடைய அன்பு" என்று மீண்டும் 'அன்பு' என்னும் சொல்லைக் கையாண்டார். ஆதலின் அன்புருவான இவரை 'அன்புகூர்பவர்' என்றே குறிப்பிட்டனர் போலும் குறையலாளி.

இனி, பேயாழ்வார் 'அடியவர்' என்று ஈண்டுக் கூறப்படுதலைக் காண்போம். மற்ற இரண்டு ஆழ்வார்கள் விளக்கேற்ற, எம்பெரு மானைக்கண்டனர் பேயாழ்வார். உடன் தாம் கண்டவதனைப் பாடலுற்றார். "திருக் கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று தொடங்கினாரிவர். பின்பு 'இன்றே கழல் கண் டேன்' என்று எம்பெருமான்றன் அடியை (திருவடி) க்கூறி, ஈற்றயற் பாசுரத்திலும், "தொட்ட படையெட்டும் தோலாத வென்றி யான் அட்டபுயகரத்தான் அஞ்ஞான்று, குட்டத்துக் கோண்முதலை துஞ்சக் குறித் தெறிந்த சக்கரத்தான் தாள்முதலே நங்கட்குச் சார்வு" என்று 'அடி'யினை நினைந்தவர், ஆதலின் பேயாழ்வாரை அடியவர் என்றனர் போலும் அரட்டமுக்கி! பூங்கோவல் மாயன், பொய்கை முதலிய ஆழ்வார்களிருந்த இடம் வந்து, அவர்கட்கு அமுது போல் அனுபவிக்கும் வண்ணம் நின்றதனை 'ஆரமுதம் ஆனான் றன்னை' என்பது தெளிவிக்கின்றது.

இனிப் பின்னடிகளால் இதனையே விவரித் தருள்வர் அருள்மாரி. "குழாவரி வண்டிசை பாடும் பாடல் கேட்டுத் தீங்கரும்பு கண்வளரும் கழனிசூழ்ந்த திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே". இங்கு 'வண்டிசைபாடும்' எனது "குழாவரிவண்டிசைபாடும்" என்றமையின் முதலாழ்வார் தனித்தனியே இருந்து எம்பெரு மானைப் பாடாது "குழாங்களாயடியீருடன் கூடி நின்றாடுமினே" என்றாற் போன்று, மூவரும் ஒன்று கூடிக் குழாமாகத் திருமாலைப் பாடினர் என்பது உணர்த்தப்பட்டது.

இனி முதலாழ்வார்களை வண்டுகளாகக் கொள்ளுதல் யாங்ஙனெனின், கூறுவோம். வண்டுகள் தேனொன்றையே உணவாகக் கொண்டவை. முதலாழ்வார்களோ "உளங் கனிந்திருக்குமடியவர் தங்களுள்ளத்துள் ஊறிய தேன்" எனப்பட்ட எம்பெருமானையே அநுபவிப்பவர். வண்டு "மதுவிரதம்" என்றே வழங்கப்படும். தூமது வாய்கள் கொண்டவை வண்டுகள். இவ்வாழ்வார்களும் "அமுதன்ன சொன்மாலையேத்தித் தொழுதேன்" என்ற வாறு அமுதனைய வாய்மொழிகளை இனிமை யாக இசைப்பவராம்.

வரிவண்டு தேதென வென்றிசை பாடும். அதுபோன்று இவர்களும் "தே, தே" (உனக்கே நாம்) என்பவர்களாம். 'மிக வாய்ந்த அன்பாக்கியேத்தி அடிமைப்பட்டே னுனக்கு, என்றனரன்றோ மல்லைச் செல்வர்? வண்டுகள் மலரிற் பொருந்தியிருப்பது போன்று இவர்களும் எம்பெருமான்றன்றிருவடி மலரிற் பொருந்திய நெஞ்சினராவர். ஆக இவற்றான் முதலாழ்வார்களை வண்டுகளாகக் கோடல் ஏற் புடைத்தென்க.

இனி, "தீங்கரும்பு கண்வளரும்" என்பதை, ஆய்வாம். "வண்டிசை கேட்டுக் கரும்பு கண்வளரும் (உறங்கும்)" என்பது, மேல் நோக்கிற் பெறும் பொருள். ஆயின் திரு மாலே இங்குக் கரும்பாகக் கூறப்பட்டனர்

என்றுஉணர்க. திருமங்கையாழ்வார் திருமாலைக் 'கரும்பே' என்றும் விளிப்பர். "கள்வா கடன் மல்லைக் கிடந்த கரும்பே" என்றது காண்க. மேலும் "பெரும்புறக் கடலே" என்னும் பதிகத்தில் முதற்பாசுரத்தில் "கரும்பினைக் கனியைச் சென்று நாடிக் கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே" என்றருளிச் செய்தனர். திருக்குறுந்தாண்டகத்திலும்,

"கரும்புஅமர் சோலை சூழ்ந்த
அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டென்
கண்ணினை களிக்குமாறே"

என்றருளிச் செய்தார். ஆதலின் இங்கும் 'கரும்பு' என்று கோவற் பெருமானும் அடையார் கமலத் தலர்மகள் கேள்வனையே, அடையார்சீயம் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். ஆழ்வார்தம் பாடல் கேட்டு மகிழ்ந்தவன் கோவல்நகரான் என்பது பெறப்படும். எம்பெருமான் கண்வளர்தல் அறிதுயிலாய், உலகுய்யும் வண்ணம் எண்ணிச் செய்வதாய் நிற்றலின் முதலாழ்வார்களால் இவ்வுலகிருள் நீங்கப் பெறுமாறு எண்ணியதை உணர்த்துமாதலின் "தீங்கரும்பு கண்வளரும்" என்றார். இனி கண் வளர்தல் என்பது கரும்பின் கணு வளர்தலையும் குறிக்குமாதலின், முதலாழ்வார் பாடலால் பெருமை மிகப் பெற்றவன் என்றும் பொருள் கொள்ளலாம். குழாவரி வண்டிசைபாடும் பாடலாகிய மூன்று திருவந்தாதிகளால், எம் பெருமான் பெருமையில் உயர்ந்து நின்றான் என்பதும் பொருத்தமுடைத்தே.

திருக்கோவலூரில் நிகழ்ந்த இவ்வரலாற்றைத் திருவரங்கத்தமுதனார், வில்லிபுத்தூராழ்வார் முதலாயோர் தமது பிரபந்தத்துள் சிறப்பித்துப் பாடியுள்ளனர். வேதாந்த தேசிகன் தமது "தேஹளீசஸ்துதி"யின்கண், இவ்வரலாற்றைக் குறித்து, "பொய்கை முதலான ஆழ்வார்களின் நெருக்கத்தால் எம்பெருமானிடமிருந்து இன் சுவை வெளிப்பட்டது. அச்சுவை பெண்ணைக்கரையில் விளங்கும் வளங்கொள் கரும்பின் சுவையனைத்து. எம்பெருமான் றன்றிருவடித் தாமரையினின்றும் பெருகும் தேன் வெள்ளத்தைப் பேரன்பர்தாம் சுவைத்துப் பருகுவர். அத் தேன் வெள்ளத்திற்கு இக்கருப்பஞ்சாறு ஒப்பில்லாததோர் சருக்கரையாம் தன்மையை அடைகிறது" என்று அழகுறக் கூறியுள்ளார். இங்குக் கோவலூரான் கரும்பாகக் கூறப்பட்டனன்.

இதுகாறும் விளக்கியவாற்றால், கலிகன்றியொலி செய்த இவ்வின்பப் பாடலில், தமிழ் மறை தோன்றிய வரலாறும், அதனை அருளிச் செய்த முதலாழ்வார்கள் ஆகிய பெரியோர்களின் இயல்பும் உய்த்துணரும் வண்ணம் அமைந்திருத்தல், அறிந்து இன்புறற்பாலது.

திருவிளையாடற் புராணத்தில்

பௌத்தமதக் கதைகள்

திரு. மயிலை. சீனி வேங்கடசாமி அவர்கள், சென்னை.

கௌதம புத்தரால் உண்டாக்கப்பட்ட பௌத்த மதம் முற்காலத்தில் இந்தியா முழுவதும் பரவியிருந்தது. கி. மு. மூன்ரும் நூற்ருண்டில், அசோகச் சக்கரவர்த்தி காலத்தில், பௌத்த மதம் தமிழ்நாட்டுக்கு வந்தது. தமிழ் நாட்டுக்கு வந்த பௌத்தமதம் பையப்பைய நாடெங்கும் பரவிச் சில நூற்ருண்டுகளாகச் சிறப்படைந்திருந்தது. பௌத்த மதக் கொள்கைகள் மக்களிடையே நன்ருகப் பரவியிருந்தன. கி. பி. 7-ஆம் நூற்ருண்டில் பக்தி இயக்கம் தமிழ்நாட்டில் தோன்றி, இரண்டு மூன்று நூற்ருண்டுக்குள்ளாகப் பௌத்த மதத்தை அழித்து விட்டது. சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் பக்தியைப் பரப்பிச் சைவ வைணவ மதங்களை வளர்த்தார்கள். பக்தி இயக்கக் காலத்தில், பௌத்தராக இருந்த பெரும்பாலான மக்கள், சைவ சமயத்தை மேற்கொண்டார்கள். பௌத்தராக இருந்தவர் சைவராக மாறினபோதிலும், அவர்களுடைய பழைய பௌத்த மதக் கொள்கைகளை அவர்கள் விட்டுவிடவில்லை. ஆகவே அவர்களுடைய பழைய பௌத்தமதக் கொள்கைகள் சைவ சமயத்தில் இடம்பெற்றன. பாண்டி நாட்டிலே அக்காலத்தில் பௌத்தமதம் சிறப்படைந்தபடியால், அந்த மதக் கொள்கைகள் பாண்டி நாட்டுத் திருவிளையாடற் புராணத்தில் இடம் பெற்றுள்ளன.

திருவிளையாடற் புராணங்கள் :

பாண்டி நாட்டு மதுரையிலே எழுந்தருளியிருக்கும் சொக்கநாதப் பெருமான் (சோமசுந்தரக் கடவுள்) அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்ததாகப் பிற்காலத்துப் புராணங்கள் கூறுகின்றன. இந்தப் புராணங்களில் முக்கியமானது திருவிளையாடற் புராணம். இரண்டு திருவிளையாடற் புராணங்கள் தமிழில் உண்டு.

இவற்றின் சமஸ்கிருத மொழிபெயர்ப்பு "ஆலாசிய மகாத்மியம்" என்று பெயர் பெற்றிருக்கிறது. இரண்டு தமிழ்த் திருவிளையாடற் புராணங்களில் பழமையானது "திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்". இதன் ஆசிரியர் செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவர். இது நம்பி திருவிளையாடற் புராணம் என்றும், பழைய திருவிளையாடற் புராணம் என்றும் கூறப்படுகிறது. இதற்குப் பிறகு எழுதப்பட்டது. பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம். இதுவே இப்போது அதிகமாக வழக்கத்தில் இருந்து வருகிறது.

திருவிளையாடற் புராணங்களில் கூறப்படுகிற "மாபாதகந்தீர்த்த" திருவிளையாடலும், "பன்றிக் குட்டிகளுக்குத் தாயான" திருவிளையாடலும், பௌத்தமதத் தொடர்பான கதைகள். இவற்றை இங்கு விளக்குவோம். முதலில் மாபாதகந்தீர்த்த திருவிளையாடலைப் பார்ப்போம்.

பழைய திருவிளையாடற் புராணத்தில் 34-வது எண்ணுள்ளது, மாபாதகந்தீர்த்த திருவிளையாடல். பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தில் 26-வது எண்ணுள்ளது மாபாதகந்தீர்த்த படலம். இந்தக் கதை, பெரிய பாதகச் செயலைச் செய்த பிராமணன் ஒருவன், வீடுபேறு (மோட்சம்) அடைந்ததைக் கூறுகிறது. இது பௌத்த மதத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு கொள்கை என்பது நன்ருகத் தெரிகிறது.

பௌத்தக் கொள்கை :

புராணத்து மாபாதகந்தீர்த்த கதையைக் கூறுவதற்கு முன்பு அதிலுள்ள பௌத்தமதக் கொள்கையை முதலில் தெரிந்து கொள்ள

வேண்டும். பௌத்த மதத்தினுடைய வேத மானது விநயபிடகம், சூத்திரபிடகம், அபிதம்ம பிடகம் என்னும் மூன்று பிரிவுடையது. இதில் சூத்திர பிடகத்தில் ஒரு பிரிவான குட்டக நிகாயத்தில், தம்மபதம் என்னும் ஒரு பகுதி உண்டு. தம்மபதம், பௌத்தமத தர்மத்தின் முக்கியக் கொள்கைகளைக் கூறுகிறது. தம்மபதத்தின் 21-வது பிரிவு பகிண்ணக வர்க்கம் என்பது. இதில் நம்முடைய ஆராய்ச்சிக்கு உரிய பொருள் காணப்படுகிறது. அஃதாவது :

மாதரங் பிதரங் ஹந்த்வா
ராஜனோ த்வே சசத்தியே
ரடடங் ஸானுசரங் ஹ்ந்த்வா
அநீகோ யாதி பிராஹ்மணோ

"தாயையும், தந்தையும் குருமாராகிய அரசர் களையும் ஐந்து தடைகளையும் வென்ற பிராமணன் துக்கம் (நரகம்) சேராமல் போகிறான்" (தம்மபதம் பகிண்ணகவர்க்கம்–6) என்பது இதன் பொருள்.

கொலைகாரன் முக்தி அடைவதா?

மேற்பார்வைக்குத் தாய் தந்தை அரசன் முதலியவர்களைக் கொன்ற மகாபாதகன் (நரகம் அடையாமல்) மோட்சம் அடைகிறான் என்று, இதற்குப் பொருள் கூறத் தோன்றுகிறது. தாய், தகப்பன், அரசன் இவர்களைக் கொன்றவன் எப்படிப் பிராமணன் ஆவான்? அந்த மகாபாவி எப்படி வீடுபேறு அடைவான்? உயிர்ப் பிராணிகளைக் கொல்லக்கூடாது என்று போதித்த புத்தர் பெருமான், தாய் தந்தையரைக் கொன்ற மகாபாதகன் நரகம் புகாமல் மோட்சம் அடைவான் என்று கூறுவாரா? இந்த வாசகங்களுக்கு உட்பொருள் உண்டு அது சிறந்த உயர்ந்த தத்துவத்தைக் கொண்டது அதனை விளக்குவோம்.

தாய் தந்தை என்பது நான், எனது (அகங்காரம், மமகாரம்) என்னும் ஆணவம். அரசன் என்பதன் பொருள், ஐம்பொறி (மெய், வாய், கண், மூக்கு செவி). ஐம்புலன் (ஊறு, சுவை, ஒளி, மணம், ஓசை) என்பன. பிறவிச் சுழலுக்குக் காரணமாக இருக்கிற "நான்" "எனது" என்னும் ஆணவங்களாகிய தாய் தந்தையர்களை அழித்து (கொன்று), ஐம்புலன் களையும் ஐம்பொறிகளையும் வென்று (கொன்று) மனத்தை அடக்கித் தவஞ் செய்கிறவன் பிராமணன் ஆகிறான். அவன் பிறப்பு இறப்பு ஆகிய துன்பங்களை அடையாமல், மோட்சம் (வீடுபேறு) அடைகிறான் என்பது, இந்த வாசகங்களின் பொருளாகும். இதனைத் திருவள்ளுவரின்,

யான்எனது என்னுஞ் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்

சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

என்னும் திருக்குறள்கள் தெளிவாக விளக்கு கின்றன.

இந்தத் தத்துவ உண்மைகளைத்தான் மேற்காட்டிய தம்மபத வாசகங்கள் கூறுகின்றன. எனவே, தாய் தந்தையரைக் கொல்லவேண்டும் என்பது, யான் எனது என்னும் ஆணவங்களை அழிக்க வேண்டும் என்பதாகும். இரண்டு அரசர்களைக் கொல்ல வேண்டும் என்பது, ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் அழிக்கவேண்டும் என்பதாகும்.

கருத்து கதையாயிற்று:

இந்தப் பௌத்த மதத் தத்துவக் கருத்து, பிற்காலத்தில் ஒரு கதையாக உருவம் அடைந்து, கடைசியில் திருவிளையாடற் புராணத்தில் சிவபெருமான் மாபாதகஞ் செய்த ஒரு பிராமணனுக்கு மோட்சம் கொடுத்தார் என்று கூறப்படுகிறது. தாய் தந்தையரைக் கொன்றதாகத் தம்மபதவாசகங் கூறுவதைத் திருவிளையாடற் புராணக்கதை தந்தையைக் கொன்று தாயை மனைவியாக்கிக் கொண்டான் என்று கற்பித்துக் கூறுகிறது. பொறிபுலன் களாகிய அரசர்களைக் கொன்றதாகத் தர்மபதங் கூறுவதைத் திருவிளையாடற் புராணக்கதை அறவே விட்டுவிட்டது.

பார்ப்பனக்குலத்தில் பிறந்த ஒருவன் தன் தாயை மனைவியாக்கிக் கொண்டு, தன் தந்தையைக் கொன்று போட்டுவிட்டு, வேறு ஊருக்குச் செல்லும் வழியில், வேடர்கள் இவனை அடித்து இவனிடமிருந்த பொருள் களையும் இவனுடன் இருந்த பார்ப்பனியையும் கொண்டு போனார்கள் என்றும், கடைசியில் இவன் மதுரையில் கடம்பவனத்துக்கு வந்து, சொக்கப் பெருமான் திருவருளினால் பிரமகத்தி நீங்கப்பெற்று வீடுபேறு அடைந்தான் என்றும்

பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற் புராணம் கூறுகிறது. பெரும்பற்றப் புலியூர் நம்பி கற்பித்துக் கூறிய இந்தக் கதைக்குப் பரஞ்சோதி முனிவர் மேலும் சில கற்பனைகளைக் கற்பிக்கிறார். நம்பி, அந்த மாபாதகஞ் செய்த பிராமணன் எந்த ஊரினன் என்று கூறவில்லை. பரஞ்சோதியார் அந்தப் பிராமணன் அவந்தி நகரத்தில் இருந்தவன் என்றும், குலோத்துங்க பாண்டியனின் ஆட்சிக் காலத்தில் அந்தப் பிராமணன் மதுரைக்கு வந்தான் என்றும், அவனுடைய மாபாதகத்தைச் சொக்கப் பெருமான் போக்கி மோட்சம் அளித்தார் என்றும் கூறியுள்ளார்.

பழைய காலத்தில் தம்மபதத்தில் கூறப்பட்ட இந்தப் பௌத்தமதத் தத்துவம், பிற்காலத்தில் சைவ சமயத்தில் ஒரு கதையாகக் கற்பிக்கப்பட்டுத் திருவிளையாடற் புராணத்தில் புகுத்தப் பட்டிருப்பதைக் காண்கிறோம். அந்தப் பௌத்த மதத் தத்துவம் சைவ சமயத்தவரால் கைக்கொள்ளப்பட்ட போது, சைவ சமயக் கொள்கைகளுக்கு ஏற்ப மாற்றப்பட்டதையும் காண்கிறோம். இது நிற்க.

துண்டில ஜாதகம்:

திரு விளையாடற் புராணக் கதைகளில் காணப்படுகிற பன்றிக் குட்டிகளுக்குச் சிவ பெருமான் அருள் புரிந்த கதையும், பௌத்த மதக் கதைகளிலிருந்து எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்தக் கதை புத்தஜாதகக் கதைகளில் 388 ஆவது கதையாகக் காணப்படுகிறது. இந்தக் கதையின் பெயர் '' துண்டில ஜாதகம்'' என்பது. இந்தக் கதையின் சுருக்கம் இது:

வாரணாசியில் பிரமதத்த அரசன் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில், அவ்வூரைச் சேர்ந்த காட்டில் ஒரு காட்டுப் பன்றியின் வயிற்றில் போதி சத்துவர் பன்றிக்குட்டியாகப் பிறந்தார். சில காலத்துக்குப் பிறகு தாய்ப் பன்றி இன்னொரு குட்டியையும் ஈன்றது. ஒரு நாள் தாய்ப்பன்றி குட்டிகளுடன் ஒரு பள்ளத்தில் படுத்திருந்த போது, அவ் வழியாக அவ்வூரைச் சேர்ந்த கிழவி ஒருத்தி தன்னுடைய கூடையில், பருத்திப் பஞ்சை எடுத்துக் கொண்டு ஊருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தாள். அவள் தடியை ஊன்றிக் கொண்டு நடந்த போது, தடியின் சத்தத்கைக் கேட்ட தாய்ப்பன்றி பயந்து ஓடிப்போய் விட்டது. பள்ளத்தில் இரண்டு பன்றிக் குட்டிகள் இருப்பதைக் கண்ட கிழவி அவற்றின் மேல் இரக்கங் கொண்டு அவற்றை எடுத்துத் தன்னுடைய கூடையில் வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தாள். வந்து அப் பன்றிக் குட்டிகளைத் தன்னுடைய குழந்தைகளைப் போல அன்பாகக் காப்பாற்றினாள். மூத்த குட்டிக்கு மகா துண்டிலன் என்றும், இளைய குட்டிக்குச் சுல்ல துண்டிலன் என்றும், பெயரிட்டு வளர்ந்து வந்தாள். அவை பெரியவைகளாக வளர்ந்து கொண்டிருந்தன.

அவ்வூரில் பண்டிகை நடந்தது. அந்தப் பண்டிகை நாளில் சில குடியர்கள் மது அருந்தினார்கள். அவர்களுக்கு இறைச்சி வேண்டியிருந்தபடியால், கிழவியின் பன்றிக் குட்டிகளை விலைக்கு வாங்கிக் கொன்று தின்னத் தீர்மானித்தார்கள். அவர்கள் அவைகளை விலைக்குக் கொடுக்கும் படி கேட்டார்கள். ''என்னுடைய பிள்ளைகளை நான் விற்பதா, போங்கள் நான் விற்க மாட்டேன்'' என்று கிழவி கூறினாள். ''மிருகங்கள் மனிதருக்குப் பிள்ளைகளாகுமா? அதிக விலைகொடுக்கிறோம் குட்டிகளைக் கொடு'' என்று கேட்டார்கள். கிழவி பிடிவாதமாக மாட்டேன் என்று கூறி விட்டாள். பிறகு, குடியர்கள் கிழவிக்கு மது பானத்தைக் குடிக்கக் கொடுத்தார்கள். கிழவி மது பானத்தைக் குடித்து மயங்கினாள். அப்போது அவர்கள் பன்றிக் குட்டிகளை விலைக்குக் கொடுக்கும் படி கேட்டார்கள். கிழவி, '' மகாதுண்டிலனை விற்க மாட்டேன், சுல்லதுண்டிலனை எடுத்துக் கொண்டு போங்கள்'' என்று கூறினாள். குடியர் சுல்ல துண்டிலனைப் பிடித்துக் கொடுக்கும் படி கூறினார்கள். கிழவி தொட்டியில் உணவை இட்டு சுல்ல துண்டிலனைக் கூப்பிட்டாள். அப்போது மகாதுண்டிலன் சுல்ல துண்டலனிடம், '' அம்மா வழக்கமாக முதலில் என்னைக் கூப்பிடுவாள். இன்று உன்னைக் கூப்பிடுகிறாள். இதில் ஏதோ சூது இருக்கிறது நீ போய் விழிப்பாகப் பார்த்துவா'' என்று கூறி அனுப்பிற்று. இளைய பன்றி வந்து பார்த்து, தொட்டியில் தீனி இருப்பதையும் பக்கத்தில் சிலர் சுருக்குக் கயிறுகளுடன் நிற்பதையுங் கண்டு நடு நடுங்கி ஓடி வந்தது. தான் கண்டதைத் தன் அண்ணனிடம் கூறிற்று.

அப்போது மகாதுண்டிலன் சுல்ல துண்டிலனுக்குக் கூறிற்று: '' நீ எங்கே போவாய்? இறைச்சிக்காக உணவு கொடுத்து வளர்த்தார்கள். இறைச்சிக்காக உன்னை விற்கி

றுர்கள். பளிங்கு போன்ற தூய்மையான நீரிலே குளித்து உடம்பிலுள்ள வியர்வைகளையும், அழுக்குகளையும், கழுவிச் சுத்தம் செய்து, வாசனைத் தைலத்தைப் பூசிக் கொள்'' என்றது. ''பளிங்கு நீரிலே குளித்து வாசனைத் தைலத்தைப் பூசிக் கொள் என்பதன் பொருள் என்ன?'' என்று சுல்லதுண்டிலன் கேட்டது? மகாதுண்டிலன் இவ்வாறு விளக்கங் கூறிற்று: ''பளிங்கு போன்ற தூய நீர் என்பது நன்னெறி. அழுக்கும், வியர்வையும், பாவச் செயல்கள். வாசனைத் தைலம் என்பது நல்ல ஞானமும், நல்லொழுக்கமும் ஆகும்.''.

போதி சத்துவராகிய மகாதுண்டிலன் சொன்ன வாசகங்கள் ஊரெங்கும் கேட்டன. இந்த அருமையான பொன் மொழிகளை மக்கள் அனைவரும், அரசனும் மந்திரிகளும் கேட்டார்கள். ஆச்சரியமடைந்து மகாதுண்டிலனையும், சுல்லதுண்டிலனையும் அரண்மனைக்கு அழைத்து வந்து ஆசனங் கொடுத்து உபசரித்தார்கள். மகாதுண்டிலன் அவர்களுக்கு நன்னெறிகளையும், நல்லொழுக்கங்களையும், போதித்தது.

அரசன், அறிவுள்ள இந்தப் பன்றிக் குட்டிகளை இளவரசர்களாக்கினுன். பன்றி வழக்குகளை நீதியாகத் தீர்ப்பதற்குச் சட்டங்களை வகுத்துக் கொடுத்தது. சில காலம் கழித்து பிரமதத்த அரசன் இறந்து போனுன். நாட்டு மக்கள் நடக்க வேண்டிய ஒழுக்க முறைகளை வகுத்துக் கூறிய பிறகு பன்றிக் குட்டிகள் காட்டுக்குப் போய்த் தவம் செய்து கொண்டிருந்தன. இது தான் புத்த ஜாதகக் கதைகளில் கூறப்படுகிற துண்டில ஜாதகக் கதை.

பன்றிக்குட்டிகளுக்குத் தாயானது :

இந்தப் புத்த ஜாதகக் கதை சில மாற்றங்களுடன் திருவிளையாடற் புராணத்தில் கூறப்படுகிறது. பன்றிக்குட்டிக்குத் தாயான திருவிளையாடல் என்றும், பன்றிக் குட்டிகளுக்கு அருள் புரிந்த திருவிளையாடல் என்றும் இரண்டு பிரிவாக இந்தக் கதை திருவிளையாடற் புராணங்களில் கூறப்படுகிறது. வேளாளன் ஒருவன் காட்டிலே வாழ்ந்து கொண்டிருந்தான். அவனுடைய மனைவியின் வயிற்றில் பன்னிரண்டு பிள்ளைகள் பிறந்தனர். பிள்ளைகள் இளையவர்களாக இருந்த போதே தாய் தந்தையர் இறந்து போனுர்கள். பிள்ளைகள் பன்னிருவரும் வேட்டைக்குப் போன போது காட்டிலே தவஞ் செய்து கொண்டிருந்த ஒரு முனிவரைக் கண்டு இரைந்து கூச்சலிட்டுக் கல்லாலும் மண்ணுலும் அடித்தார்கள். முனிவர், ''நீங்கள் பன்றிகளாகப் பிறக்கக் கடவீர்கள்'' என்று சாபங் கொடுத்தார். சாப மீட்புத் தரும் படி அவர்கள் வேண்ட, 'பன்றியாகப் பிறந்த பிறகு உங்களுடைய தாய்ப் பன்றி இறந்து விடும். அப்போது சிவ பெருமான் உங்களுக்கு அருள் புரிவார்' என்று சாப விடை கொடுத்தார். பன்னிருவரும் ஒரு காட்டுப் பன்றியின் வயிற்றில் பன்றிக் குட்டிகளாகப் பிறந்தனர். அப்போது பாண்டியன் 'வேட்டைக்கு வந்து தாய்ப் பன்றியை அம்பு எய்து கொன்றுன். குட்டிகள் தாயைக் காணுமலும் பால் இல்லாமலும் வருந்தின. அப்போது சிவபெருமான் (சொக்கநாதர்) தாய்ப் பன்றியாக வந்து அக் குட்டிகளுக்குப் பால் ஊட்டி அருள் செய்தார்.

பன்றிக் குட்டிகள் வளர்ந்து வாழ்ந்த பிறகு அவை இறந்து போயின. பிறகு, அப் பன்றிகள் மீண்டும் ஒரு வேளாளனுக்கு மக்களாகப் பிறந்தன. அந்தக்குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்து அழகும், ஆண்மையும், வீரமும், அறிவும், உள்ளவர்களாகத் திகழ்ந்தார்கள். இவர்களுடைய சிறப்புகளை அறிந்த பாண்டியன் இவர்களை தன்னிடத்தில் அழைத்துக் கொண்டு போய்ச் சாமந்த பதவிகளைக் கொடுத்துச் சிறப்புச் செய்தான். இப் பன்னிருவரும் பாண்டியனுக்குப் பல வெற்றிகளையுண்டாக்கிக் கொடுத்துச் சிறப்பாக வாழ்ந்தார்கள். இவை திருவிளையாடற் புராணங்களில் கூறப்படுகிற கதைகள்.

இந்தத் திருவிளையாடற் புராணக் கதைகளுக்கு (பன்றிக்குட்டிகளுக்குத் தாயானது, பன்றிக் குட்டிகளுக்கு அருள் புரிந்தது) மூலக் கதையாக இருப்பது புத்த ஜாதகத்தில் கூறப்படுகிற துண்டில ஜாதகக் கதை என்பதில் ஐயமில்லை. மதம் மறைந்தது, கொள்கை நின்றது.

பௌத்த மதம் பிற்காலத்தில் மறைந்து விட்ட போதிலும், அந்த மதத்தின் கொள்கைகளும், கதைகளும், தமிழ் நாட்டில் வழங்கி வந்தன. பிற்காலத்தில் அந்தக் கதைகள் வெவ்வேறு மாறுதல் அடைந்து புதிய உருவங்கள் பெற்றுள்ளன. தமிழ் நாட்டில் பௌத்த மதம் சிறப்படைந்திருந்த காலத்தில் புத்த ஜாதகக் கதைகள் தமிழில் வசனமாகவும், செய்யுளாகவும், எழுதப்பட்டிருந்தன. பிற்காலத்தில்,

பௌத்த மதம் அழிந்து மறைந்து போன காலத்தில், அந்த நூல்கள் போற்றுவார் இல்லாமல் அழிந்து மறைந்து போயின. இதன் காரணமாகத் தமிழ்மொழி, பௌத்த இலக்கியச் செல்வங்களை இழந்து விட்டது. புத்தர் போதி சத்துவராக இருந்த போது மனிதராகவும், பல வித விலங்குகளாகவும், பிறந்து தர்மோபதேசஞ் செய்த ஜாதகக் கதைகள் தமிழிலும் இருந்தன என்பதற்குக் கீழ்க் கண்ட செய்யுட்கள் சான்று பகர்கின்றன. இந்தச் செய்யுட்களில் போதி சத்துவர் பிறந்த சில பிறப்புகள் கூறப் படுகின்றன.

மிக்க தனங்களை, மாரி மூன்றும் பெய்யும்
வெங்களிற்றை, மிகுசிந்தா மணியை. மேனி
ஒக்கஅரிந் தொருகூற்றை. இரண்டு கண்ணை,
ஒளிதிகழும் திருமுடியை, உடம்பில் ஊனை
எக்கிவிழுங் குருதிதனை, அரசு தன்னை
இன்னுயிர்போல் தேவியை, ஈன்றெடுத்த செல்வ
மக்களை வந்திரந்தவர்க்கு மகிழ்ந்தே ஈயும்
வானவர்தாம் உறைந்தபதி மானூரே.

வான் ஆடும் பரியாயும் அரிணம் ஆயும்
வனக் கேழல் களிறாயும் எண் காற் புள்மான்
தானாயும் பனை எருமை ஒருத்த லாயும்
தடக்கை இளங்களிறாயும் சடங்க மாயும்
மீனாயும் முயலாயும் அன்ன மாயும்
மயிலாயும் பிறவாயும் வெல்லுஞ் சிங்க
மானாயும் கொலை களவு கள்பொய் காமம்
வரைந்தவர் தாம் உறைந்த பதி மானூரே.

இதில் கூறப் பட்ட வனக்கேழல் களிறு என்பது காட்டுப் பன்றி. இது துண்டித ஜாதகக் கதையைக் குறிக்கின்றது.

திருநெல்வேலி மாவட்டம் கிருஷ்ணபுரம் திரு. வேங்கடாசலபதி கோயிலுக்கு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர், அவர்கள் வருகை தருதல். (27—3—72)

சிவஞான சுவாமிகளின்

சிறந்த நுண்மாண் நுழைபுலன்

முன்னுரை :

அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியிலுள்ள தத்துவ நூல்களுள், சிவஞான சித்தியார் மிகவும் தலைசிறந்த ஒன்றாய்த் திகழ்கின்றது. 'சிவத்துக்கு மேல் இல்லை தெய்வம், சிவஞான சித்திக்குமேல் இல்லை நூல்' என்பது பழமொழி. "பாரிலுள்ள நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர் விருத்தப்பாதி போதும்" எனக் குருஞான சம்பந்தர் இந்நூலைப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

"பாதிவிருத் தத்தால்இப் பார்விருத்த மாகஉண்மை
சாதித்தார் பொன்னடியைச் சாரும்நாள் எந்நாளோ?"

என வேதாந்த சித்தாந்த சமரசஞான வித்தகச் சான்றோராகிய தாயுமான சுவாமிகள் அருளிச் செய்திருப்பதும், சிவஞான சித்தியாரின் சிறப்பைச் செவ்விதினில் உணர்த்தும்.

செருமானிய நாட்டின் புகழ்பெற்ற மாபெரும் கவிஞராகிய, கெத்தே என்பவர், காளிதாசர் இயற்றிய சாகுந்தலம் என்னும் வடமொழி நாடகத்தின் சிறப்பினைக் குறித்து, "இளவேனிலின் எழில்மிக்க பல மலர்களையும், முதுவேனிலின் இனிய நல்ல கனிவகைகளையும், மற்றும் ஆன்மீக உணர்வைக் கவர்ந்து களிப்பித்து அரும்பெரும் விருந்தளிக்கவல்ல பொருள்கள் அனைத்தையும், இம்மண்ணுலகையும் அவ்விண்ணுலகையும் எல்லாம் நின்னுல் ஒரே ஒரு பெயரிலேயே ஒன்று சேர்த்து அடக்கி இணைத்துக் கூற இயலுமா? இவைகள் அனைத்தையும் ஒருங்கே இனைத்துக் கூறும் வகையில், சகுந்தலை என்று நான் நினக்குப் பெயரிடுகின்றேன்" எனப்புகழ்ந்து பாடியிருக்கின்றார். சிறந்த நல்ல இலக்கியங்களாகத் திகழ்வன எல்லாவற்றிற்குமே, இப்பாராட்டுரை பொருந்துவதொன்றாக விளங்குதலின், நாம் நம் சிவஞான சித்தியாருக்கும் கூட, இதனை ஏற்றபெற்றி மாற்றியுரைத்துக் கொண்டு போற்றி மகிழலாம்.

"இன்பொளிர் வேனிற் காலத்
தெழில்மலர் கனிகள் மற்றும்
மன்பெருங் கவர்ச்சி மிக்க
மகிழ்ச்சிநல் விருந்தூண் மண்விண்
என்பவை எலாம்சேர்ந்த ஒன்றைச்
'சித்தியார்' எனும்ஓர் பேரால்
நன்றுற நவில்வேன்! யாவும்
நனிஅதில் அடங்கும் நன்றே!"

— மொழி பெயர்ப்பு,
ஆசிரியர்

---

* "Would'st the young year's blossoms
and the fruits of its decline,
And all by which the soul is charmed,
enraptured, feasted, fed,
Would'st thou the Earth and Heaven itself
in one sole name combine?
I name thee, O Sakuntala! and all
at once is said."

—J. W. Goethe.

சித்தியார் செய்யுள் :

இத்தகைய சிறந்த பெருநலம் வாய்ந்த சிவஞான சித்தியாரின்கண் வரும் செய்யுள் ஒவ்வொன்றும், சொல்நலம் பொருளாழம் கருத்துச்சிறப்பு கவிதையினிமை என்பனவற்றை யுடையதாகும்.

"புத்திமற் காரி யத்தாற்
பூதாதி ; புருடன் தானும்
அத்தனு கரணம் பெற்றல்
அறிதலால் ; அவற்றை மாயை
உய்த்திடும் அசனல் ; மாயைக்கு
உணர்வொன்றும் இல்லை என்றே
வைத்திடும் அதனுல் ; எல்லாம்
வருவிப்பான் ஒருவன் வேண்டும்".

என்பது, சிவஞான சித்தியாரின்கண் வரும் ஒரு செய்யுள். அஃது, உலகத்தையெல்லாம் தோற்றுவிப்பதற்கு நிமித்த காரணமாகிய கடவுள் ஒருவன் இருத்தல் வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. "உலகாயதமத கண்டனம் செய்து உலகத்திற்கு நிமித்த காரணன் ஒருவன் உளன் ஆதலை நிறுத்த எழுந்தது இத்திருவிருத்தம்". இதன் பொருள் பின்வருமாறு :

"குடம் குயவனுல் செய்யப்படும் காரியம் ஆனாற்போல, பூதம் முதலிய பிரபஞ்ச மெல்லாம், ஒரு சேதனப் பொருளால் செய்யப்படும் காரியமே ஆகலானும் ; உயிரானது சேதனப் பொருளாயினும் அப்பூதம் முதலியவற்றாலாகிய தனுகரணாதி களைப் பெற்றவழியே அறிதலானும் ; அவற்றிற்கு முதற்காரணமாய்ச் செலுத்தி நிற்கும் மாயைக்கு உணர்வு சிறிதும் இல்லையென்று நூல்கள் தெளிவுறக்கூறு தலானும் ; பாரிசேட அளவையான், இவ்வனைத்தினும் வேறாய் மாயையினின்றும் பூதம் முதலிய பிரபஞ்சம் எல்லாவற்றையும் தோற்றுவிப்பான் ஆகிய ஒரு கடவுள் இன்றியமையாது வேண்டப்படுவன்."

என்பது சிவஞான சுவாமிகள், இச்செய்யுட்கு எழுதியுள்ள திரண்ட பொழிப்புரையாகும்.

சிவஞான சுவாமிகள் :

இங்ஙனம் பொருள் பயக்கும் தன்மையிலும், சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையினை விளக்கி நிறுவும் முறையிலும் அமைந்துள்ள இச்செய்யுளுக்கே, வேறு வகைகளிலும் வேறு கொள்கைகளுக்கு இயையப் பொருள் கொள்ளலாம் என்று கூறி, அவ்வகையில் அறிஞர் அனைவரும் வியந்து நிற்கும் வண்ணம், உலகாயதம்-பௌத்தம்-சாங்கியம் என்னும் சமயக் கொள்கைகளை ஒட்டிச் சிவஞான சுவாமிகள் ஓரிடத்தில் உரைசெய்து காட்டுகின்றார். 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' எனும் பழமொழிக்கு ஏற்ப, எதனையும் நிறுக்கவும் மறுக்கவும் வல்ல பெரும் புலமை நலத்தால், சுவாமிகள் செய்துகாட்டியிருக்கும் உரைத்திறம், அறிஞர்களின் சிந்தனைக்கு விருந்தாகத் திகழ்கின்றது,

"ஒரு நூலுக்கு உரை செய்வோர் நூலாசிரியரின் கருத்துணர்ந்து அவர்கள் வழங்கும் சொற்பொருள் துணிதற்குரிய கருவிகளைக்கொண்டு, ஐயமும் மருட்கையும் நிகழாமல் செவ்விதின் உரை இயற்றுதல் வேண்டும். அவ்வாறின்றித் தத்தம் மனம் போனபடியெல்லாம் பொருள் செய்தல் கூடாது" என்பதனை வற்புறுத்தி வலியுறுத்துதற் பொருட்டே, சுவாமிகள் இங்ஙனம் சைவ சித்தாந்தத் தத்துவச் சார்பே உடைய இவ்வழகிய இனிய செய்யுளுக்கு வெவ்வேறு வகையான சமயக் கொள்கைகளுக்கு இயையப் பல்வேறு வகையில் பொருள் செய்துகாட்டு கின்றார். "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்னும் பழமொழிக்கு ஏற்பத் தம்முடைய அறிவாற்றல் நலங்களெல்லாம் பெரிதும் விளங்கித் திகழ, அவர் எழுதிக் காட்டியுள்ள உரைத் திறத்தினை நாம் இங்கு, முறையே காண்போம்.

உலகாயதம் :

காணப்படுகின்ற உலகம் மட்டுமே உள்ளது. நிலம் நீர் தீ காற்று என்னும் நான்கு பூதங்களே உள்ளன. அவற்றின் சேர்க்கையால் ஓர் அறிவு நிகழும். அது பூதம் எனப்படும் இயற்கைப் பொருளின் செயலால் நிகழ்வது. கடவுள் எனஒரு பொருள் இல்லை. உடலின் வேறாக உயிர் என்பதும் இல்லை. உடம்பே கண் காது முதலிய கருவிகளைக் கொண்டு பொருள் களை அறிகின்றது. காம இன்பமே மேலான இன்பம். உலகுக்கு முதற்காரணமாகக் கூறப்பெறும்

மாயை என்பதொரு பொருள் உண்டு என்பதற்குச் சான்று எதுவும் இல்லை. நிலம் நீர் தீ முதலியனவே, உடல் முதலிய கருவிகளை மயக்குகின்றன. வியாழன் என்னும் பிருகற்பதியே, இவ்வுலகாயதக் கொள்கையை விளக்கிய ஆசிரியன். இக் கொள்கைகளுக்குச் சிறிதும் பிறழாமலும், இந்தக் கொள்கைகளுக்கே முற்றும் பொருந்தும்படியும், சுவாமிகள் பின்வருமாறு உரைக் குறிப்புக்கள் தருகின்றார்.

புத்திமத்	—	அறிவுடைய உடலானது
காரியத்தால்	—	நான்கு பூதங்களின் கூட்டமாகிய காரியமே ஆதலாலும்;
புருடன் தானும்	—	பூதங்களுக்கு நிமித்தகாரணனாய் உளன் எனப்பிறர் கூறும் முதல்வனும்கூட
அந் தனு	—	அந்த உடலையும்
கரணம்	—	கண் காது முதலிய பொறிகளையும்
பெற்றால்	—	துணையாகப் பெற்றவழியே
அறிதலால்	—	அறியும் திறனை அடைந்து இயங்குதலாலும்;
அவற்றை	—	அவ்வுடல் கருவி முதலியவற்றை
மதனால்	—	மன்மத பகவானால்
மாயை உய்த்திடும்	—	மாயையானது காமநுகர்ச்சிகளின் மயக்கத்தின்கண் செலுத்தி நிற்கும் ஆதலாலும்;
மாயைக்கு	—	பிற சமயத்தவர் கூறும் மாயை என்னும் ஒரு பொருள் இருத்தற்கு
உணர்வு ஒன்றும்இல்லை	—	உணர்தற் காரணமாகிய சான்று எதுவும்கிடையாது.
என்றே	—	என்றுதான்
வைத்திடும் அதனால்	—	எங்களுடைய உலகாயத சமயத்துக்குரிய நூல்கள் வரையறுத்து வைத்துக் கூறியிருக்கின்றன ஆதலாலும்;
எல்லால் வருவிப்பான்	—	உடல் கருவிகள் எல்லாவற்றையும் இயக்கும் பொருட்டு
பூதாதி	—	அந்தப் பூதமாகிய முதற்காரணத்தினையே
வேண்டும்	—	விரும்புவான்
ஒருவன்	—	ஒப்பற்ற எங்கள் வியாழ பகவான்.

உலகாயத மதச்சார்பான இவ்வுரையின்கண், பூதாதி-புத்திமத்-புருடன்-மதனால்—மாயை-உணர்வு வைத்திடும் வேண்டும்-ஒருவன் என்னும் சொற்களுக்கு அம்மதக் கொள்கையிற் சிறிதும் பிறழாதவாறு உரை கூறியிருக்கும் திறம் உணரற்பாலது.

புத்தமதம் :

புத்தனே கடவுள். ஞானமே எல்லாவற்றிற்கும் காரணம். புறப் பொருளாகிய பூதம் முதலிய உலகமும், அவற்றை அறிபவனும் ஞானத்தின் வேறல்ல. அதனுடைய ஆற்றலாலேயே யாவும் நிகழ்கின்றன. வடிவமற்ற ஞானத்தின் அனுகாரத்தாலேயே கடம் படம் முதலிய வடிவங்கள் தோன்றுகின்றன. அங்ஙனம் தோன்றும் வடிவங்கள் வெறும் மயக்கமே. அஃது அஞ்ஞானத்தின் விளைவேயாகும். உலகிற்கு முதற் காரணமாகச் சில சமயத்தோர் கூறும் மாயை என்னும் தத்துவப் பொருளின் உண்மைக்குப் பிரமாணம் எதுவும் இல்லை. உலகப் பொருள்களின் வடிவங்கள் எல்லாம், புத்தியாகிய ஞானத்தின் செயலாலேயே தோன்றுகின்றன, என்பது புத்தரில் ஒருசாரார் கொள்கை. அதற்கேற்பவும் ஒருவாறு இச்செய்யுட்குப் பொருள் கொள்ளலாம்.

பூதாதி	—	புதம் முதலியனவாகிய உலகமும்
புருடன் தானும்	—	புருடன் எனப்படும் அறிபவனும்
புத்தி	—	ஞானத்தினது
மற்காரியத்தால்	—	பலத்த காரியத்தின் விளைவேயாதலால்;
அத்து	—	அந்த ஞானத்தினது
அநுகாரணம் பெற்றால்	—	அனுகரித்தலைப் பெற்றவழியே
அறிதலால்	—	கடவடிவும் படவடிவுமாய் அறிவு நிகழ்தலால்;
அவற்றை	—	கடம் படம் முதலிய வடிவங்களை

மாயை	—	அஞ்ஞானமாகிய மயக்கம்
உய்த்திடும் அதனால்	—	வடிவம் அற்ற ஞானத்திற்கு உண்டாக்குவதனால்;
மாயைக்கு	—	உலகத்திற்கு முதற்காரணம் எனப் பிறர்கூறும் மாயை என்னும் தத்துவம் உண்மைக்கு
உணர்வு	—	உணர்தற்கு ஏதுவாகிய சான்று
இல்லையென்றே	—	எதுவும் கிடையாது என்று வலியுறுத்தியே
வைத்திடும் அதனால்	—	எங்கள் சமய நூலாகிய பிடகாகமம் கூறிவைத்திருப்பதனால்
எல்லாம் வருவிப்பான்	—	உலகப் பொருள்களின் வடிவங்களையெல்லாம் தோற்றுவிக்க
வேண்டும்	—	அப்புத்தியாகிய ஞானத்தையே விரும்புவான்
ஒருவன்	—	ஒப்பற்ற எங்கள் புத்தக் கடவுள்.

புத்த சமயக் கொள்கைக்கு ஏற்பப்பொருள் கொண்ட இவ்வுரையில் 'புத்தி-மற்காரியம்-அத்து-அனுகரணம்' முதலிய தொடர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் பொருள், நுனித்து நோக்கி மகிழத்தக்கது.

சாங்கிய மதம்:

இனி இச்செய்யுளுக்குச் சாங்கிய மதத்திற்கு ஏற்பவும் பொருள் கொள்ளக்கூடும். நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாம்சை வேதாந்தம் என்பவை, அறுவகைச் சமயம் (ஷட் தரிசனம்) என வழங்கப்படும். சாங்கிய மதக் கொள்கையை விளக்கியவர் கபிலர் என்னும் முனிவர். உலகத்தைப் பகுத்தறிந்து 25 என்னும் சங்கியைக்குள் அடக்கியதனால் இதற்குச் சாங்கியம் என்னும் பெயர் அமைந்தது. ஆகாயத்தில் இருந்தே ஏனைய நான்கு பூதங்களும் தோன்றின. ஆகாயத்திற்குச் சலனமும் வேறுபாடும் இல்லை. அதுபோல விகாரமும் பற்றும் அற்று ஞானமாத்திரையாய் நிற்பது புருடன் என்னும் தத்துவம். புத்திதத்துவம் என்பது ஒன்றன் காரியமே. புத்தியின் காரியம் ஆகிய தனுகரணங்களை முன்னிலையில் இருத்தல் ஆகிய சம்பந்தத்தாற் பெற்றவழியே, புருடன் என்னும் தத்துவத்திற்கு அறிவு ஏற்படும். புத்தி முதலிய தத்துவங்கள் பிரகிருதிமாயையில் இருந்து தோன்றுகின்றன. பிரகிருதிமாயைக்குக் கிரியையுண்டு, ஆனால் ஞானம் இல்லை. பிரபஞ்சத்தின் தோற்றத்திற்குப் பிரகிருதி மாயை மூல காரணம். புத்தி தத்துவத்திற்கும், மூலப் பிரகிருதிக்கும் சுதந்தர அறிவு இல்லை என்பது சாங்கிய மதக் கொள்கை. இதற்கு இயையுமாறும் இச்செய்யுளுக்குப் பொருள் கொள்ளலாம்.

புத்தி	—	புத்தி தத்துவமானது
மன்	—	(இடைச் சொல்)
காரியத்தால்	—	ஒன்றன் காரியம் ஆதலினால்,
பூதாதி	—	ஐம்பூதங்களுள் தோற்ற முறையில் முற்பட்டதாகிய ஆகாயம் (போல),
புருடன்தானும்	—	விகாரமின்றி ஒட்டற்று ஞானமாத்திரையாய் நிற்கும் அந்தப் புருடதத்துமும்
அத் தனுகரணம் பெற்றால்	—	அந்தப் புத்தியின் காரியமாகிய தநுகாணங்களைச் சந்நிதி மாத்திரமாகிய சம்பந்தத்தாற் பெற்றவழியே
அறிதலால்	—	அறியும் திறனை அடையும் ஆதலால்
அவற்றை	—	அந்த 'மகத்' என்பன முதலாகிய தத்துவப் பிரபஞ்சங்கள்
	—	அனைத்தையும்
மாயை	—	மூலப்பகுதி என்னும் பிரகிருதி மாயைக்கு
உய்த்திடும்அதனால்	—	தோற்றுவிக்கும் ஆதலால்
மாயைக்கு	—	அந்தப் பிரகிருதி மாயைக்கு
உணர்வுஒன்றும்	—	ஞானம் கிரியை என்னும் இரண்டினும் ஞானம்ஆகிய ஒன்று மட்டுமே
இல்லை	—	கிடையாது
என்றே	—	என்றுகூறியே
வைத்திடும் அதனால்	—	சாங்கிய மதத்துக்குரிய நூல்கள் வரையறை செய்து வைத்திருப்பதனால்
எல்லாம்	—	'மகத்' என்னும் தத்துவம் முதலிய பிரபஞ்சம் அனைத்தையும்

வருவிப்பான்	—	தோற்றுவித்தற் பொருட்டு
வேண்டும்	—	பிரகிருதி மாயையையே விரும்புவான்
ஒருவன்	—	ஒப்பற்ற எங்கள் கபில முனிவன்.

சாங்கிய மதக் கொள்கையின்படி செய்யப்பட்ட இவ்வுரையில் புத்தி-மன்-பூதாதி-புருடன்-மாயை-உணர்வு-ஒன்றும் என்னும் தொடர்களுக்குக் கூறப்பெற்ற பொருட்டிறம் கருதியுணரற்பாலது.

முடிவுரை :

ஆசிரியர் சிவஞான சுவாமிகள், இங்ஙனம் ஒரு செய்யுட்கே பல சமயக் கொள்கைகட்கு ஏற்ப, முறைப்படி பொருள் விரித்து விளக்கிக் காட்டியருளிய திறம், அவர்தம் அரியபெரிய நுண்மாண் நுழைபுலமை நலத்தற்குச் சிறந்த இனிய எடுத்துக் காட்டாகும்: தமது புலமைப் பெருந்திறத்தால், இங்ஙனம் சுவாமிகள் பொருளுரைத்துக் காட்டினராயினும்,

"எந்நூற்கும் உபக்கிரமம் (தொடக்கம்), உபசங்காரம் (முடிவு), அப்பியாசம் (நூலிற் பெரிதும் பயின்று வரும் தன்மை), அபூர்வதை (பிற நூல்களிற் கூறப்பெறாத சிறந்த பொருளாதல்), அருத்தவாதம் (புனைந்துரை வகையாற் சிறந்த பொருளை யுணர்த்துதல்), உபபத்தி (அறிவிற்கு மிகவும் பொருந்துதல்), முதலிய பலவகை நெறிமுறைக் கருவிகளைக் கொண்டு, அவற்றுக்கு விரோதம் வராதபடியே வியாக்கியானம் பண்ணல் வேண்டும் என்பது, சகலமத சம்மதம். ஆதலின், அது செய்தலை ஒழித்துத் தாம்தாம் கருதும் பிரயோசனங்களுக்கு இணங்க வியாக்கியானம் செய்தல் கூடாது"

என்பது, சிவஞான சுவாமிகள் வலியுறுத்தி அறிவுறுத்தும் சிறந்த கருத்தாகும்.

இங்ஙனம் நூல்களுக்குப் பொருள் விளக்கி உரை வரையும் திறத்தினைச் செவ்விதில் தெளிவுறுத்தி யருளிய சிவஞான சுவாமிகளின் சிறப்பினை, அறிந்து அளவிட்டுரைத்தல் நம்மனோர்க்கு இயலுமோ ! "ஆர் அறிவார் இந்த அகலமும் நீளமும்" எனத் திருமூலர் அருளிச் செய்ததற்கு ஏற்ப, நமது அருமைத் தமிழ் மொழியின் ஆழமும் அகலமும் அறிய விரும்புவோர் அனைவரும், சிவஞான சுவாமிகள் போன்ற நுண்மாண் நுழைபுலம் மிக்க செந்தமிழ்ப் பெருஞ் சான்றோர்களின் சிறந்த நூல்களைப் பயின்றினிது பயன்கொண்டு உய்ய முற்படுவார்களாக !

— ஆசிரியர்



துணை ஆணையர் உரை ஆற்றுதல்.

திருவிடைமருதூர்

திருமுறைக் கருத்தரங்கச் சிறப்புரை

செந்தமிழ்ச் செல்வர், வாகீச கலாநிதி

திரு. கி. வா. ஜகந்நாதன், M.A., அவர்கள்

திருமுறைக் கருத்தரங்கு பன்னிரண்டு திருமுறைகளையும் ஆராய்ந்து பொதுவான நிலையிலே சென்ற ஆண்டு நிரம்பி, இன்று தொடங்கிச் சிறப்பான முறையில் முதல் மூன்று திருமுறைகளைப்பற்றி ஆராயப் போகின்றது.

திருமுறை என்ற தொடருக்குத் தெய்வத் தன்மை வாய்ந்த நூல் என்பது பொருள். முறை என்பதற்குப் பலவகையான பொருள்கள் இருந்தாலும் திருமுறை என்னும் போது அச் சொல் நூல் என்பதையே சுட்டுகிறது. கந்த புராணத்தில் கச்சியப்ப சிவாசாரியார் அவை யடக்கத்தில் இந்தச் சொல்லை ஆளுகிறார், 'ஆறுமுகம் உடைய ஓர் அமலன் மாக்கதையை நான் சொல்ல முன் வருகிறேன், அதற்குரிய தகுதி என்னிடம் இல்லை. ஆயினும் நான் இதைச் சொல்ல வருகிறேன். இது எவ்வாறு இருக்கிறதென்றால் — ' என்று தொடங்கி ஓர் உவமையைச் சொல்கிறார்.

பழைய காலத்து வழக்கம் ஒன்றை அவர் சொல்கிறார். பள்ளிக்கூடத்தில் படிக்கும் இளையமாணுக்கர்களுக்கு அப்போதெல்லாம் சிலேட்டுக் கிடையாது; காகிதம் கிடையாது, மணலைப்பரப்பி அதன்மேல், ''அ, ஆ'' என்று எழுதுவார்கள். அரிச்சுவடி பயிலும் போது மணலில் எழுதிப்பழகுவது வழக்கம். ஓர் இளைய பாலகன் அ, ஆ, என்ற எழுத்துக்களை மணலில் எழுதத் தொடங்குவதற்கு முன்பே, ''நான் ஒரு நூலையே எழுதப் போகிறேன்'' என்றால் எப்படி இருக்கும்; அந்தப் பிள்ளையைப் போல இருக்கிறது நான் செய்யப் புகுந்த காரியம்'' என்று கந்தபுராண ஆசிரியர் சொல்கிறார்.

அந்தக் காலத்தில் அப்படிச் சொல்கிறவர் இல்லை நன்ருகப் படித்தவர்களே நூலை எழுது வார்கள். இப்பொழுதோ படிப்பது நான்கு பக்கமானால் எழுதுவது நானூறு பக்கமாக இருக்கிறது. இந்தக்காலத்தில் அப்படிச் சொல் கிறவர்கள் இருப்பார்கள் என்பதை அந்தக் காலத்தில் அவர் அறிந்திருப்பாரா? ஆகையால் நடக்காத காரியம் ஒன்றைச் சொல்வது போல அவர் சொல்கிறார்.

''இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன் முறைவரை வேனென முயல்வ தொக்குமால்'' என்பது அவர்பாட்டு, ''சிறிதளவு தரையில் எழுதுவதற்குமுன்னாலே படிக்கப்புகுந்த இளம் பிள்ளை, நான் நூலை எழுதுவேனென முயல் வதற்கு ஒப்பாகும்'' என்பது பொருள், இங்கே முறை என்ற சொல்லை நூல் என்ற பொருளில் அமைத்திருக்கிறார்.

மனிதனுடைய வாழ்க்கையை உயர்த்து வதற்காக அமைந்தது நூல். மனத்திலுள்ள மாசுகள், கோணல்கள் அகன்றால் வாழ்க்கை உயரும்; ''மனக் கோட்டம் தீர்க்கும் நூல்'' என்பார்கள், ஆகவே நம்முடைய மனக் கோணல்களைத் தீர்க்கும் நூல் திருமுறை.

சிறந்ததாக உள்ள பொருளுக்கு அடை வேண்டியதில்லை, ஈசுவரன் என்றால் எந்த ஈசுவரன் என்று கேட்கவேண்டியதில்லை, அது சிவ பெருமானைத்தான் குறிக்கும். பூ என்றால் தாமரைப் பூவையே குறிக்கும். பலவகையான பூக்கள் இருந்தாலும் இன்னது என்று தெரிவதற்குரிய அடையாளம் இல்லாமல் பூ என்று சொன்னால் எல்லாப்பூக்களிலும் சிறந்த தாமரைப் பூவையே குறிக்கும், ''பூ வெனப்

படுவது பொறி வாழ் பூவே" என்பார் சிவப் பிரகாசர், அதுபோல வேறு எந்த அடையும் இல்லாமல், இன்னநூல் என்று தனி அடை யாளம் சேர்க்காமல் நூல் என்று ஒன்றைச் சொல்லும் பழக்கம் இருந்தால் அது எல்லா நூல் களிலும் சிறந்தது என்று தெரியவரும். முறை என்பது நூல்கள் எல்லாவற்றிற்கும் பொதுவான பெயராக இருந்தாலும் திருமுறை என்று தேவாரம் முதலியவற்றைக் குறிப்பிடுவதால் எல்லா நூல்களிலும் அவை சிறந்தவை என்பதை அறியலாம். திரு என்பது இன்னநூல் என்று இனம்கண்டு கொள்ள வைத்த அடையன்று; பூகோள நூல், வரலாற்றுநூல், இலக்கணநூல் என்று சொல்லுகின்றவை போன்றது அன்று. திரு என்பது தெய்வத் தன்மையைச் சுட்டுவது, தெய்வத்தன்மை வாய்ந்த நூலாதலின் திருமுறை என்று சொல் கிருர்கள். உயர்ந்த பொருள்களைப் பீடத்தில் வைப்பது போலத் தெய்வத் தன்மையுடைய வற்றைச் சுட்டும் சொற்களில் திரு என்ற பீடம் போன்ற அடையைச் சேர்த்துச் சொல்வது இந்த நாட்டு வழக்கம்; திருக்கோயில், திரு விழா, திருவாபரணம் என்பவற்றைப் போல.

திரு என்பதற்கு லக்ஷ்மிகரம், கண்டவர்கள் விரும்பும் அழகு என்று வேறு பல பொருள்கள் உண்டு. என்ருலும் திருமுறை என்னும் போது, தெய்வத்தன்மையை உடையது என்பதைக் குறிக்கவந்ததாகக் கொள்வதே சிறப்பு.

மனிதர்கள் கற்கவேண்டிய நூல்களில் தலையாயது என்பதை உணர்த்தவே முறை என்ற பெயர் வந்தது. விவிலிய வேதத்தை The Bible என்று சொல்கிருர்கள். பைபிள் என்பதற்கும் நூல் என்றுதான் பொருள். தமிழ் வேதமாகிய திருமுறைகள் மனிதனுடைய உய்வுக்கு வழிகாட்டும் சிறந்த நூல்கள்.

திருமுறைகள் பன்னிரண்டு, வானத்தில் தோன்றுகின்ற சூரியனுக்குப் பன்னிரண்டு மாதங்களிலும் பன்னிரண்டு பெயர்கள் சொல்லு வார்கள். அதனுல் கதிரவர் பன்னிருவர், துவாதசாதித்தியர் என்ற வழக்கு உண்டாயிற்று. அந்தப் பன்னிரண்டு ஆதித்தியர்களும் புறத்திலே உள்ள இருட்டைப் போக்குபவர்கள். வான சூரியர்கள் போக்கும் இருள் புற இருள், பன்னிரண்டு திருமுறைகளோ ஞான சூரியர்களாக விளங்கி அக இருளாகிய அறியாமையைப் போக்கும்.

பன்னிரண்டு திருமுறைகளையும் பாடிய அருளாளர்கள் இருபத்தேழு பேர்கள். பன்னிரண்டு ராசிகளில் இருபத்தேழு நட்சத்திரங்கள் இருக்கின்றன. ஒளிவீசும் நட்சத்திரங்களாகிய இருபத்தேழு பேரின் திரு வாக்கைப் பன்னிரண்டு இராசிகளைப் போன்ற பன்னிரண்டு திருமுறைகளில் காணலாம்.

தேவாரம் :

சப்த கோடி மகாமந்திரங்கள் என்பது ஒரு கணக்கு, முடிவாக வரும் மந்திரங்கள் ஏழு; சுவாகா, என்பது போன்றவை. அப்படி இந்தப் பன்னிரண்டு திருமுறைகளில் முதல் ஏழும் ஒரு சிறப்பான தொகுதி. அவற்றையே தேவாரம் என்று வழங்குவர், அவற்றை அடங்கல் முறை என்றும் சொல்வதுண்டு. திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் மூவரும் பாடியவை அவை; ஆதலால் அவற்றை மூவர் தமிழ் என்றும் சொல்வர்; ஔவையார் ஒரு பாட்டில் தேவாரத்தை மூவர் தமிழ் என்றே சொல்கிருர்.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம் என் றுணர்"

என்னும் பாட்டில் "மூவர் தமிழ்" என்று வருகிறது.

தேவாரம் என்ற சொல் எப்போது வழங்கத் தொடங்கியது என்று தெரியவில்லை. கி. பி. 1060-ஆம் ஆண்டில் தோன்றிய கல்வெட்டு ஒன்றில், "தேவாரத்துக்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் அம்பலத்தாடி திருநாவுக் கரையன்" என்ற பகுதி இருக்கிறது, சீகாழியில் 1245-ஆம் ஆண்டில் வெட்டிய சாசனம் ஒன்றில், "திருமுறைத் தேவாரச் செல்வன் திருமடம்" என்ற ஒருமடம் இருந்த செய்தி வருகிறது, தேவாரத்தைத் திருப்பதியம் என்றே பலகல் வெட்டுக்களில் குறிக்கிருர்கள். இராசேந்திர சோழன் காலத்தில் நாற்பத் தொன்பது பேர் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் திருப்பதியம் ஓதியதாக ஒருகல் வெட்டுச் சொல்கிறது. பதியம் என்பது பிற்காலத்தில் பதிகம் என்று வழங்குகிறது. சேக்கிழார் அச்சொல்லை ஆளுகிருர், பதியம் என்பது பாட்டு என்ற பொருளையுடைய வட சொல்லாகிய பத்யம் என்பதிலிருந்து வந்த தாகச்சிலர் சொல்வர், பதிகம் என்ற சொல்லுக்குப் பாயிரம், வரலாறு, முகவுரை என்ற

பொருள்கள் உண்டு, பதிற்றுப்பத்திலும் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் பதிகங்கள் உண்டு, பலவற்றைத் தொகுத்துச் சொல்லும் ஒரு பாடலுக்கே பதிகம் என்ற பெயர் வழங்கியது. இப்போதோ பத்துப்பாடல்கள் அடங்கியதுதியைப் பதிகம் என்கிறார்கள. தேவாரப் பதிகங்கள் பெரும்பாலும் பப்பத்துப் பாடல்களே அடங்கியனவாக இருக்கின்றன.

இந்த வழக்கை முதல் முதலில் பதினோராந் திருமுறையில் பார்க்கிறோம். காரைக் காலம்மையார் பாடிய பத்துப்பாடல்களை உடைய ஒரு தொகுதிக்கு 'மூத்த திருப்பதிகம்' என்ற பெயர் அமைந்திருக்கிறது, முதல் முதலாகப்பதிகம் என்ற வடிவில் அமைந்தது அதுவாக இருக்கலாம், தொன்மையான பதிகம் என்பதைக் குறிக்கவே மூத்த திருப்டதிகம் என்ற பெயர் அமைந்திருக்க வேண்டும். மூத்த என்பது எல்லாவற்றிற்கும் முந்திய என்று பொருள் கொள்ளும்படி இருக்கிறது. ஆகவே பதிகம் என்ற மாபை உண்டாக்கியவர் காரைக்காலம்மையார் என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது.

தேவாரம் என்பதற்குப் பல விதமாகப் பொருள் சொல்வதுண்டு. தே வாரம் என்று பிரித்துத் தெய்வத்தின்பால் அன்பு கொண்டு பாடியது என்பது ஒரு பொருள்; வாரம்-அன்பு. தே ஆரம் என்று பிரித்துத் தெய்வத்துக்கு மாலை போன்றது என்றும் சொல்வதுண்டு. ஆனால் பழைய மரபை ஆராய்ந்தால் தே வாரம் என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது. "வாரம் பாடலும்" என்று சிலப்பதிகாரத்தில் வருகின்றது. வாரம் என்பதற்குச் சிலப்பதிகார அரும்பதவுரை ஆசிரியர், 'சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் உடைய பாட்டு' என்று பொருள் எழுதுகிறார், வேறு ஓரிடத்தில் தெய்வப்பாடல் என்று உரைகூறுகிறார். இசைப் பாட்டு வடிவமாகிய உரு அல்லது உருப்படி என்று அடியார்க்கு நல்லார் எழுதுவார். அவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது. சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் உடையது, இசைக்குரிய உருப்படிகளில் ஒன்று. தெய்வத்தைப்பாடும் பாடல், தாள அமைப்போடு கூடியது என்று கொள்ளலாம். தே வாரம் என்பதற்குத் தெய்வத்தைப்பாடும் இசைப்பாட்டு என்று பொருள் கொள்ள வேண்டும். பழங்காலத்தல் தெய்வத்தைப் பாடும் பாடலைத் தேவபாணி என்று வழங்கினர்; சிறு தேவபாணி. பெருந் தேவபாணி என்று இருவகைகள் இருந்தன. தேவபாணியைப் போலத் தேவாரம் என்பதும் தெய்வத்தைப்பாடும் இசைப்பாடல் என்று கொள்வதே பொருத்தம்.

திருமுறைகளின் அடைவு:

இராசராச சோழனுடைய காலத்துக்கு முன்பே திருப்பதியம் கோயிலில் ஓதியபழக்கம் இருந்த தென்பதைப் பழைய கல்வெட்டுக்களால் அறியலாம், அங்கங்கே மக்கள் தேவாரப் பாடல்களைப் பாடிவந்தார்கள். வரன்முறையாகப் பாடவில்லை. தேவாரம் முழுவதையும் பாடவில்லை. அவற்றைக் கேட்ட இராசராச சோழன், முழுவதும் கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணினான். திருநாரையூர் என்ற தலத்தில் பொல்லாப் பிள்ளையாரை வழிபட்டுப்பல அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருந்த நம்பியாண்டார் நம்பிகளை அரசன் அணுகித்தன் குறையைச் சொன்னான், நம்பிகள் விநாயகர் அருளால் சிதம்பரத்தில் அவை நிலத்தின் கீழ்ப்புதையுண்டு கிடப்பதை அறிந்தார். அரசனுடைய முயற்சியில் அவை எடுக்கப்பட்டன. கறையான் புற்று மூடியிருந்த குவையை எடுத்துக்கறையான் அரித்தவைபோகஎஞ்சியவற்றை எடுத்து நம்பியாண்டார் நம்பிகளை வகைப்படுத்தச் சொன்னான், அவர் பதினொரு திருமுறைகளாக வகுத்தார், அரசனுடைய வேண்டுகோளின்படி நம்பியாண்டார் நம்பிகளின் பாடல்களும் பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பெற்றன. பதினோராம் திருமுறை என்ற பெயரே அதற்குமுன் பத்துத் திருமுறைகள் உண்டு என்பதையும், திருமுறை என்ற பெயர் இவற்றிற்கு உரியது என்பதையும் புலப்படுத்தும், பிற்காலத்தில் இரண்டாம் குலோத்துங்க சோழனுடைய வேண்டுகோளின்படி சேக்கிழார் அருளிய பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறையாகச் சேர்க்கப் பெற்றது. ஞானசம்பந்தர் தேவாரம் முதல் மூன்று திருமுறைகள் : அப்பர் தேவாரம் அடுத்த மூன்று திருமுறைகள்; ஏழாவது திருமுறை சுந்தரர் தேவாரம், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறை, திருமாளிகைத் தேவர் முதலியவர்கள் பாடிய திருவிசைப்பா ஒன்பதாவது திருமுறை, திருமூலர் பாடிய திருமந்திரம் பத்தாந் திருமுறை. ஆலவாய் இறைவன் பாடிய திருமுகப்பாசுரம் முதல் நம்பியாண்டாண்டார் நம்பிகள் பாடிய திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை வரை உள்ள பாடல்களின் தொகுப்புப் பதினோராந் திருமுறை; சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாந் திருமுறை.

இந்தத் திருமுறைகளின் அடைவுக்கு, என்ன காரணம்? கால முறைப்படி வகுத்தார்கள் என்றுசொல்வதற்கில்லை. திருமூலர், காரைக் காலம்மையார் ஆகியவர்கள் எல்லாம், சுந்தரர் காலத்துக்கும் முந்தியவர்கள். அவர்கள் பாடல்கள் தேவாரத்துக்குப்பின் வருகின்றன. சங்க காலத்து நூலாகிய திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் மிகப் பழையவர். அவர் நூல் பதினோராந் திருமுறையில் வருகிறது. ஆகவே கால அடைவின்படி வகுத்ததாகச் சொல்ல முடியாது. வேறு ஏதேனும் காரணம் இருக்குமா ஒன்று ஆராய்ந்து பார்த்தேன், சிறியேனுக்கு ஒன்று தோன்றியது. —(தொடரும்)

திருக்கோயில் 14-ஆம் ஆண்டில் வெளிவந்த
கட்டுரைகளின் பட்டியல்
(1971 அக்டோபர் முதல் 1972 செப்டம்பர் வரை)

ஆசிரியர் ந. ரா. முருகவேள்,

பக்கம்
எண். தலைப்புகள் 409
1 அப்பரைப்பற்றிய ஓர் ஆய்வுரை 418
2 அப்பர் தமிழ்நாட்டுத் தந்தை- கவிதை 118
3 அன்பின் வணங்கிப் போற்றுகின்றேன்-கவிதை
(தருமையாதீனத் தலைவர் குருபூசை) 169
4 ஆழ்வார்கள் வரலாறு 91
5 இராசராசனின் இணையற்ற தியாகம் 465
6 இணையில் பெரும் நம் கலைஞர் நீடூழி வாழ்க - கவிதை (பிறந்தநாள் விழா வாழ்த்து) 233
7 உயிரின் இயல்பு 553
8 கச்சியப்ப முனிவர் கவிநலம் 465
9 சமயம் எனும் சொல் 81
10 சமயச் சான்றோர்களின் தமிழ்ப்பற்று 505
11 சம்பந்தர் பதிகங்களும் சேக்கிழார் விளக்கங்களும் 127
12 சங்கும் சங்கபிடேகமும் 457
13 சங்கநூல்களில் சமயம் 590
14 சிவஞானசுவாமிகளின் நுண்மாண் நுழைபுலன் 145
15 சிவபெருமானின் திருவுருவங்கள் 121
16 சிலப்பதிகாரம் காட்டும் தெய்வச்செந்நெறி 366
17 சிறந்தோங்கி வளர்க நன்றே - கவிதை (இராசராசன் விழா) 486
18 செம்மைத்தமிழின் சிறப்பு - கவிதை 265
19 சேக்கிழாரடிகளும் இளங்கோவடிகளும் 10
20 தமிழ் அருச்சனை 486
21 தமிழின் தனிச்சிறப்புகள் - கவிதை 481
22 தமிழ்மொழிச் சிறப்பு 1
23 தமிழ்ஞான சம்பந்தர் 361
24 தஞ்சைப் பெரியகோயில் 23
25 திருமாலின் ஐந்து நிலைகள் 49
26 திருமுறைகளில் திருமுருகன் 240
27 திருப்பாவையில் திருக்குறள் 313
28 திருவள்ளுவர் மாட்சி 489
29 திருவாசகமணியின் சீரியதொண்டு 398
30 திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பு 97
31 திருவருணைக் கலம்பகம் 502
32 திரிசூலநாதர் திருக்கோயில் 18
33 தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலை (உரை)
57, 137, 303, 335, 428
27
34 நம்பெருமாள் திருவுருவம் 28
35 நவராத்திரிவிழாத் திருப்பதிகம் - உரை 217
37 பக்திநெறியும் பாவைப்பாடலும் 25
38 பிராட்டியின் பிரிவும் பரிவும் 65
39 பிள்ளையுலகாசிரியர் 189, 251, 334, 435, 525, 534
40 மதிப்புரைகள் 578
41 மயிலேறும் இராவுத்தன் 294
42 வாழ்முதலாகிய பொருள்

பிற அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள்

அண்ணங்கராச்சாரியர் பி. ப. 576
1 எம்பெருமானும் யானையும் 68
2 வடக்குத் திருவீதிப்பிள்ளை வைபவம் 472
3 வைணவத்தின் சிறப்பு
அறநிலைய அமைச்சர் 333
1 அறநிலையச் சட்ட நிர்வாகம் 515
2 அறநிலையத்துறை ஆற்றும் அரும்பணிகள்

3 தமிழருச்சனை 74
4 தருமைக் குருபூசை விழா (சிறப்புச்செய்தி) 110
5 திருப்பணி செய்வதன் சிறப்பு 421
6 வடலூர்ச் சத்திய ஞானசபை நூற்றாண்டு விழா வாழ்த்துரை 277

அறநிலைய ஆணையர்
1 அடியார் பெருமை 156
2 அறநிலையத்துறைச் சுற்றறிக்கைகள் 345
3 இணையற்ற பெருவேந்தன் இராசராசன் 367
4 ஐப்பசிச் சதய விழா 90
5 தமிழர் திருநாள் 223
6 தருமைக் குருபூசை விழா (சிறப்புச்செய்தி) 111
7 தவத்திரு அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் 466
8 திருநாவுக்கரசரின் திருப்பாடல்கள் 419
9 திருவருட்பிரகாச வள்ளலாரும் திருவருட்பாவும் 320
10 திருவாசகத்தின் சிறப்பு 513
11 திருவாவடுதுறைக் குடமுழுக்கு விழா (வாழ்த்துச்செய்தி) 558
12 தில்லைக்கோயில் குடமுழுக்கு விழா (வாழ்த்துச்செய்தி) 279
13 நவராத்திரி விழா 7

இராமசாமி அடிகளார் (தவத்திரு)
1 அன்பு அஞ்சலி - கவிதை 115
2 கல்வெட்டும் சமயநெறியும் 403
3 மூவர் தேவாரம் 180

இராய. சொ. (தமிழ்க்கடல்).
1 அம்பிகை வணக்கம் 263
2 சிவ வணக்கம் 261
3 திருமால் வணக்கம் 253
4 முருகன் வணக்கம் 143
5 விநாயகர் வணக்கம் 144

கணபதி ஸ்தபதி, வை.
1 படிமக்கலை 436
2 படிமத்திருக்கோலங்கள் 306

கலைஞர் திரு. டாகடர் கருணாநிதி.
1 இராசராசன் மாட்சி 369
2 இளங்கோவடிகள் சிலைத்திறப்பு விழா (பேருரை) 105
3 வள்ளலார் விழாப் பேருரை 61
4 தூயதோமையர் விழாச்சிறப்புரை 391

கிருபானந்தவாரியார்
1 ஆறுபடை வீடுகள் 535
2 மகாபாரதம் 70

குன்றக்குடி அடிகளார் (தவத்திரு)
1 அழைப்பை நோக்கி - கவிதை 112
2 எழுஞாயிறன்ன இராசராசன் 376
3 கடவுளியல் விளக்கும் காட்சி 387
4 நால்வர் தமிழ் 226, 330
5 புண்ணியன் நாமம் 470
6 குமரகுருபரர் மரபு வாழ்க 471

கோவிந்தராசனார், சி.
1. இராசராசன் குடிதழுவிக் கோலோச்சியவன் 370
2. கண்ணகிக் கோட்டம் 93
3. சிற்றம்பலத்தின் சிறப்பு 441

சிவஞானகிராமணியார், ம. பொ.
1. இராமலிங்கரின் இலக்கியம் 325
2. தமிழர்பேரரசுகண்ட இராசராசன் 377

சுந்தரசுவாமிகள் (தவத்திரு)
1. அப்பர் வரலாற்றில் அறம்–கவிதை 255
2. திருப்புகழ்ப் பெருமை 174
3. திருநாவுக்கரசர் தில்லைக்காட்சி 323
4. தோத்திரப் பதிகங்கள் 116

சுப்புரெட்டியார் (டாக்டர்). 522
1. ஆழ்வார்கள் காணும் முழுமுதற் கடவுள் 572
2. திருமாலின் ஐந்துநிலைகள்
தாத்தாச்சாரியார், என். எஸ். 497
1. செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை 290
2. திருமால் திருவுருவங்கள்
நாவலர் டாக்டர். நெடுஞ்செழியன் 373
1. இராசராசன் சிலை திறப்புவிழா (தலைமையுரை) 108
2. இளங்கோவும் சிலப்பதிகாரமும்
பரிமணம், அ. ம. 285
1. சனிகொள்வோம் 433
2. சிவப்பயிர் செய்வோம்
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் (தவத்திரு) 489
1. அருள் நந்தித் தம்பிரான்சுவாமிகள் வரலாறு 277
2. உள்ளொளி 454
3. சண்டேசுவரர் 251
4. மீனாட்சியம்மை குறம்
வச்சிரவேல் முதலியார், க. 238
1. இயற்கையும் இறைவனும் 238
2. சம்பந்தர் வாய்மொழியில் தத்துவம் 537
3 சைவசித்தாந்தம்
வைத்தியலிங்கம், க. 300
1. கூத்துக்கலையும் தெய்வநலமும் 494
2. பொன்மானும் பொன்மீனும்

148701

தனிக்கட்டுரைகள்

அருணைவடிவேல் முதலியார், சி.	—மணியும் நிழலும்	451
அறிவொளி, புலவர்	—தொகையில் ஒருதொகை	355
இரத்தினசபாபதிபிள்ளை, மா.	—உள்ளுணர்வு	416
இராமகிருஷ்ணன், கே.	—சித்தமருத்துவக் கலையின் சிறப்பு	230
இராசகோபாலன், ரா.	—ஐங்கறியமுது	215
இராசகோபாலாச்சாரியார், எம். எஸ்.	—நாதமுனிகளும் ஆளவந்தாரும்	499
இராமலிங்கனார், கீ.	—வழிபாட்டுக்கு அயல் மொழியா?	202
கணேசன், சா.	—அளவையும் இராசராசனும்	384
கிருஷ்ண சுவாமி ரெட்டியார், என்.	—கருத்தரங்கத் துவக்கப் பேருரை	527
சானகிராமன், சி,	—ஆண்டாள் பெருமை	213
சன்மார்க்கதேசிகர்	—காவிரிக்கோட்டம்	211
சிங்காரவேலன், சொ.	—கவியோகி.	245
சுந்தரமூர்த்தி, கு.	—ஞான நூல்களில் திருமுறைக்-குறிப்புக்கள்	297
சௌந்தராகைலாசம் (திருமதி)	—ஞாயிறு போற்றுதும்	174
திருநாவுக்கரசு க. த.	—சமணமும் தமிழும்	519
திருஞானசம்பந்தம், பெ.	—ஆலய அமைப்புகள்	475
நாகசாமி, இரா.	—கல்வெட்டுக்கள் கூறும் சமய நிலை	478
நாகராச குருக்கள்	—திருமுறை அருச்சனை	170
நாரணதுரைக்கண்ணன்	—இந்திரவிழா	308
பரமசிவானந்தம், அ மு ப.	—தலைசிறந்த தமிழ்ப் பேரரசன்	394
புத்தனேரி ரா. சுப்பிரமணியம்	—இராசராசன் வாழ்த்து (கவிதை)	402
மகாதேவன், கே. எஸ்.	—தமிழில் அறிவியல் கருத்துக்கள்	550
மகாதேவன், டி. எம். பி.	—அத்வைததத்துவம்	542
மகாலிங்கம், ந.	—சன்மார்க்கம்	322
மாணிக்கவாசகம், இரா.	—நான்கில் ஒன்று	348
மாணிக்கவாசகஞான தேசிகர்	—திருவருளும் வேண்டும்	208
முருகேச முதலியார், நல.	—சிறுவரம்பேடு	548
வடிவேற்பிள்ளை, ப.	—தில்லைச் சிவகாமியம்மை	247
வரதராசனர், டாக்டர். மு.	—ஞானப்பெருந் தொண்டர்	425
வெள்ளைவாரணர், க.	—சிவகாமியம்மை திருக்கோயில்	357
வேங்கடராமையா, கே. எம்.	—சத்திநிபாதம்,	164
ஜகந்நாதன், கி. வா.	—திருமுறைப் பேருரை	595



10—8—72 திருமயிலைக் கபாலீச்சுரர் ஆலயத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. V. V. கிரி அவர்கள் பிறந்த நாளையொட்டி மேன்மைதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்களும், திருமதி மதுபென்ஷா அவர்களும், கோயிலுக்கு வருகை தந்த போது அறங்காவலர்கள், திரு. C. செல்வ நடராசமுதலியார், திரு. T. பாலகிருஷ்ணன், திரு S. ஜெயராமன், நிர்வாக அதிகாரி திரு. T. நாகராசன், ஆகியவர்கள் வரவேற்றுச் சிறப்பித்தல்.



திருமயிலைக் கபாலீச்சுரர் கோயிலில், தாமரைத் திருவினர் - சிலம்புச் செல்வர்- திரு. ம பொ சிவஞானம் அவர்கள் துவக்கி வைத்த "பன்னிரு திருமுறை விழாவில், ஆணையர் திரு கே. எஸ். நரசிம்மன். .B. A. B. L. I. A. S. அவர்கள் தலைமையில். துணையாணையர் திரு. ஏ. வேங்கடாசலம், B.Sc., B.L. அவர்கள் முன்னிலையில், "திருக்கோயில்" ஆசிரியர் அவர்கள் உரை நிகழ்த்துதல். (8—8—72).

திருச்செங்கோடு வட்டம், மல்லசமுத்திரம் திரு பெரிய மாரியம்மன் ஆலயத் திருப்பணிக்கு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் அடிக்கல் நாட்டுதல். மதுரை துணை ஆணையர் திரு. எம். எ. முருகேசன் B. A. B. L., அவர்களும், கோவைத் துணை ஆணையர் திரு. எம். சூரியராஜ், B. A. B. L., அவர்களும், உடன் உள்ளனர். (14—5—72).



(1)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn) Dept., Madras-34, Printed at Sivarts Printers. 119, Strahans Road,